BOI
SRI LANKA

# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# 2012


**ශ්‍රී ලංකා ආයෝජන මණ්ඩලය**
ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය

**இலங்கை முதலீட்டுச் சபை**
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

# வருடாந்த அறிக்கை
# 2012

**இலங்கை முதலீட்டுச் சபை**

**பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**

BOI

SRI LANKA

# உள்ளடக்கம்


**தலைவரின் வாழ்த்துச் செய்தி** 04

**இலங்கை முதலீட்டுச் சபை பக்கத்தோற்றம்**

- நோக்கம் மற்றும் பணிகள் 06
- நோக்கு மற்றும் பணிகள் 08
- பணிப்பாளர் சபை 09
- இலங்கை முதலீட்டுச் சபையின் சிரேஷ்ட அதிகாரிகள் 10

**மீளாய்வு** 11

- பிரதான நிகழ்வுகள் மற்றும் விசேட அம்சங்கள் 11
- முதலீடு தொடர்பாக இலங்கையில் எதிர்கால எதிர்பார்ப்புக்கள் 12
- உலக முதலீட்டின் நிலைமை - 2011 16
- முதலீட்டின் செயற்சாதனைகள் 22

**திணைக்களச் செயற்பாட்டு முன்னேற்றங்கள்** 26

- பணிப்பாளர் நாயக செயலக அலுவலகம் 26
- 1வது துறைசார் குழு 26
- 11வது துறைசார் குழு 34
- 111வது துறைசார் குழு 42
- முதலீட்டாளர் சேவைத் திணைக்களம் 47
- சட்டம் சார் உதவிகள் 50
- தொழில்நுட்ப சேவைகள் 51
- ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயங்கள்/IP/EPP 52
- சூழல் முகாமைத்துவம் 53
- பொறியியல் அங்கீகாரம் மற்றும் விசேட செயற்றிட்டங்கள் 55
- கைத்தொழில் உறவுகள் 57
- ஊடகம் மற்றும் பிரச்சாரம் 59
- நிர்வாகம் 61
- பாதுகாப்பு மற்றும் தீயணைப்பு 61
- மானிடவள முகாமைத்துவம் 65
- ஆராய்ச்சி மற்றும் கொள்கை ஆலோசனை 70
- தகவல் தொழில்நுட்பம் 71
- உள்ளகக் கணக்காய்வு 72

**நிதி மீளாய்வு** **74**

- வருமானம் 74
- செயற்பாடுகள், நிர்வாகச் செலவினம் மற்றும் ஏனைய செலவினம் 75
- அரச கட்டணம் மற்றும் நிதிச் செலவினம் 76
- மூலதனச் செலவினம் 76
- 2012 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான வருமான விபரங்கள் 77
- 2012 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான விளக்கமான வருமான வெளிப்பாடுகள் 77
- 2012 டிசம்பர் 31 ஆந் திகதியன்று நிதி நிலைமை வெளிப்பாடுகள் 78
- 2012 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிப்பாய்ச்சல் கூற்று 79
- நிதி வெளிப்பாடுகளுக்கான குறிப்புக்கள் 80

**கணக்காய்வு அறிக்கைகள்** **87**

- கணக்காய்வாளரின் அறிக்கை 87
- கணக்காய்வாளர் அறிக்கை மேற்பார்வை தொடர்பான கருத்துக்கள் 109
- கணக்காய்வுக்குழு அறிக்கை 132

**இணைப்புக்கள்** **134**

- செயற்சாதனை விசேட நிகழ்வுகள் 134
- இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17வது வாசகத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் சுருக்கம் 136
- இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 16வது வாசகத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் சுருக்கம் 137

**முதலீட்டுச் சபை அலுவலக விபரக்கொத்து** **138**

# தலைவரின் வாழ்த்துச் செய்தி



2012 ஆம் ஆண்டு இலங்கை முதலீட்டுச் சபையின் வரலாற்றில் அதிசிறந்த ஆண்டாகக் காணப்பட்டது. முதலீட்டுச் சபையின் வரலாற்றில் இதுவரையில் பெற்றுக்கொண்ட அதியுயரிய நேரடி வெளிநாட்டு முதலீடான 1.34 பில்லியன் அமெரிக்க டொலரினைப் பெற்றுக்கொள்ள முடிந்ததுடன் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் எல்லையினைத் தாண்டிய இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும். நாட்டில் நிலவிய சமாதானத்தின் பிரதிலாபமே இதற்குக் காரணமாகும். நாட்டை அதியுயரிய நிலைக்கு மாற்றியமைக்கக் கூடிய வகையில் புத்தெழுச்சி பெறும் பொருளாதாரத்தினை உருவாக்கும் இயலமைகள் தொடர்பான எதிர்பார்ப்புக்கள் எம்மிடம் நிலை கொண்டுள்ளன.

குறைந்தபட்சம் 2 சதவீதம் அல்லது அதனை விட மேற்பட்ட அளவு மொத்த தேசிய உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்யும் வகையில் நேரடி வெளிநாட்டு முதலீடு பொருளாதாரத்தின் பிரதான உந்துசக்தியாக மாற்றியமைப்பது இலங்கையின் தற்போதைய அவசியத் தேவையாகும்.

ஏற்றுமதிக்காக சம்பிரதாயபூர்வமல்லாத பொருட்களை உற்பத்தி செய்தல், ஏற்றுமதியினை அடிப்படையாகக் கொண்ட சேவை, சுற்றுலா வர்த்தகம் மற்றும் அது சார்ந்த சேவைகள், உட்கட்டமைப்பு வசதிகள், உயர் கல்வி பெறுமதி சேர்க்கப்பட்ட வியூகச் செயற்றிட்டங்கள், கைத்தொழில் பூங்காவன அபிவிருத்தி மற்றும் விசேட பொருளாதார வலய அபிவிருத்தி போன்ற 2010 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்ட முன்னணிச் செயற்பாடுகள் எமது வியூகத்தின் கேந்திரமாகக் காணப்படுகின்றன.

இது எவ்வாறாக இருப்பினும் நீடித்த நிரந்தர நிலைப்பாட்டுக்காக இலங்கையின் பொருளாதாரக் கொள்ளளவினை விருத்தி செய்யக் கூடிய செயற்றிட்டங்களை ஊக்குவிப்பது தொடர்பாகக் கவனஞ் செலுத்த வேண்டியுள்ளது. பிரித்தானியாவின் ஐந்தாவது மிகப்பெரிய பல்கலைக்கழகமான “சென்ரல் லங்செயர் பல்கலைக்கழகம்” மூலம் அப் பல்கலைக்கழகத்தின் கிளை 2012 ஆம் ஆண்டில் மீரிகமையில் ஸ்தாபிக்கத் தீர்மானிக்கப்பட்டமை தொடர்பில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். இப் பல்கலைக்கழகத்தினைப் போன்று உலகப் புகழ்பெற்ற ஏனைய பல்கலைக்கழகங்களினதும் கிளைகளையும் கொழும்பில் ஸ்தாபிக்க இச்செயற்பாடு பயன்மிக்கதாக அமையும்.

இலங்கைக்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி இயலுமைகளை வழங்கக் கூடிய செயற்றிட்டங்களை ஊக்குவிப்பது இலங்கை முதலீட்டுச் சபையின் மற்றுமொரு அவசியத் தேவையாகும். இதற்காக தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சுடன் இணைந்து இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவனம் (SLINTEC) இனால் தாபிக்கப்பட்ட நனோ தொழில்நுட்பப் பூங்கா போன்ற செயற்றிட்டங்கள் மூலம் முன்னர் எப்போதும் இல்லாதவாறான தொழில் வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன. திறமைமிக்க இலங்கையர்களுக்கான தொழில் வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பங்களையும் இதன் மூலம் உருவாக்க முடிவதுடன் தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பாரிய பிரச்சினையான புத்திஜீவிகளின் வெளியேற்றத்தினை ஓரளவு இதன் மூலம் குறைக்கவும் சந்தர்ப்பம் கிடைக்கும்.

நாட்டு மக்களுக்கு பயன்களை வழங்குவதற்காக நேரடி வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சலை தொடர்ந்தும் விருத்தி செய்வது அவசியம் என அரச தரப்பினர் புரிந்து கொள்வதும் இதற்குச் சமமான மிக முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும்.

இதனால் 2012 ஆம் ஆண்டில் நாட்டின் ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்காக பல முக்கிய செயற்பாடுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

அம்பாந்தோட்டை மிரிஜிவில பிரதேசத்தில் 228 ஹெக்டயர் நிலப்பரப்பில் மிரிஜ்ஜவில ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயம் (Mirijjawila EPZ) ஸ்தாபிப்பதற்கான பணிகள் கடந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வலயம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு மற்றும் மத்தள விமான நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளமையினால் இவ்வலயத்தின் மூலம் பல்வேறுபட்ட பயன்களைப் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. இது வாகன உதிரிப் பாகங்களை இணைக்கும் தொழிற்சாலைக்கும் விநியோக மத்திய நிலையத்திற்கும், கப்பல்களைப் பழுதுபார்க்கும் பணிகளுக்கும் மிக முக்கியத்துவம் வாய்ந்து பொருத்தமானதாக அமைந்துள்ளது.

2012 ஆம் ஆண்டில் சூரியவெவ முதலீட்டு வலயத்தில் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. தகவல் தொழில்நுட்பப் பூங்கா, கல்வி நிறுவகம், விளையாட்டு நகரங்கள், வதிவிடப் பிரதேசங்கள் மற்றும் கலப்பு அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக இதன் மூலம் சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. திருகோணமலைக்கு அண்மையில் சம்பூர் பிரதேசத்தில் உலோகக் கைத்தொழில் வலயத்தைத் ஸ்தாபிக்கும் செயற்றிட்டத்திற்கு 2012 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட மற்றுமொரு மிக முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாடாகும். இவ்வலயத்தின் செயற்பாட்டுப் பணிகளை நிதியாக்கம், திட்டமிடல், நிர்மாணம் மற்றும் பராமரிப்புக்கள் தொடர்பான பொறுப்புக்களைக் கொண்ட முதலீட்டாளரினால் இவ்வலயத்தின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2012 ஆம் ஆண்டில் இப்புதிய வலத்தினைத் தாபிப்பதற்கு மேலதிகமாக 721 மில்லியன் ரூபா மொத்த முதலீட்டினை மேற்கொண்டு தற்போது காணப்படும் வலயங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை நவீன மயப்படுதல் மற்றும் விருத்தி செய்வதற்கான பணிகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டில் பிரதான வர்த்தக் கண்காட்சியில் பங்கேற்பதன் மூலம் இலங்கை முதலீட்டுச் சபைக்கு அதன் பிரதிரூபத்தினை அதியுயரிய மட்டத்திற்கு மேம்படுத்த முடிந்தது.

முதலீடுகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள உதவுவதனைப் போன்று தொழிலை எதிர்பார்க்கும் தொழிலைப் பெற்றுக்கொள்ள உதவும் வகையில் தொழில் வங்கிக் கருமபீடமும் ஸ்தாபிக்கப்பட்டிருந்த தேசத்துக்கு மகுட தேசிய கண்காட்சியில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மண்டபத்தில் இலங்கை முதலீட்டுச் சபையினால் கண்காட்சிக் கூடம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. மூன்று தசாப்தங்களுக்குப் பின்னர் யாழ் குடா நாட்டில் நடாத்தப்பட்ட முதலாவது வர்த்தகக் கண்காட்சியான "யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி" இற்காக இலங்கை முதலீட்டுச் சபை பங்கேற்றது. நிலையான மின்சக்தி தொடர்பான நாட்டின் பிரதான கண்காட்சியான "விதுல்கா 2012" கண்காட்சியினைப் போன்று இலங்கையின் மிகப் பெரிய வர்த்தகக் கண்காட்சியான "எக்ஸ்போ 2012" கண்காட்சிக்காகவும் இலங்கை முதலீட்டுச் சபை பங்கேற்றது.

இதனால் கடந்த 2012 ஆம் ஆண்டு முதலீட்டு ஊக்குவிப்பு தொடர்பில் மிக முக்கியத்துவம் வாய்ந்த பணிகளை மேற்கொண்ட ஆண்டாகும். முதலீட்டாளர்களுக்காக இலங்கயின் பொருத்தமான நிலை மற்றும் கவர்ச்சிமிக்க சூழலை உருவாக்குவதற்கான அடித்தளத்தினை இட்ட ஆண்டாக இவ்வாண்டினைக் குறிப்பிடுவது சாலச் சிறந்ததாகும்.

# இலங்கை முதலீட்டுச் சபையின் திட்டங்கள்

இலங்கையின் உரிய பிரதேசங்களில் தொழில்நுட்ப அபிவிருத்தி ஊக்குவிப்பு, அனுசரணை மற்றும் இதற்கான வசதிகளை வழங்குவதற்காக அரசின் பிரதான முகவர் நிறுவனமாகச் செயற்படுவதற்காக பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு எனப் பெயரிடப்பட்ட நிலையியற் சபை நிறுவனமாக 1978 ஆம் ஆண்டில் இலங்கை முதலீட்டுச் சபை ஸ்தாபிக்கப்பட்டது. அபிவிருத்தி தொடர்பான அடிப்படைச் செயற்பாடாக அமைந்தது, வரிச் சலுகை மற்றும் ஏனைய வசதிகளை வழங்கும் ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களாக அறிமுகப்படுத்தப்படும் விசேட பிரதேசங்களை ஒதுக்குவதாகும். கட்டுநாயக்கா மற்றும் பியகம பிரதேசங்களில் இவ்வலயம் ஆரம்பத்தில் ஸ்தாபிக்கப்பட்டதுடன் பின்னர் கிரமமாக மேலும் பல வலயங்கள் இதனுடன் இணைந்து கொண்டன. தற்போது முழுமையாக இவ்வாறான 12 வலயங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

முழுத் தேசத்தினையும் தழுவக் கூடியவாறு அதன் விடயப் பரப்பினை விரிவுபடுத்தி பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தின் மூலம் 1992 ஆம் ஆண்டில் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு இலங்கை முதலீட்டுச் சபையாக மாற்றியமைக்கப்பட்டது. இதற்கு முன்னர் கட்டுநாயக்க, பியகம மற்றும் கொக்கல பிரதேசங்களில் இதற்காகத் தாபிக்கப்பட்டுள்ள ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த விசேட பிரதேசங்களில் மாத்திரம் இதன் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டிருந்தன.

தொழில்நுட்ப ஏற்றுமதித் துறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டு ஊக்குவிப்பு, ஒருங்கிணைப்புக்கள், அனுசரணைகள் உட்பட இதற்கான வசதிகளை வழங்குவதற்கான அடிப்படைப் பொறுப்புக்கள் கொண்ட முகவர் நிறுவனமாக செயற்பட்டு சேவைப் பிரிவினைப் போன்று உட்கட்டமைப்பு வசதிகள் பிரிவுக்காகவும் முதலீட்டு ஊக்குவிப்பு, ஒருங்கிணைப்புக்கள், அனுசரணைகளை வழங்குவதும் இதன் தற்போதைய செயற்பாடுகளுக்கு முதலீட்டுச் சபை கிரமமாகப் பிரவேசித்துள்ளது.

## எமது நோக்கங்கள்

இலங்கை முதலீட்டுச் சபையின் முக்கிய நோக்கங்களில் வலியுறுத்தப்பட்டிருப்பது அரச மற்றும் தனியார் பங்குடைமை மூலம் பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்தல், பொருளாதார அடிப்படையினை விரிவுபடுத்தலும், உள்நாட்டு முதலீடு மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டினை ஊக்குவித்தல், விருத்தி செய்தல், அந்நியநாட்டுச் செலாவணி உழைப்பு வகைகளைப் பல்வகைப் படுத்தலும், ஏற்றுமதி உழைப்பினை விருத்தி செய்தல், நவீன கண்டுபிடிப்புக்கள், ஊக்குவிப்புக்கள், நவீன தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றலும், தொழில் வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பங்களை உருவாக்குவதன் மூலம் நாடு பூராகவும் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் (IPZS) தாபிப்பதாகும்.

## எமது செயற்பாடுகள்

அரச முதலீட்டுக் கொள்கையினை அமுல்படுத்தவதற்கு உதவிகளை வழங்கி முன்னணிப் பிரிவாக முதலீட்டுக்கான சந்தர்ப்ப இலக்குகள் மற்றும் முதலீட்டுகளுக்கான கவர்ச்சியினைப் போன்று தேசிய பொருளாதரா விருத்தியினை இலக்காகக் கொள்வதற்கான பங்களிப்புக்களை வழங்கி நேரடி வெளிநாட்டு முதலீட்டு மட்டத்தினைக் கிரமமாக அதிகரிப்பதே எமது செயற்பாட்டுப் பணிகளாக அமைந்துள்ளன.

இலங்கையில் உற்பத்தித் துறை, உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா வர்த்தகம், விவசாயம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் இணைந்த சேவைகள் உட்பட ஏனைய தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிவுகளின் செயற்றிட்டங்களை ஆரம்பிக்க எதிர்பார்க்கும் முதலீட்டாளர்களுக்காக அனுசரணைகள் மற்றும் வசதிகளை வழங்கும் முதன்மை நிறுவனமாக முதலீட்டுச் சபை செயற்படுகின்றது.

தேவையான தகவல்கள் மற்றும் வழிகாட்டல்கள், செயற்றிட்ட விண்ணப்பப்படிவத்தினைக் கையளிப்பதற்கு முன்னர் வழங்கப்படுவதுடன் ஏனைய முகவர் நிறுவனங்களினால் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள தேவையான சந்தர்ப்பங்களில் முதலீட்டுச் சபை மூலம் தேவையான அனுசரணைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஊக்குவிப்புக்களுக்கு அமைய நிவாரணத்தினை அங்கீகரித்தல் மற்றும் முதலீட்டுச் சபையின் உரிய பிரிவுகளில் முதலீடுகளை மேற்கொள்வதற்காகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்களை மதிப்பீடு செய்வதும் இதன் பிரதான பணிகளாகும்.

அத்துடன் மூலப் பொருட்கள் மற்றும் அது சார்ந்த உள்ளீடுகளுக்கு அமைய விதிக்கப்படக் கூடிய வரி விடுவிப்பு மற்றும் புலம்பெயர் அந்தஸ்த்தில் உள்ள வெளிநாட்டுப் பிரஜைகளுக்காக வீசா வழங்குவதற்காக குடிவரவு குடியகல்வு உத்தியோகத்தர்களுக்கு பரிந்துரைகளை வழங்குவதும் இலங்கை முதலீட்டுச் சபையினால் மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகளாகும்.

செயற்றிட்டச் சுற்றின் ஆரம்பம் தொடக்கம் அமுல்படுத்தப்படல் வரையான முதலீட்டுச் சபை மூலம் முதலீட்டாளர்களுக்கு உதவிகள் வழங்கப்படுவதுடன் ஏற்றுமதி / இறக்குமதி தீர்வைகள்ப் பெற்றுக்கொள்வதற்காக வசதிகளை வழங்குதல் மற்றும் அதற்கான பங்கேற்பு, மூலதனப் பொருட்கள் உட்பட மூலப் பொருட்கள் இறக்குமதிக்காக சுங்கத் தீர்வைகளை வழங்குவதும் முடிவுப் பொருள் ஏற்றுமதி மூலம் வெற்றிகரமான கையாளுகைச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காகவும் இலங்கை முதலீட்டுச் சபை உதவிகளை வழங்குகின்றது.

முழுமையான முதலீடு மற்றும் ஏற்றுமதி உழைப்புக்களின் துரித அதிகரிப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதற்காக முதலீட்டாளர்களுக்குப் பொருத்தமான சூழலை வழங்கும் நோக்கில் சகல உட்கட்டமைப்பு வசதிகளையும் வழங்கி முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களை விருத்தி செய்வதற்காக முதலீட்டுச் சபையினால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## நோக்கு

பொருளாதார செழிப்பின் ஊடாக இலங்கையின் சகல மக்களினதும் நலனை நிச்சயப்படுத்திக் கொள்ளுதல்

## பணிக்கூற்று

தேசிய அபிவிருத்திக்காக அரசாங்கத்தின் பண மற்றும் நிதி எல்லைகளுடன் ஒருங்கிணைந்த விதத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் துறைகளின் முதலீடுகளைப் பெறுதல்

# பணிப்பாளர் சபை
# 2012



**திரு. எம்.எம்.சீ. பேர்டினான்டோ**

தலைவர் / பணிப்பாளர் நாயகம்



**திரு. ஜே.டீ. பண்டாரநாயக்க**

அங்கத்தவர்



**திரு. எஸ்கன டீ சில்வா**

அங்கத்தவர்



**திரு. சஞ்ஜீவ விக்ரமநாயக்க**

அங்கத்தவர்



**திரு. அனுர ஜயசிங்க**

அங்கத்தவர்

# இலங்கை முதலீட்டுச் சபையின் சிரேஷ்ட அதிகாரிகள்

| பெயர் | பதவி |
|---|---|
| திரு. எம்.எம்.சீ. பேர்டினான்டோ | தலைவர் / பணிப்பாளர் நாயகம |
| கலாநிதி. ஐ.என். சமரப்புலி | நிறைவேற்றுப் பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் கொள்கை ஆலோசனை) |
| திரு. சிவான் டீ. சில்வா | நிறைவேற்றுப் பணிப்பாளர் (உட்பகட்டமைப்பு வசதிகள், பயன்பாடு மற்றும் கல்விப் பிரிவு) |
| திரு. டீ.பீ. ஆரியசிங்க | நிறைவேற்றுப் பணிப்பாளர்<br>(சுற்றுலா கைத்தொழில், தகவல் தொழில்நுட்பம் / அறிவுசார் சேவை மற்றும் விவசாயப் பிரிவு) |
| திரு. எஸ்.பீ.எப்.பீ. சில்வா | நிறைவேற்றுப் பணிப்பாளர் (தொழிநுட்ப சேவை) |
| திரு. டப்.ஏ.எச்.ஆர். பெர்ணாந்து | நிறைவேற்றுப் பணிப்பாளர் (பொறியியல் அங்கீகாரம் மற்றும் விசேட செயற்றிட்டம்) |
| திருமதி. பீ.கே. வல்கம | நிறைவேற்றுப் பணிப்பாளர் (சட்டம்) |
| திரு. பீ.ஜே. பனாப்பிட்டிய | நிறைவேற்றுப் பணிப்பாளர் (பொறியியல் அங்கீகாரம் மற்றும் விசேட செயற்றிட்டம்) |
| திரு. யூ . சிறிகம்பொல | நிறைவேற்றுப் பணிப்பாளர் (கட்டுநாயக்க ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயம்) |
| திருமதி. வை.ஜீ. ராஜபக்ஷ | நிறைவேற்றுப் பணிப்பாளர்<br>(தைத்த ஆடை, பிரதேச வேலைத்திட்டம் மற்றும் ஏனைய உற்பத்திப் பிரிவு) |
| திரு. ஈ.ஏ.ஜே. எதிரிசிங்க | நிறைவேற்றுப் பணிப்பாளர் (மானிட வளம் மற்றும் நிர்வாகம்) |

## இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர்கள்

| | |
|---|---|
| திரு. கே.பீ.வீ.டி. பெர்ணாந்து | பணிப்பாளர் (பாரிய செயற்றிட்டங்கள்) |
| திரு. டீ.ஏ. சமரசிங்க | பணிப்பாளர் (ஊடகம்) |
| திருமதி. என். வீரசேகர | பணிப்பாளர் (முதலீட்டுச் சேவை) |
| திருமதி. சீ.பீ. மலலகொட | பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் கொள்கை ஆலோசனை) |
| திரு. எச்.எம். ஜயசுந்தர | பணிப்பாளர் (மத்திய பிராந்திய அலுவலகம்) |
| திரு. யூ .ஜே. வீரசிங்க | பணிப்பாளர் (வடமேல் பிரதேச அலுவலகம்) |
| திருமதி. எம்.ஏ.எஸ். பெரேரா | பணிப்பாளர் (சுற்றுலா) |
| திரு. எம்.கே. குருசிங்க | பணிப்பாளர் (புதிய வலயம்) |
| திருமதி. ஆர்.எம். வீரக்கோன | பணிப்பாளர் (செயலாளர் அலுவலகம்) |
| செல்வி. என்.டீ. சில்வா | பணிப்பாளர் (உட்கட்டமைப்பு வசதிகள் பயன்பாடு மற்றும் கல்விப் பிரிவு) |
| திரு. ஜே.பீ.சீ. ஜய்லத் | பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) |
| செல்வி. எஸ்.பீ.டீ.எஸ். முத்துகுமாரண | பணிப்பாளர் (நிதி) |
| திரு. ஏ.கே. ஜயசிங்க | பணிப்பாளர் (சீதாவக்க ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயம்) |
| திருமதி. எம்.எஸ்.பீ. சமரக்கொன் | பணிப்பாளர் (சட்டம் - அரச மற்றும் தனியார் ஒத்துழைப்புப் பிரிவு) |
| திரு. டப்.ஏ.எப். ஜயசிறி | பணிப்பாளர் (தொழில்நுட்பத் தொடர்பாடல்) |
| திரு. எம்.கே.டீ. லோரன்ஸ் | பணிப்பாளர் (பியகம ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயம்) |
| பிரிகேடியர் டீ.ஏ. அமுனுகம | பணிப்பாளர் (பாதுகாப்பு) |
| திரு. ஏ.கே.ஏ. மஹிந்த | பணிப்பாளர் (தொழில்நுட்ப சேவை) |
| திரு. ஜே. குணசேகர | பணிப்பாளர் (கொக்கலை ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயம்) |
| திரு. ஏ.ஆர். கருணாரட்ண | பணிப்பாளர் (மானிட வளம்) |
| திரு. ஆர்.எம்.யூ . செனரத் | பணிப்பாளர் (தொழில்நுட்ப நிருவாகம்) |
| திரு. எம். இராமநாயக்க | பணிப்பாளர் (முதலீட்டுச் சேவை வலயம்) |
| திரு. என்.எம். குமாரதுங்க | பணிப்பாளர் (ஆடை உற்பத்தி, பிரதேச நிகழ்ச்சி வேலைத்திட்டங்கள் மற்றும் ஏனைய உற்பத்திப் பிரிவு) |
| திரு. டப்.யூ .கே.எம்.ஏ.ஜே. குலதிக | பணிப்பாளர் (ஆடை உற்பத்தி, பிரதேச வேலைத்திட்டங்கள் மற்றும் ஏனைய உற்பத்திப் பிரிவு) |

# மீளாய்வுகள்

## பிரதான நிகழ்வுகள் மற்றும் விசேட சந்தர்ப்பங்கள்

* வரலாற்றில் அதியுயரிய நேரடி வெளிநாட்டு முதலீட்டு மட்டத்தினை எட்டி 1.34 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டினைப் பெற்றுக்கொள்ள இலங்கை முதலீட்டுச் சபைக்கு முடிந்தது.

* மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட தேசிய பச்சை விருது விழாவில் அரச நிறுவனங்களுக்காக உலோகப் பதக்கத்தை (3வது இடம்) பெற்றுக்கொள்ள பியகம ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயத்திற்கு முடிந்தது.

* தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சுடன் இணைந்து இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவனம் (SLINTECH) இலங்கை முதலீட்டுச் சபைச் செயற்றிட்டமாக இலங்கையில் முதற் தடவையாக நனோ தொழில்நுட்பப் பூங்காவுக்கான அப்படை வகுக்கப்பட்டது. உள்நாட்டினைப் போன்று கோளமயக் கம்பனியுடனும் இணைந்து கூட்டு புத்தாக்கச் செயற்பாடுகளின் ஊடாக நவீன உற்பத்தி அபிவிருத்திகளுக்காக சகல வர்த்தகத் துறைகளுக்கும் சந்தர்ப்பங்களை வழங்க இந் நனோ தொழில்நுட்பப் பூங்காச் செயற்றிட்டத்தின் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* கைத்தொழில்சாலையின் நிர்மாணப் பணிகளுக்காக அபிவிருத்தி செய்யப்பட்ட காணித் துண்டுகள் தொடர்பாக முதலீட்டாளர்களின் அதிகரித்து வரும் கேள்வியினை நிவர்த்தி செய்யும் வகையில் சம்பூர், மிரிஜ்ஜவில, சூரியவெவ மற்றும் முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் புதிய முதலீட்டு வலயங்களைத் தாபிக்கும் அடிப்படைச் செயற்பாடுகள் முதலீட்டுச் சபையினால் மேற்கொள்ளப்பட்டன.

* கலப்பு அபிவிருத்தி, சொகுசு மாடி வீட்டுக் கட்டிடத் தொகுதி, வர்த்தக மற்றும் அலுவலகக் கட்டிடத் தொகுதியினைப் போன்று பல் துறைசார் ஹோட்டல் கட்டிடத் தொகுதி, சர்வதேச பல்கலைக்கழகங்கள் மூலம் முன்னெடுக்கப்படும் கல்வி உட்பட பயிற்சி நிறுவகங்களைப் போன்று ஆராய்ச்சி அமைப்பும், உலோகத் தொழில்நுட்ப வலயங்களின் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்காகவும் 4850 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுடன் 2008 இலக்கம் 14 கொண்ட வியூக அபிவிருத்திச் செயற்றிட்ட சட்டத்தின் கீழ் 5 செயற்றிட்டங்களுக்கான உடன்படிக்கைகளில் இலங்கை முதலீட்டுச் சபை கைச்சாத்திட்டது.

* 2.09 பில்லியன் ரூபா முதலீட்டு எதிர்பார்ப்புடன் தொலைத் தொடர்பு வசதிகளை நுகர்வோருக்கு வழங்கும் நோக்குடன் செய்மதி தொகுதித் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளுக்கான முதலாவது செயற்றிட்டத்திற்கு இலங்கை முதலீட்டுச் சபை கைச்சாத்திட்டது.

# முதலீடு தொடர்பாக இலங்கையில் எதிர்கால எதிர்பார்ப்புக்கள்

## விசேட சந்தர்ப்பங்கள்

ஆரம்ப வெளிநாட்டு நேரடி முதலீட்டு சாதனைகளில் முறியடித்து ஒரு மில்லியனை விட மேற்பட்ட நேரடி வெளிநாட்டு முதலீட்டு உழைப்பு எல்லையை எட்டுவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு முடிந்தது.

- 1338 மில்லியன் அமெரிக்க் டொலர் இதுவரையில் பெறப்பட்ட அதி கூடுதலான முதலீட்டு அளவினை எட்ட முடிந்தது.
- நாட்டின் பொதுவான உட்கட்டமைப்பு வசதிகளை விருத்திசெய்து அதனூடாக முதலீடுகளை கவர்ச்சிப்படுத்தக்கூடிய முன்னேற்றங்களை எட்டமுடிந்தது.
- உள்நாட்டு முதலீட்டு உள்ப்பாய்ச்சல் 608 மில்லியன் வரை அதிகரித்தது (நேரடி வெளிநாட்டு முதலீடுகளில் சுமார் 45% ஆகும்.)

## நேரடி வெளிநாட்டு முதலீடு (FDI)

வெளிநாட்டு முதலீடு மற்றும் இலங்கை பொருளாதார விருத்திக்கிடையில் பாரிய தொடர்புகள் காணப்படுகின்றன. ஒரு தேசத்தின் பொருளாதார அபிவிருத்தி இலக்கை எட்டுவதற்காக நேரடி வெளிநாட்டு முதலீடுகள் கணிசமான அளவு நாட்டின் கவர்ச்சிக்கு உட்படுத்துவது அத்தியாவசியமாகும். இலங்கை முதலீட்டு சபை அடைவு மட்டத்தைத் தொடர்ந்து 2011ஆம் ஆண்டு பெறப்பட்ட 1,066 மில்லியன் அமெரிக்க டொலர் உடன் ஒப்பீடு செய்யும் போது அது 26% அதிகரிப்பினைக் காண்பித்ததுடன் 1,338 மில்லியன் அமெரிக்க டொலர்களை நேரடி வெளிநாட்டு முதலீடாக இவ்வாண்டில் பெற்றுக்கொள்ள இலங்கை முதலீட்டுச் சபைக்கு முடிந்தது. கடந்த ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட பலம் பொருந்திய முதலீட்டு செயற் சாதனையின் பெறுபேறாக இதுவரையில் பெற்றுக்கொள்ள முடிந்த அதி கூடுதலான முதலீட்டினை கவர்ச்சிக்குட்படுத்த 2012 ஆம் ஆண்டில் இலங்கை முதலீட்டுச் சபைக்கு முடிந்தது.

## மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டு தொடர்பான குறுகிய குறிப்புக்கள்

நிச்சயமற்ற கோளமய பொருளாதார நிலைமையிலும் கூட வேறு எந்தவொரு ஆண்டைவிடவும் கூடுதலான நேரடி வெளிநாட்டு அளவான 1,338 மில்லியன் அமெரிக்க டொலர்களைள் கவர்ச்சிக்குட்படுத்த 2012 ஆம் ஆண்டில் இலங்கை அரசுக்கு முடிந்தது. உற்பத்தி/ சேவைகள்/ உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் விவசாயப் பிரிவுக்காக அங்கீகரிக்கப்பட்ட முதலீடுகளைக் கொண்டதாக இது அமைந்தது. 308 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உற்பத்தி பிரிவு மூலமும், 427 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ‘சேவைப் பிரிவு மூலமும் 596 மில்லியன் அமெரிக்க டொலர் உட்கட்டமைப்பு வசதிப் பிரிவு மற்றும் 7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் விவசாய உற்பத்தி பிரிவு மூலமும் முழுமையாகப் பங்களிப்புக்களை வழங்கி 2012 ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட நேரடி வெளிநாட்டு முதலீட்டு அளவு 1,338 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

ஏதேனும் ஒரு தேசத்தில் முதலீட்டாளர்களை கூட்டு இணைப்பதற்காக அந்நாட்டுக்குள்ள இயலுமைகள் உட்நாட்டு வர்த்தக சங்கம் கொண்டுள்ள நம்பிக்கையை நிலையான அறிகுறியாக உடள்நாட்டு முதலீட்டினை நாட்டிற்குள் கவர்ச்சிக்குட்படுத்தும் பணிகள் 2011 ஆம் ஆண்டிற்கு இணைவாக 42% அதிகரிப்பினை 2012ஆம் ஆண்டில் எட்ட முடிந்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கிற்கமைய உள்நாட்டு முதலீட்டினை ஊக்குவிக்க அரசாங்கம் தொடர்ச்சியான பிரயத்தனங்களை மேற்கொண்டுள்ளது.

பொருளாதாரப் பெறுமதியினை மையமாகக் கொண்டு தற்போது காணப்படும் கைத்தொழில் சாலைகளுக்கான விரிசலைக் குறைத்து சூழலுக்குப் பொருத்தமான வர்த்தகதத்திற்கான சந்தர்ப்பங்களை இலங்கையில் பலப்படுத்துவதற்கான பிரயத்தனங்கள் கொண்ட பண்புசார் தரமிக்க முதலீடுகளை கவர்ச்சிக்குட்டுபடுத்தி அரசியன் வியூக உபாயங்கள் வேலைத்திட்டங்கள் ஊடாக வெற்றிகளை ஈட்டமுடிந்தது.

உற்பத்தி மற்றும் சேவைப் பிரிவு தொடர்பான கோளமயம் மற்றும் வலய மத்திய நிலையமாக இலங்கை பிரபல்யமடைந்துள்ளதுடன் முதலீட்டிற்கான சந்தர்ப்பங்களை கூடுதலாக கவர்ச்சிக்குட்படுத்துவதன் மூலம் அறிவியல்சார் மற்றும் புத்தாக்கங்களை அடிப்படையாகக் கொண்ட உயரிய மட்ட பெறுமதிகளை கொண்ட கைத்தொழில்களை நாட்டில் தாபிக்கும் பணிகளைத் துரிதப்படுத்த முடியும்.

## உற்பத்தி துறையில் முதலீடுகளை மேற்கொள்ளல்

கோளமய நேரடி வெளிநாட்டு முதலீட்டின் உள்பாய்ச்சல் குறைவு அல்லது வெளிநாட்டு முதலீடுகளை ஒரே இடத்தில் நிலைத்து இருப்பதைப் போன்று போட்டிகரமான நிலைமைகள் அதிகரித்துச் செல்லும் கோளமய சூழல் காரணமாக 2012 ஆம் ஆண்டில் பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொள்ள இலங்கை அரசாங்கத்துக்கு ஏற்பட்டது. இச்சவால் மிகுந்த சூழலுக்கு மத்தியிலும் உற்பத்தி துறையில் குறிப்பிடத்தக்க அளவு முதலீடுகளை கவர்ச்சிக்குட்படுத்த அரசுக்கு முடிந்தது.

2012 ஆம் ஆண்டில் 77 செயற்றிட்டங்களுக்காக 89,667 மில்லியன் ரூபா முதலீடுகளை மேற்கொள்ளப்பட்ட அளவுடன் ஒப்பீடு செய்யும்போது 95,882 மில்லியன் ரூபா முதலீடுகளைக் கொண்ட 100 உற்பத்தி செயற்றிட்டங்ககள் 2012 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டன. உற்பத்திப் பிரிவுக்கு 2012 ஆம் ஆண்டில் கிடைக்கப்பொற்ற மொத்த நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் அளவு 308 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். (மொத்த நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் 23% ஆகும்.)

நாட்டில் உற்பத்திப் பிரிவில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்திய காலம் மற்றும் மீள்கட்டமைப்பு செயற்பாடுகளைத் தாண்டி முன்னேற்றங்கள் எட்டப்பட்டுள்ளன. பெறுமதி குறைத்து சேர்க்கப்பட்ட செயற்பாடுகிளில் பொருளாதார முக்கியத்துவம் குறைவாகக் காணப்படுவதுடன் கைத்தொழில்களில் முதலீட்டாளர்களின் பெறுமதி குறைவாக சேர்த்துக்கொள்ளப்பட்ட பிரிவுகளில் முதலீடுகள் மேற்கொள்வதைக் குறைப்பதற்கும் விருத்திக்காக புதிய சந்தர்ப்பங்களை வழங்கி உயரிய பெறுமதியினை சேர்க்கப்பட்ட செயற்பாடுகள் மீது விரிவான முதலீடுகளை மேற்கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இப்புதிய வர்த்தக வியூகங்களை உருவாக்குவதன் மூலம் உயரிய தேர்ச்சிகொண்ட தொழில் வாய்ப்புக்களுக்கான சந்தையை உருவாக்குவதுடன் உயரிய வருமானத்தைப் பெறும் பொருளதாரத்தினை விருத்திசெய்வதற்காகவும் இதன் மூலம் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. விசேடமாக செலவினத்தைக் குறைக்கும் நோக்குடன் அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டங்களை அமுல்படுத்தும் போது முதலீட்டாளர்களுக்கு வசதிகளை வழங்குவதற்காக பல்வேறுபட்ட செயற்பாடுகள் மற்றும் பல்வேறுபட்ட பணிகளை ஆரம்பிக்கும் தொடர்பில் அரசாங்கம் தொடர்ச்சியாக கவனம் செலுத்திவருகிறது.

அமுலிலுள்ள கைத்தொழில் பூங்காங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்திசெய்வதைப் போன்று சூரியவெவ செயற்றிட்டம் உட்பட புதிய வலயங்களை அபிவிருத்தி செய்யும்போது மற்றும் விருத்திசெய்யும்போது அரசுக்கு உதவும் நோக்குடன் செயற்றிட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வைகளுக்காக இலங்கை முதலீட்டுச் சபை உரிய பணிகளை மேற்கொள்கின்றது.

## சேவை / உட்கட்டமைப்பு வசதிகள் பிரிவுகளில் முதலீடுகளை மேற்கொள்ளல்

இலங்கையின் பொரருளாதார விருத்திக்கு உதவும் நோக்குடன் சேவை/உட்கட்டமைப்பு விருத்தி தொடர்பாக அரசின் முயற்சிகள் 2012 ஆம் ஆண்டில் வெற்றி அளித்துள்ளதுடன் இத் தசாப்த்திற்குள் அப்பிரிவில் பொருளாதாரத்துக்கு கிடைக்கும் பங்களிப்பினை தொடர்ந்தும் விரிவுபடுத்துதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

2012 ஆம் ஆண்டின் 591,156 மில்லியன் ரூபா அங்கீகரிக்கப்பட்ட (விரிவுபடுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட 125 செயற்றிட்டங்கள் மூலம்) முதலீட்டு அளவின் ஊடாக இச்சேவைகள்/உட்கட்டமைப்பு வசதிப் பிரிவு பொருளாதாரத்துக்கு பங்களிப்புகளை வழங்குகின்றது. 2012 ஆம் ஆண்டில் சேவைகள்/ உட்கட்டமைப்பு வசதி பிரிவுக்கு கிடைக்கப்பட்ட மொத்த நேரடி வெளிநாட்டு முதலீட்டின் அளவு 1,023 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். (மொத்த நேரடி வெளிநாட்டு முதலீடுகளில் 76.5% ஆகும்)

ஹோட்டல் மற்றும் சுற்றுலா கைத்தொழில் செயற்றிட்டம், கலப்பு அபிவிருத்தி செயற்றிட்டம், துணை சேவைகள், போக்குவரத்து, மின்சக்தி, தொலைத்தொடர்பு, சுகாதார சேவை மற்றும் கல்விச் சேவை உட்பட விரிவான பலம்பலைக் கொண்ட சேவைகள் இப்பிரிவில் அடங்கியுள்ளன.

அரசின் கொள்கை திட்டங்கள் தொடர்பில் கிடைக்கப்பெறும் நேர் மனப்பாங்கு வரவேற்பு சேவைகள்.'.உட்கட்டமைப்பு வசதிப் பிரிவில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளின் அளவு அதிகரித்துச் செல்வதைச் சித்தரித்துக்காட்டப்படுவதுடன் இப்பிரிவில் போட்டிகரமான நிமைகளை விருத்திசெய்யும் நோக்குடன் இதற்கான வசதிகளை வழங்குவது இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

## விவசாயதுறையில் முதலீடுகளை மேற்கொள்ளல்

2012 ஆம் ஆண்டில் 7 செயற்றிட்டங்களுக்காக 9,369 மில்லியன் பெறுமதியான முதலீடுகளை கவர்ச்சிக்குட்படுத்த விவசாயப் பிரிவுக்கு முடிந்தது. விவசாயப் பிரிவுக்காக கிடைக்கப்பட்ட நேரடி வெளிநாட்டு முதலீட்டின் அளவு 7 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். (மொத்த நேரடி வெளிநாட்டு முதலீட்டின் அளவில் 0.5% ஆகும்)

2012 ஆம் ஆண்டில் விவசாயத்துறைக்காக கவர்ச்சிக்குட்படுத்த முதலீட்டின் அளவு ரூபா 9,369 மில்லியன் ஆகும். அதாவது மொத்த முதலீட்டின் 87மூ சதவீதம் (8,137 மில்லியன் ரூபா) வெளிநாட்டு மூலங்கள் ஊடாகக் கிடைக்கப்பெற்றுள்ளன. கடற்றொழில் மற்றும் பால் உற்பத்தித் துறைகள் தொடர்பிலான பிரதான இரு விவசாய உற்பத்தித் துறைகளுக்காக 8,712 மில்லியன் ரூபா முதலீடாகக் கிடைக்கப்பட்டது. விவசாயத்துறைக்காக கிடைக்கப்பட்ட மொத்த முதலீடுகளில் 93% ஆனவை இச்செயற்றிட்டத்திற்காக முதலீடு செய்யப்பட்டன.

கோளமயம் மற்றும் பிராந்திய பொருளாதார சமூக அபிவிருத்தி தொடர்பாக கருத்திற்கொள்ளும் போது பொருளாதாரத்தில் தனியார் முதலீட்டினை ஊக்குவிப்பதற்காக சூழலுக்குப் பொருத்தமான பிரதேசத்தினை அமுல்படுத்த அரசாங்கம் உத்திதேசித்துள்ளது. முதலீட்டாளர்களாக மாற்றம்பெறக்கூடிய தனிநபர்களின் தேவைகளுக்கு மானிட முதலீட்டினை வழங்குவதன் மூலம் மற்றும் பொருளாதாரப் பெறுமதியின் சமமின்மையினை தீர்ப்பதற்காக விசேட முதலீட்டுச் சந்தை வாய்ப்புகளுக்காகஉ றபத்திகளை, தாயரித்தல், தொழில்நுட்ப, சேவை வழங்கல்களை இலக்காகக் கொண்டு போட்டிகரமான புதிய பெறுபேறுகள் இலங்கைக்கு பெற்றுக்கொள்ளக் கூடிய முறைகள் தொடர்பாக கண்டறிவதன் மூலம் மிக முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பு வாய்ந்த பிணகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## இலங்கையை தரப்படுத்தல்

### 2012 Doing Business (வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபடல்) தரப்படுத்தல்

சர்வதேச நிதிக்கூட்டுத்தாபனம் (IFC) உடன் இணைந்து உலக வங்கியினால் வெளியிடப்பட்ட உலக Doing Business (வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபடல்) தரப்படுத்தல்களில் 2011 அம் ஆண்டில் பெற்றுக்கொண்ட 102வது இடத்தைத் தாண்டி 2012 ஆம் 183 நாடுகளுக்கிடையில் 89வது இடத்தை இலங்கைக்குப் பெற்றுக்கொள்ள முடிந்தது, வர்த்தக தரப்படுதல்களில் அதி உயரிய நிலையினை எட்ட முடிந்ததிற்கு பிரதான காரணமாக அமைந்தது முலீட்டாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் வர்த்தகத்தின் மீது விதிக்கப்பட்ட வரி குறைக்கப்பட்டமையாகும்.

2012 ஆம் ஆண்டில் வர்த்தக புறழ்வு வரி மற்றும் சமூக பாதுகாப்பு வழங்கல் நிதியினை ஒழிப்பதன் மூலம் மற்றும் கூட்டுத்தாபன வருமான வரி, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் தேசிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி விகிதாசாரம் குறைக்கப்பட்டதன் மூலம் வர்த்தகத்திற்காக செலுத்த வேண்டிய வரிச் செலவினத்தைக் குறைக்க இலங்கை அரசாங்கத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## உலக வங்கி வழங்கல் செயற்சாதனை சுட்டி

விநியோகப் பிரிவில் சர்வதேச தரப்படுத்தல்களில் 137வது இடத்திலிருந்து 2012 உலக வழங்கல் செயற்சாதனை சுட்டியில் 81வது இடத்தை எட்டுவதற்கு 2012 ஆம் ஆண்டில் இலங்கைக்கு முடிந்தது.

சுங்க உட்கட்டமைப்பு வசதிகள், சர்வதேச கப்பல் சரக்குப்பொருட்கள் விநியோக சேவைகளில் பண்புசார் தரம் மற்றும் தேர்ச்சி, அடையாளங்களை மேற்பார்வை செய்தல் , வடிவமைப்புக்களை பிரதியெடுத்தல் சமகாலத்திற்கு தேவையான துறைகள் இலங்கையினால் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்திகள் காரணமாக இச்சுட்டியினை முன்னெடுத்துச் செல்ல இலங்கைக்கு முடிந்துள்ளது.

## சுற்றுலா கைத்தொழில்

- உலகப் புகழ்பெற்ற ஐக்கிய இராச்சியத்தின் “கொண்டா நாஸ்ட் டரவல்” சஞ்சிகை மூலம் 2012 ஆம் ஆண்ம சுற்றுலாவுக்கான மிகவும் பொருத்தமான அதி சிறந்த விடுமுறையைக் கழிக்கும் 3வது இடம் இலங்கை தரப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் தேசிய மரபுரிமை மற்றும் அவை அமைந்த இடம் உயிரனங்களை, இயற்கை வளம், கவர்ச்சி மிக்க கரையோரம் போன்றவைகள் தொடர்பில் “நாசனல் ஜீயோகிறபிக் ரவல்ஸ்” சஞ்சிகை 2012 ஆம் ஆண்டில் உலக சுற்றுலாவுக்காக பொருத்தமான கேந்திர நிலையஙங்களில் மிகவும் பொருத்தமான 6 இடங்களுக்கிடையே இலங்கை உள்ளடங்கியுள்ளது.

# உலக முதலீட்டு நிலைமைகள் – 2011

## நேரடி வெளிநாட்டு முதலீடு நாட்டுக்குள் உள்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல்

2011 ஆம் ஆண்டில் உலகப் பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட பல்வேறுபட்ட அழுத்தங்களுக்கு மத்தியிலும் கோளமய நேரடி வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் (FDI) 1, 524 பில்லியன் அமெரிக்க டொலர் பதிவாகியுள்ளதுடன் 2010ஆம் ஆண்டுக்கு இணைவாக அது 16% அதிகரிப்பினைக் காண்பிக்கின்றது் இது பொருளாதார நெருக்கடிக்கு முன்னர் பொதுவாக நேரடி வெளிநாட்டு உட்பாய்ய்ல் 1472 பில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டி 4% அதிகிப்பினைக் காணப்பித்துள்ளது. இது எவ்வாறியிருப்பினும் 2007 ஆம் ஆண்டில் 1971 பில்லியன் அமெரிக்க டொலர் என்ற அதி உயரிய மட்டத்தில் காணப்பட்ட கோளமய நேரடி முதலீடு உட்பாய்ச்சலைவிட குறைவான மட்டத்தில் அதாவது 23% தொடர்ந்தும் காணப்பட்டது.

2011 ஆம் ஆண்டில் நேரடி வெளிநாட்டு உட்பாய்ச்சல் 2010 ஆம் ஆண்டுக்கு இணைவாக 16% இனால் அதிகரித்ததுடன் பிணக்கிற்கு முன்னரான சாதாரண அளவினை விட 4% அதிகரிப்பு இடம்பெற்றதுடன் 2007 ஆம் ஆண்டு உயரிய பெறுமதியினை விட 23% இனால் குறைவடைந்து காணப்பட்டது.




(மூலம் : உன்டாட் உலக முதலீட்டு அறிக்கை – 2012)

### நேரடி வெளிநாட்டின் முதலீட்டின் நாட்டிற்குள் உள்பாய்ச்சல்

அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்கள் மற்றும் மாற்றமடைந்து செல்லும் பொருளாதாரங்கள் மீது நேரடி வெயளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் 12% இனால் அதிகரித்ததுடன் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களின் நேரடி வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் 21% இனால் அதிகரித்தது

- ❖ கோளமய ரீதியில் நேரடி வெளிநாட்டு முதலீடு அதிகரிப்பதற்கான காரணங்கள் பல இருந்த போதிலும் அபிவிருத்திகரமான பொருளாதாரம், அபிவிருத்தியடைந்து செல்லும் பொருளாதாரத்துக்கு மாற்றமடைந்து செல்லும்பொருளாதாரம் ஆகிய பிரதான பொருளாதார குழுக்களை தழுவக்கூடிய வகையில் நேரடி வெளிநாட்டு முதலீடு நாட்டிற்குள் உள்பாய்யச்சல் 2011 ஆம் ஆண்டில் அதி உயரிய முன்னேற்றத்தைக் காண்பித்து விரிவடைந்தது.
- ❖ கைத்தொழில் அபிவிருத்தியின் போது பிரதானமாக முன்னர் அபிவிருத்தி செய்யப்படாத பிரதேசங்கள் தொடர்பில் செயற்றிட்டங்கள் அதிகரித்துள்ளமையினால் அபிவிருத்தியடைந்து வரும் மாற்றமடைந்து செல்லும் பொருளாதாரங்களில் நேரடி வெளிநாட்டு முதலீடு உள்பாய்ச்சல் 777 மில்லியன் அமெரிக்க டொலர் மட்டத்தை எட்டி 12% வளர்ச்சி காண்பிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டில் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களில் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் நாட்டிற்குள் உட்பாய்ச்சல்

617 – 684 பில்லியன் வரையும் மாற்றமடைந்து செல்லும் பொருளாதாரங்களில் நேரடி வெளிநாட்டு நாட்டிற்குள் உட்பாய்யச்சல் 74 - 92 பில்லியன் அமெரிக்க டொலர் வரை அதிகரித்திருந்தது.

- 21% என்ற உயரிய மட்டத்திலான நேரடி வெளிநாட்டு முதலீடு உட்பாய்ச்சல் தொடர்பாக அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்கள் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது. இவ்விருத்திக்காக பிரதானமாக வெளிநாட்டு டரான்ஸ் நசனல் கம்பனியினால் எல்லை நிர்யணங்கள் மற்றும் பொறுப்பேற்றல் ஆகியன பிரதானமாகப் பங்களிப்புச் செய்தன.

- 2010 ஆம் ஆண்டில் 619 பில்லியன் அமெரிக்க டொலர் நாட்டிற்குள் உட்பாய்ச்சல் ஒப்பீடு செய்யும்போது 748 பில்லியன் அமெரிக்க டொலர் நேரடி முதலீட்டு அளவினை கவர்ச்சிக்குட்படுத்த அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களுக்கு முடிந்தது.

**பிராந்திய ரீதியில் நேரடி வெளிநாட்டு உட்பாய்ச்சல் (2006 – 2011) அமெரிக்க டொலர் பில்லியன்களில்**




2011 ஆம் ஆண்டில் உலக நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் அரைப் பகுதியினை விட அதாவது 776 பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கவர்ச்சிக்கு உட்படுத்த அபிவிருத்தி அடைந்து செல்லும் பொருளாதாரங்கள் மற்றும் மாற்றமடைந்து செல்லும் பொருளாதாரங்களுக்கு முடிந்தது.

(மூலம் : உன்டாட் உலக முதலீட்டு அறிக்கை – 2012)

- 2010 ஆம் ஆண்டில் வரலாற்று முதற்தடவையாக கோளமய நேரடி வெளிநாட்டு முதலீடு உட்பாய்ச்சல்களின் 50% ஐத் தாண்டுவதற்கு அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்கள் மற்றும் மாற்றமடைந்து வரும் பொருளாதாரங்களுக்கு முடிந்ததுடன் 2011 ஆம் ஆண்டின் முன்னேற்றங்களை தொடர்ந்தும் பேணுவதற்கு அந்நாடுகளுக்கு முடிந்தது.




அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களில் காணப்படும் நேரடி வெளிநாட்டு முதலீடுகளில் 65% மாணவற்றை கவர்ச்சிக்கு உட்படுத்த ஆசிய மற்றும் ஓசானியாவுக்கு முடிந்தது.

மூலம் : உங்டாட் 2012 உலக முதலீட்டு அறிக்கையின் 1.1. இணைப்பு அட்டவணையை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் நேரடி வெளிநாட்டு முதலீடு / ரீ.என்.சீ. புள்ளிவிபர அடிப்படை (www.unctad.org.fdistasticcs)
அ) 2011 ஆம் ஆண்டின் நேரடி வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல்களில் பாரிய அளவினை அடிப்படையாகக் கொண்டு தரப்படுத்தப்பட்டுள்ளது.
குறிப்பு : 2011 ஆம் ஆண்டில் எட்டாவது மட்டத்தை எட்டிய பிரித்தானியா வேர்ஜினியா தீவு பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டுக்கு இணைவாக 15% அதிகரிப்பான 227 பில்லியனைக் கவர்ச்சிக்கு உட்படுத்த அமெரிக்க ஐக்கிய இராச்சியத்திற்கு முடிந்தது.

- ❖ பாரிய நேரடி வெளிநாட்டு முதலீடுகள் பெறும் பெறுவோர் தொடர்பாக கோளமய தரப்படுத்தல் மூலம் முன்னணி அனுசரணைகளை வழங்கும் 20 நாடுகளுக்கிடையில் 7வது இடத்தில் அபிவிருத்தியடைந்துவரும் மற்றும் மாற்றமடைந்து செல்லும் பொருளாதாரத்தில் உள்ளடங்கியிருப்பதன் மூலம் அக்குழுக்களை மிகுந்த திருப்திகரமான அனுசரணை நாடுகள் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

- ❖ பாரிய நேரடி வெளிநாட்டு முதலீட்டினைப் பெறும் நாடாக அமெரிக்க ஐக்கிய இராச்சியம் அதே இடத்தில் நிலை கொண்டுள்ளதுடன் 2011 ஆம் ஆண்டில் 124 பில்லியன் அமெரிக்க டொலர் பெற்று சீனா 2வது மிகப் பெரிய நேரடி வெளிநாட்டு முதலீட்டினைப் பெற்றுக்கொள்ளும் நாடாக தனது இடத்தினைத் தக்கவைத்துக்கொண்டுள்ளது.

- ❖ எவவ்வாறாகவிருப்பினும் அபிவிருத்தியடைந்து செல்லும் நாடுகளில் பொருளாதாரத்தின் மூலம் பெற்றுக்கொள்ளும் மொத்த நேரடி வெளிநாட்டு முதலீட்டில் 62% இனை கவர்ச்சிக்குட்படுத்திய அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நேரடி வெளிநாட்டு முதலீடு பெறும் வலயம் ஆசிய வலயமாகும். 424 பில்லியன் அமெரிக்க டொலர்களை கவர்ச்சிக்குட்படுத்த ஆசிய மற்றும் ஓசானியா வலயங்களுக்கு முடிந்தது.

- அபிவிருத்தியடைந்து செல்லும் பொருளாதாரங்கள் மூலம் பெற்றுக்கொண்ட மொத்த நேரடி வெளிநாட்டு முதலீடுகளில் 32% அதாவது 217 பில்லியன் அமெரிக்க டொலர் லத்தீன் அமெரிக்கா மற்றும் கரேபியன் வலயங்கள் மூலம் பெறப்பட்டுள்ளன.

- அபிவிருத்தியடைந்து செல்லும் பொருளாதாரங்கள் மூலம் பெற்றுக்கொண்ட மொத்த நேரடி வெளிநாட்டு முதலீடுகளில் 32% மற்றும் ஆசிய வலயத்தின் நேரடி முதலீட்டு உட்பாய்யல்களில் 52% அதாவது 219 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நேரடி வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக்கொண்டதன் மூலம் ஆசியா மற்றும் ஓசானிய வலயத்தில் நேரடி வெளிநாட்டு முதலீட்டிற்கான மிக முக்கியத்துவம் வாய்ந்த உப வலயமாக மாற்றமடைய கிழக்கு ஆசியாவிற்கு முடிந்தது.

- 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 26% வளர்ச்சியுடன் வளர்ச்சி கண்டுவரும் பொருளாதாரங்களுக்கு உட்பாய்ச்சப்படும் நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் 17% இனை கவர்ச்சிக்குட்படுத்திய மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த உப வலயமாக தென்கிழக்காசிய உப வலயம் அமைந்துள்ளது.

- 2011 ஆம் ஆண்டில் ASEAN நாடுகளுக்கு நேரடி வெளிநாட்டு முதலீடு உட்பாய்ச்சல்கள் மூலம் 64 பில்லியன் அமெரிக்க டொலர் (2010ஆம் ஆண்டில் 49 பில்லியன் அமெரிக்க டொலருடன் ஒப்பீடு செய்யும் போது) பிரதானமாக சிங்கப்பூருக்கு கிடைக்கப்பெற்றதுடன் 19 பில்லியன் அமெரிக்க டொலர் (2010 ஆம் ஆண்டில் 14 பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பீடு செய்யும்போது) இந்தோனியாவுக்கும், 12 பில்லியன் அமெரிக்க டொலர் (2010 ஆம் ஆண்டில் 9 பில்லியன் அமெரிக்க டொலருடன் ஒப்பீடு செய்யும்போது) மலேசியாவுக்கு கிடைக்கப்பெற்றது.

- 2011 ஆம் ஆண்டில் தாய்லாந்து, வியட்நாம் மற்றும் பிலிப்பைன் ஆகிய நாடுகளில் நேரடி வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் தொடராக 2%, 7% மற்றும் 3% மாக குறைவடைந்து காணப்பட்டது.

- 2010 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற 32 பில்லியன் அமெரிக்க டொலருடன் ஒப்பீடு செய்யும் போது மற்றும் 2011ஆம் ஆண்டில் 39 பில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்று நேரடி வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல்களில் 22% மேற்பட்ட அளவினை பெற்றுக்கொள்ள தெற்காசிய நாட்டிற்கு முடிந்தது. இதன் மூலம் ஆசிய வலயத்தின் நேரடி வெளிநாட்டு உட்பாய்ச்சல் 9% ஆகக் காணப்பட்டது.

அபிவிருத்ததி அடைந்து வரும் பொருளாதாரங்களின் நேரடி வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் களில் 3% இனைக் கவர்ச்சிக்கு உட்படுத்த தெற்காசியா வுக்கு முடிந்தது.

- இந்தியா (2010 ஆம் ஆண்டில் 24 பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பீடுசெய்யும் போது) 32 பில்லியன் டொலர்களும் ஈரான் (2010 ஆம் ஆண்டில் 3.6 பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பீடுசெய்யும்போது) 4.2 பில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் பங்களாதேஷ் (2010 ஆம் ஆண்டில் 0.9 பில்லியன் அமெரிக்க டொலருடன் ஒப்பீடு செய்யும்போது) 1.13 ஆக நேரடி வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல்களின் அதி உயரிய விருத்தியினை எட்ட முடிந்தது.

- தெற்காசியா நேரடி வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல்களின் தொடராக 11% மற்றும் 3% ஐப் பெற்று ஈரான் மற்றும் ஆஜென்ஜீனா ஆகிய நாடுகளைத் தாண்டி தெற்காசியாவின் நேரடி வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல்களில் 81% இனை கவர்ச்சிக்குட்படுத்த இந்தியாவுக்கு முடிந்துள்ளது.

## நேரடி வெளிநாட்டு முலீட்டு வெளிப்பாய்ச்சல்

உலக நேரடி முதலீடு வெளிப்பாய்ச்சல் களில் 73% என்ற கணிசமான பகுதி அபிவிருத்ததி அடைந்து வரும் பொருளாதாரத்திற் குக் கிடைக்கப் பெற்றது.

- ❖ 2011 ஆம் ஆண்டில் கோளமய நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்ப்யாய்ச்சல் முன்யை ஆண்டைவிட 17% அதிகரிப்பு அதாவது 1694 பில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்பட்டது. இது எவ்வாறாகவிருப்பினும் அது 2007 ஆம் ஆண்டில் காணப்பட்ட அதி உயரிய நேரடி வெளிநாட்டு முதலீட்டு அளவான 2,198 பில்லியன் அமெரிக்க டொலர்களை விடக் குறைந்த 23% இல் தொடர்ந்தும் நிலைத்து நிற்கிறது.
- ❖ நேரடி வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல்களின் சீரற்ற நிலைமைகள் வலயங்களுக்கிடையே காணப்பட்டன.
- ❖ 2011 ஆம் ஆண்டில் உலக நேரடி வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல்களில் 73% அதாவது 1,237 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்காக பங்களிப்புச் செய்யப்பட்டிருப்பது அபிவிருத்தியடைந்த பொருளாதார அபிவிருத்தி கொண்ட நாடுகளாகும். 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களில் நேரடி வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்சச்ல் 25% இனால் அதிகரித்துள்ளது.

**பிராந்திய ரீதியில் நேரடி வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல் (2006 – 2011) அ.டொ. பில்லியன்களில்**




(மூலம் : உன்டாட் உலக முதலீட்டு அறிக்கை – 2012)

- ❖ 2010 ஆம் ஆண்டில் அபிவிருத்தியடைந்து செல்லும் பொருளாதாரங்களில் நேரடி வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல் 4% இனால் வீழ்ச்சியடைந்ததற்கு இணைவாக 2011 ஆம் ஆண்டில் 384 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டுவதற்கு அந்நாடுகளுக்கு முடிந்நததுடன் மாற்றமடைந்து செல்லும் பொருளாதாரங்களில் நேரடி வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல் 19% வளர்ச்சியுடன் 73 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளது.




<u>மூலம்</u> : உங்டாட் 2012 உலக முதலீட்டு அறிக்கையின் 1.1. இணைப்பு அட்டவணையை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் நேரடி வெளிநாட்டு முதலீடு / ரீ.என்.சீ. புள்ளிவிபர அடிப்படை (www.unctad.org.fdistasticcs)
அ) 2011 ஆம் ஆண்டின் நேரடி வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல்களில் பாரிய அளவினை அடிப்படையாகக் கொண்டு தரப்படுத்தப்பட்டுள்ளது.
குறிப்பு : 2011 ஆம் ஆண்டில் எட்டாவது மட்டத்தை எட்டிய பிரித்தானியா வேர்ஜினியா தீவு பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.

❖ உலக நேரடி வெளிநாட்டு முதலீடுகளில் வெளிப்பாய்ச்சல் தொடர்பில் பிரதானமாக மனைப் பொருளாதாரம் 20 என்பதுடன் 397 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டி முதலாவது இடத்தில் அமெரிக்க ஐக்கிய இராச்சியம் நிலை கொண்டதுடன் 114 பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் 2வது இடத்தில் ஜப்பானும், 107 பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் 3வது இடத்தில் ஐக்கிய இராச்சியமும் நிலை கொண்டுள்ளது.

நேரடி வெளிநாட்டு முதலீடு ஐக்கிய இாரச்சியம் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் தொடராக 168% மற்றும் 104% ஆக அதிகரித்துள்ளது

❖ 2010 ஆம் ஆண்டில் 40 பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பீடு செய்யும்போது 2011 ஆம் ஆண்டில் 168% வளர்ச்சியினைக் காண்பித்து நேரடி வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்யச்சல் அதிகரிப்பினை உறுதிப்படுத்த ஐக்கிய இராச்சியத்திற்கு முடிந்துள்ளது.

❖ 2010 ஆம் ஆண்டில் 56 பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் 104% வளர்ச்சியினை பதிவுசெய்ய ஜப்பானுக்கு முடிந்துள்ளதுடன் முன்னைய ஆண்டில் 304 பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பீடுசெய்யும் 31% வளர்ச்சியினை எட்ட ஐக்கிய இராச்சியத்திற்கு முடிந்துள்ளது.

❖ 2010 ஆம் ஆண்டின் தொடராக 95 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் 69 பில்லியன் அமெரிக்க டொலர்களாக வரலாற்றில அதி உயரிய நேரடிவெளிநாட்டு வெளிப்பாய்ச்சலைரப் பெற்றுக்கொள்ள கொங்கொங் மற்றும் சீனா முடிந்துள்ளது. இருப்பினும் 2011 ஆம் ஆண்டில் தொடராக 14% மற்றும் 6% என்ற அடிப்படையில் நேரடி வெளிநாட்டின் குறைவு அந்நாடுகளில் பதிவாகி உள்ளன.

❖ முன்னைய ஆண்டில் 62 பில்லியன் அமெரிக்க டொலர்களான நேரடி வரலாற்று முதலீட்டு வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பீடு செய்யும்போது 73 பில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுக்கொண்டு 4% பங்குகளை சவீகரித்து 2011ஆம் ஆண்டில் நேரடி வெளிநாட்டு முதலீடு தொடர்பில் வரவேற்பைப் பெற்ற அனுசரணை நாடுகளாக அவர்களின் நிலைமைகளை தொடர்ந்தும் பலப்படுத்த மாற்றமடைந்து செல்லும் பொருளாதாரங்களுக்கு முடிந்துள்ளது.

❖ அவுஸ்திரேலியா, லக்ஸ்ம்பேக், அயர்லாந்து மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் கோளமயத் தரப்படுத்தல்களில் வீழ்ச்சியடைந்துள்ளதுடன் ஐக்கிய இராச்சியம், ஒஸ்ரியா, டென்மார்க் மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் 2011 ஆம் ஆண்டு முன்னணி மனைப் பொருளாதாரம் கொண்ட 20 நாடுகளில் அடங்குகின்றன.

# முதலீட்டு செயற்சாதனைகள்

## நிலைமைகளுக்கு அமைய செயற்றிட்டங்களின் விபரங்கள்

- **2012 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டங்களும் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளும்**

2012 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட மொத்த செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 232 ஆகும். இது 2011 ஆம் ஆண்டிற்கு இணைவாக 45% வளர்ச்சியினைக் காண்பிக்கின்றது. அங்கீகரிக்கப் பட்ட செயற்றிட்டங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த முதலீட்டு கையாளுகை 5,458 மில்லியன் அமெரிக்க டொலர் (696,406 மில்லியன் ரூபா) என்பதுடன் அது முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 64% வளர்ச்சியினைக் காண்பிக்கின்றது. 2012 ஆம் ஆண்டுக்காக அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்ட ங்கள் ஊடாக உருவான மதிப்பீடு செய்யப்பட்ட தொழில் வாய்ப்புக்களின் எண்ணிக்கை 55,120 ஆகும். இது முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 13% அதிகரிப்பினைக் காண்பிக்கின்றது.

***அட்டவணை 1 : 2012 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் முதலீடுகளின் வேலைவாய்ப்புப் பங்களிப்பு – பிரிவுகளுக்கமைய***

| துறைகள் | செயற்றிட்ட எண்ணிக்கை | முதலீட்டுக்கான பங்களிப்பு % | வேலை வாய்புக்களுக்கான பங்களிப்பு % |
|---|---|---|---|
| **சேவைகள் / உட்கட்டமைப்பு வசதிகள்** | **111** | **84%** | **53%** |
| வர்த்தக நிலையங்கள் மற்றும் அலுவலகக் கட்டிடத் தொகுதிகள் | 16 | 25% | 8% |
| ஹோட்டல், உணவக சேவை மற்றும் களியாட்ட கட்டிடத் தொகுதி | 28 | 18% | 14% |
| கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி (பாரிய கைத்தொழில் பேட்டைகள்) | 1 | 13% | 9% |
| வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தி | 14 | 7% | 8% |
| ஏனையவை | 52 | 21% | 13% |
| **உற்பத்தி** | **75** | **13%** | **32%** |
| விவசாயம் | 7 | 1% | 2% |
| நடைமுறைச் செயற்றிட்டங்களின் விரிவாக்கம் | 39 | 2% | 13% |
| மொத்தம் | **232** | **100%** | **100%** |

2012 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட மொத்த முதலீடுகளின் சேவை / உட்கட்டமைப்பு வசதிப் பிரிவின் அதியுயரிய பங்களிப்பு 84% மாகக் காணப்பட்டதுடன் உற்பத்திப் பிரிவில் 13% உம் விவசாயத் துறையில் 1% முமாகப் பங்களிப்புக்கள் செய்யப்பட்டுள்ளன. அங்கீகரிக்கப்பட்ட மொத்த முதலீட்டு அளவில் அமுலிலுள்ள செயற்றிட்டங்களை விரிவுபடுத்துவதற்காக 2% பங்களிப்புக்கள் வழங்கப்பட்டன. வர்த்தக மற்றும் அலுவலகக் கட்டிடத் தொகுதி (25%), ஹோட்டல், உணவகம் மற்றும் களியாட்டக் கட்டிடத் தொகுதி (18%) உம் பாரிய கைத்தொழில் பேட்டைகள் (13%), வீடமைப்பு மற்றும் ஆதன அபிவிருத்தி (7%) போன்றன சேவை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் பிரிவில் உள்ளடங்குகின்றன.

2012 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட வேலை வாய்ப்புக்கள் 53% சேவை / உட்கட்டமைப்புப் பிரிவில் 32% உம், உற்பத்திப் பிரிவில் 2% உம் விவசாயத் துறையிலும் உற்பத்திகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மூலம் மொத்த வேலைவாய்ப்புக்கள் 13% அமுலில் உள்ள செயற்றிட்டங்களை விரிவாக்குவதன் மூலம் உருவாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

2012 ஆம் ஆண்டில் இலங்கை முதலீட்டுச் சபையுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட மொத்த செயற்றிட்ட எண்ணிக்கை 163 என்பதுடன் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இது 9% வளர்ச்சியயினை (ரூபா அடிப்படையில்) எட்டி 3,178 மில்லியன் அமெரிக்க டொலர் (405,493 மில்லியன் ரூபா) இச்செயற்றிட்டத்திற்காக முதலீடு செய்யப்படவுள்ளது. செயற்றிட்டத்தின் மூலம் 38,000 இற்கு மேற்பட்ட தொழில்வாய்ப்புக்கள் உருவாகும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

- **2012 ஆம் ஆண்டின் நிர்மாண / அமுலிலுள்ள செயற்றிட்டங்கள்**

2012 ஆம் ஆண்டில் மொத்தமாக 105 புதிய செயற்றிட்டங்களும் செயற்றிட்ட விரிவாக்கல் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த முதலீடு 1,065 மில்லியன் அமெரிக்க டொலர் (ரூபா 135,953 மில்லியன்) என்பதுடன் எதிர்பார்க்கப்பட்ட தொழில்வாய்ப்புக்கள் 17,000 ஆகும்.

***அட்டவணை 2 : 2012 ஆம் ஆண்டில் நிர்மாண / அமுல்படுத்தப்பட்ட பிரதான 10 செயற்றிட்டங்கள் (மதிப்பீடு செய்யப்பட்ட முதலீடுகளின் அடிப்படையில்)***

| செயற்றிட்டத்தின் பெயர் | வர்த்தகச் செயற்பாடு | மதிப்பீடு செய்யப் பட்ட முதலீடு (ரூ.மி.) | மதிப்பீட செய்யப் பட்ட தொழில் வாய்ப்புக்கள் (எண்ணிக்கை) | அமைவிடம் |
|---|---|---|---|---|
| சங்கிரிலா ஹோட்டல் இலங்கை தனியார் கம்பனி | சொகுசு ஹோட்டல் | 44,880 | 432 | கொழும்பு |
| சங்கிரிலா முதலீட்டு இலங்கை தனியார் கம்பனி | சொகுசு ஹோட்டல் | 13,200 | 495 | அம்பாந்தோட்டை |
| மாஸ் பெப்ரிக்ஸ் தனியார் கம்பனி | பாதணிகள் | 10,519 | 1,419 | கேகாலை |
| ஹவுஸ் ஒப் பெசன்ஸ் மெகா மோல் தனியார் பம்பனி | பாரிய வர்த்தகக் கட்டிடத் தொகுதி | 4,500 | 405 | கொழும்பு |
| சொப்ட்லொஜிக் சிட்டி ஹோட்டல் தனியார் பம்பனி | ஐந்து நட்சத்திர ஹோட்டல் | 3,754 | 269 | கொழும்பு |
| வருன் வெவரேஜஸ் இலங்கை தனியார் பம்பனி | பான வகைகள் | 2,863 | 290 | |
| டாபர் இலங்கை தனியார் பம்பனி | பான வகைகள் | 2,783 | 122 | கம்பஹா |
| வாசன் ஹெல்கெயார் தனியார் பம்பனி | கண் வைத்தியசாலை | 2,775 | 700 | கொழும்பு |
| சுப்ரீமெசட் தனியார் பம்பனி | தொலைத் தொடர்பு வழங்கலுக்குரிய செய்மதித் தொகுதி | 2,090 | 68 | கொழும்பு |
| மெகா டென் பயோஎனேர்ஜி தனியார் பம்பனி | டென்ரோ சக்தி வலு நிலையம் | 1,713 | 74 | மொனராகலை |

**2012 ஆம் ஆண்டில் வர்த்தகச் செயற்பாட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டங்கள்**

2012 ஆம் ஆண்டில் மொத்தமாக 80 செயற்றிட்டங்கள் (புதிய 77 செயற்றிட்டங்கள் மற்றும் 3 விரிவாக்கல் செயற்றிட்டங்கள்) வர்த்தகப் பணிகளை ஆரம்பித்தன. இச்செயற்றிட்டங்களின் மொத்த முதலீடுகள் 255 மில்லியன் அமெரிக்க டொலர் (32,563 மில்லியன் ரூபா) என்பதுடன் இதன் மூலம் 16,000 இற்கு மேற்பட்ட தொழில்வாய்ப்புக்களை உருவாக்க எதிர்பார்க்கப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டில், வர்த்தகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட 80 செயற்றிட்டங்களில் 41 செயற்றிட்டங்கள் உற்பத்திப் பிரிவுக்கும், 37 செயற்றிட்டங்கள் சேவைப் பிரிவுக்கும் 2 செயற்றிட்டங்கள் விவசாயப் பிரிவிலும் அடங்குகின்றன. சேவைப் பிரிவின் 37 செயற்றிட்டங்களுக்கு உரியதாக 14 ஹோட்டல் மற்றும் 6 மின்சக்திச் செயற்றிட்டங்களும் அடங்குகின்றன.

## 2012 ஆம் ஆண்டில் கவர்ச்சிக்கு உட்படுத்தப்பட்ட நேரடி வெளிநாட்டு முதலீடுகள்

நேரடி வெளிநாட்டு முதலீடுகளில் 1 பில்லியன் அமெரிக்க டொலரினை விடக் கூடுதலான முதலீடுகளைப் பெற்ற தொடர்ச்சியான இரண்டாவது ஆண்டாக 2012 ஆம் ஆண்டு காணப்படுகின்றது. 2011 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட நேரடி வெளிநாட்டு முதலீட்டின் அளவான 1,066 மில்லியன் அமெரிக்க டொலருடன்

ஒப்பீடு செய்யும் போது 26% வளர்ச்சி இது வரையில் பதிவாகியுள்ளதுடன் அதியுயரிய நேரடி வெளிநாட்டு முதலீடான 1,338 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டு அளவு இவ்வாண்டில் பதிவாகியுள்ளது.

2012 ஆம் ஆண்டில் மொத்த நேரடி வெளிநாட்டு முதலீடுகளில் 308 மில்லியன் அமெரிக்க டொலர் (23%) அதியுயரிய நேரடி வெளிநாட்டு முதலீட்டு அளவு உற்பத்தித் துறைக்கு தொலைபேசி மற்றும் தொலைத்தொடர்புப் பிரிவுக்காக 242 மில்லியன் அமெரிக்க டொலரும் (18%) துறைமுக அபிவிருத்திக்காக 202 மில்லியன் அமெரிக்க டொலரும் (15%) நேரடி வெளிநாட்டு முதலீடு கிடைக்கப்பெற்றது.

மேலும் 2012 ஆம் ஆண்டில் விமானப் பிரயாண சேவைகளுக்காக இலங்கைக்குக் கிடைக்கப் பெற்ற நேரடி வெளிநாட்டு முதலீட்டின் அளவு 175 மில்லியன் அமெரிக்க டொலர் என்பதுடன் ஹோட்டல் செயற்றிட்டங்களுக்காக 117 மில்லியன் அமெரிக்க டொலர் (9%) கிடைக்கப்பெற்றது.

**நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் துறைசார் ஒப்பீடுகள் - 2012**

| துறை | நே.வெ.மு. (மி.அ.டொ) |
|---|---|
| உற்பத்தி | 308 |
| விவசாயம் | 7 |
| சேவைகள் | |
| தொலைபேசி மற்றும் தொலைத் தொடர்பு | 242 |
| துறைமுக அபிவிருத்தி | 202 |
| விமானப் போக்குவரத்து சேவைகள் | 175 |
| ஹோட்டல் மற்றும் உணவகம் | 117 |
| எரிபொருள், எரிவாயு, பெற்றோலியம் மற்றும் ஏனையவை | 66 |
| வீடமைப்பு, சொத்து அபிவிருத்தி மற்றும் வர்த்தகக் கட்டிடத் தொகுதி | 56 |
| மின்சக்தி உற்பத்தி | 30 |
| தகவல் தொழில்நுட்பம் மற்றும் செயற்றிட்ட அலுவலகம் | 26 |
| ஏனையவை | 109 |
| **மொத்தம்** | **1,338** |




**நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் பிரதான மூலங்கள் - 2012**

| நாடுகள் | நே.வெ.மு. (மி.அ.டொ) |
|---|---|
| ஹொங் ஹொங் | 259 |
| ஐ.அ.இ. | 214 |
| சீனா | 185 |
| இந்தியா | 160 |
| சிங்கப்பூர் | 88 |
| மொரிசியஸ் | 66 |
| நெதர்லாந்து | 56 |
| மலேசியா | 47 |
| ஐக்கிய இராச்சியம் | 38 |
| லக்சம்போர்க் | 37 |
| பிரித்தானிய வேர்ஜின் தீவுகள் | 33 |
| ஐக்கிய அமெரிக்கா | 27 |
| ஜப்பான் | 26 |
| கொரியக் குடியரசு | 18 |
| அவுஸ்திரேலியா | 15 |
| சுவிட்சலாந்து | 14 |
| கனடா | 14 |
| ஏனைய நாடுகள் | 41 |
| மொத்தம் | 1,338 |



2012 ஆம் ஆண்டில் நேரடி வெளிநாட்டு முதலீடுகளில் மிகப் பெரிய நாடாக 259 மில்லியன் அமெரிக்க டொலரினைப் பெற்றது ஹொங் ஹொங் இராச்சியம் ஆகும். 214 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்ற எமிரேட்ஸ் இராச்சியம் நேரடி வெளிநாட்டு முதலீடுகளில் இரண்டாவது இடத்தினையும் சீனா 185 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், இந்தியா 160 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், சிங்கபூர் 88 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் மொரிசியஸ் தீவுகள் 66 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், நெதர்லாந்து 56 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், மலேசியா 47 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் ஐக்கிய இராச்சியம் 38 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், லக்சன்பேர்க் 37 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் பிரித்தானிய வேர்ஜினிய தீவுகள் 33 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் அமெரிக்க ஐக்கிய இராச்சியம் 27 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் பெற்றுக் கொண்டுள்ளது. 2012 ஆம் ஆண்டில் மொத்த நேரடி வெளிநாட்டு முதலீடுகளில் 90% மானவற்ற இந்தப் பன்னிரண்டு நாடுகளும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தீர்க்கப்பட்ட முதலீடுகள் (திரண்ட)

2012 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்ட திரண்ட முதலீடுகள் 1,281 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்பதுடன் அது கடந்த ஆண்டுக்கு இணைவாக 24% அதிகரிப்பினை இது காண்பிக்கின்றது. தீர்க்கப்பட்ட முதலீடுகளாக 1281 பில்லியன் அமெரிக்க டொலர்களில் 65% (828 பில்லியன் ரூபா) வெளிநாட்டு உள்ளீடுகளை சித்தரித்துக் காட்டுவதுடன் எஞ்சிய 35% (453 பில்லியன் ரூபா) உள்நாட்டு தனியார் முதலீடுகளை பிரிநிதித்துவப்படுத்துகின்றது.

திரண்ட முதலீடுகள் 73% மானவை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைப் பிரிவுக்காக இருப்பதுடன் இதில் 27% ஆடைத்துறையை உள்ளடக்கும் உற்பத்திப் பிரிவில் அடங்குகின்றது.

## வேலைவாய்ப்புக்கள் (திரண்ட)

2012 டிசம்பர் மாதமளவில் இலங்கை முதலீட்டுச் சபையின் செயற்றிட்டங்களில் மொத்த திரண்ட வேலை வாய்ப்புக்கள் 457,986 எனப் பதிவாகியுள்ளது. இதில் 2011 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த திரண்ட வேலை வாய்ப்புக்கள் (உதாரணமாக 450,913) உடன் ஒப்பீடு செய்யும் போது இது 2% வளர்ச்சியினைக் காண்பிக்கின்றது. வேலைவாய்ப்புக்கள் 8,000 ஆக அதிகரித்துள்ளது.




இலங்கை முதலீட்டுச் சபையின் செயற்றிட்டங்களின் மொத்தத் திரண்ட வேலை வாய்ப்புக்கள் 62% ஆகும். துணிகள் மற்றும் ஆடை உற்பத்தித் துறையில் இது அடங்குகின்றது. 13% ஏனைய உற்பத்திகளில் அடங்குகின்றது. 8% பிரதேச வேலைத்திட்டம் மற்றும் ஏற்று மதிக்கான துறையாகும். மொத்தத் திரண்ட வேலை வாய்ப்புக்கள் 17% ஏனைய சகல பிரிவுகள் மூலமும் அதாவது (விவசாயம், கல்வி, சுற்றுலாக் கைத்தொழில், பயன்பாடுகள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அறிவுசார் சேவைகள் மூலம் பெறப்பட்டன)

# திணைக்களத்தின் செயற்சாதனைகள்

## பணிப்பாளர் நாயக செயலக அலுவலகம்

பணிப்பாளர் நாயகத்தின் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயக செயலக அலுவலகத்தினால் இணைப்புச் செய்யப்படுகின்றன.

மாதத்திற்கு இரு முறை பணிப்பாளர் சபைக் கூட்டங்களைக் கூட்டுதல், கூட்ட அறிக்கைகளைத் தயாரித்தல், பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கிடையே விநியோகித்தல் மற்றும் பணிப்பாளர் சபையின் தீர்மானங்களை உரிய பிரிவுக்கு அறிவித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் பொறுப்புக்கள் செயலக அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டில் 12 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மற்றும் விசேட பணிப்பாளர் சபைக் கூட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன. முகாமைத்தவ மற்றும் கொள்கை அடிப்படையிலான தீர்மானங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு மற்றும் அது சார்ந்த தகவல்களைச் சேகரிப்பது தொடர்பில் கவனஞ் செலுத்துதல், பணிப்பாளர் சபைத் தீர்மானங்கள் தொடர்பில் எதிர்காலப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாகவும் உறுதிப்படுத்துவது குறித்தும் செயலக அலுவலகத்திற்குப் பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டில் 12 முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

2012 ஆம் ஆண்டில் முதலீட்டாளர்களுக்கு அவர்களின் செயற்றிட்டங்களைத் துரிதகதியில் அமுல்படுத்துவதற்காகத் தேவையான அங்கீகாரங்களைத் தாமதமின்றி பெற்றுக் கொள்வதற்காக அரச அமைப்புக்களின் பிரதிநிதிகளின் இணைப்புக்களுடன் தேவையான சகல பணிகளையும் ஒரே இடத்தில் மேற்கொள்வதற்காக 6 கூட்டங்கள் பணிப்பாளர் நாயக செயலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டன. இதற்கமைய 2012 ஆம் ஆண்டில் தேவையான சகல பணிகளையும் ஒரே இடத்தில் மேற்கொள்வதற்காக 6 கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் 39 பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 12 பிரச்சினைகளைத் தீர்க்க முடிந்ததுடன் ஒரு சில பிரச்சினைகளை புதிய இடங்களைப் பெற்றுக் கொள்வதனை அடிப்படையாகக் கொண்டு மற்றும் ஒருசில பணிகள் பூர்த்தி செய்யாமையினால் நீக்கப்பட்டன. ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் எதிர்வரும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தலைவருக்கு / பணிப்பாளர் நாயகத்திற்குத் தேவையான உதவிகளை வழங்கி அமைப்பில் வெளி முகவர் நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையின் அமைப்புக்களின் செயற்பாடுகளில் பல்வேறுபட்ட பிரிவுகளை இணைப்புச் செய்வதும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படும் மற்றுமொரு பணியாகும். வருடாந்த அறிக்கையினை வெளியிடுவதற்கு உரியவாறு பல்வேறுபட்ட பிரிவுகளினால் தகவல்களைக் கோருதல் மற்றும் பெறப்படும் தகவல்களை பகுப்பாய்வுக்கு உட்படுத்துவது தொடர்பிலும் இப்பிரிவு பொறுப்புடன் செயற்படுதல் வேண்டும்.

உள்ளகப் பிரிவுகளின் மூலம் தகவல்களை வகுத்தல் மற்றும் பாராளுமன்றக் கேள்விகளுக்கு, பாராளுமன்ற ஆலோசனைச் செயற்குழுச் சபைக் கேள்விகளுக்கு மற்றும் வெளி அமைப்புக்களில் இருந்து பெறும் பல்வேறுபட்ட கோரிக்கைகளுக்கு சமகால அடிப்படையில் பதில்களைச் சமர்ப்பிப்பதும் இச்செயலகத்தின் பொறுப்புக்களாகும். ஆவணங்களைப் பரிமாற்றுதல் மற்றும் கூட்டங்கள் தொடர்பிலான இணைப்புக்களை மேற்கொள்வதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடன் இணைப்புக்களைப் பேணும் மத்திய நிலையமாக பணிப்பாளர் நாயக செயலக அலுவலகம் பணிகளை மேற்கொள்கின்றது. அமைச்சரவை விஞ்ஞாபனம், கொள்கை ஆவணங்கள் / அறிக்கைகளைத் தயாரிக்கும் பணிகள் மற்றும் செயற்றிட்டங்களுடன் தொடர்புபட்ட தடைகளை அகற்றுவதற்கு முதலீட்டாளர்களைச் சந்தித்தல் போன்ற பணிகளும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

## 1வது துறைசார் பிரிவுக்குரிய குழுக்கள்

**(சுற்றுலா வர்த்தகம், விவசாயம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் / அறிவுசார் சேவை)**

முதலாவது துறைசார் குழு சுற்றுலா வர்த்தகம் மற்றும் களியாட்டச் சேவைகள், விவசாய மற்றும் தகவல் தொழில்நுட்ப அறிவுசார் சேவைகள் ஆகிய மூன்று பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளன.

அ. விசாரணைகள் / விண்ணப்பித்தல் போன்ற கட்டங்கள் தொடக்கம் செயற்றிட்டத்தின் முழுமையான கால எல்லை பூராகவும் முதலீட்டாளர்களுக்குத் தேவையான சகல வசதிகளை வழங்குவதும் இத்துறைசார் குழுவினால் வழிகாட்டல்களை மேற்கொள்வது துறைசார் கேந்திரப் பிரிவின் பிரதான நோக்கமாகும்.

ஆ. முதலீட்டு முன்னிலைச் சேவைகளை இனங்காண்பதற்கு மற்றும் முதலீடுகளுக்கான சந்தர்ப்பங்களை விருத்தி செய்வதற்குரியதான பிரிவின் நிரல் அமைச்சு / உரிய முகவர் நிறுவனங்களுடன் இக்குழு செயற்படுகின்றது. முதலீடுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கும் முதலீட்டாளர்கள் ஏதேனும் ஒரு துறையில் முதலீடுகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்படும் பட்சத்தில் அக்குசுழு அவர்களின் பிரிவின் சகல முதலீட்டாளர்களுக்கான இணைப்புக்கள் முகாமையாளர்களாகச் செயற்றிட்ட மேற்பார்வை தொடக்கம் அமுல்படுத்தப்படும் வரையும் முதலீட்டுக்குப் பின்னரும், அது தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவர்களுக்குரிய பிரிவுகளின் தரப்பினர்களுடனான தொடர்பினை விருத்தி செய்யும் பிரிவு தொடர்பில் விரிவான அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கும் இதன் மூலம் அவர்களுக்கு முடிகின்றன.

**2012 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை கிடைக்கப்பெற்ற செயற்றிட்ட விண்ணப்பப்படிவங்கள் தொடர்பான விபரங்கள்**

| விபரங்கள் | சுற்றுலா வர்த்தகம் | விவசாயம் | தகவல் தொழில்நுட்பம் / அறிவுசார் சேவைகள் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| கிடைக்கப்பெற்ற புதிய விண்ணப்பங்கள் | 47 | 20 | 07 | 74 |
| விரிவாக்கத்துடன் வழங்கப்பட்ட செயற்றிட்ட அனுமதிகள் | 28 | 13 | 07 | 48 |
| கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் | 15 | 9 | 07 | 31 |
| ஆரம்பிக்கப்பட்ட செயற்பாடுகள் | 14 | 3 | 01 | 18 |



சமுத்ரா பீச் ரிசோட் தனியார் கம்பனி, கித்தருவ, கொஸ்கொட

வியூகத் திட்டமிடல் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ∴கலந்துரையாடல் மட்டத்திலுள்ள பாரிய செயற்றிட்டங்கள்.

1. ஐடிசி லிமிடட்

இந்தியாவிலுள்ள ஐடிசி லிமிடட் நிறுவனத்தினாரல் இலங்கை முதலீட்டுச் சபையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் 140 முதலீட்டாளர்கள் கொண்ட கலப்பு அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் யோசனைகள் இலங்கை முதலீட்டு சபைக்கு கையளிக்கப்பட்டது. இச்செயற்றிட்டம் கொழும்பிலுள்ள இலங்கை இராணுவத் தலைமையகத்திற்கு முன்னர் உரிமையாகியிருந்த காணி ஒருபகுதியில் தாபிக்கப்பட்டது. அது உயரிய தரத்திலான தங்குமிட வசதிகள் கொண்ட 300 அறைகள் 5 நட்சத்திர ஹோட்டல், சிறந்த மட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்கள் இச்செயற்றிட்டத்தில் அடங்குகின்றன. அத்துடன் இச்செயற்றிட்டத்தின் வியூக அபிவிருத்தித் திட்டம் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்அபிவிருத்திச் செயற்றிட்டத்திற்கு அமைய 2013 ஜனவரி மாதத்தில் பாராளுமன்றத்தினால் இச்செயற்றிட்டத்திற்காக தேவையான அங்கீகாரம் பெற்ப்பட்டது. செயற்றிட்டத்திற்காக இலங்கையில் தாபிக்கப்பட்ட கம்பனியான வெல்கம் ஹோட்டல் தனியார் கம்பனி மனையாக்க வரைபுகளை பூர்த்தி செய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ளது. செயற்றிட்டத்தின் நிர்மாணப் பணிகள் 2013 ஜுன் மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

2. சினோ லங்கா ஹோட்டல் என் ஸ்பா தனியார் கம்பனி

சினோ லங்கா ஹோட்டல் என் ஸ்பா தனியார் கம்பனியினால் (ஹையர் ரிஜன்ஸ் ஹோட்டல் மீள விரிவாக்கல் ) 158 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுடன் கொழும்பு 3இல் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த பல்துறைசார் ஹோட்டல் கட்டடத் தொகுதியாகும். உரிய அமைச்சுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களுக்குப் பின்னர் இச்செயற்றிட்டத்தின் வியூக அபிவிருத்தி செயற்றிட்டங்களாக இனங்காணப்பட்டது. சுமார் 475 அறைகள் சேவைக்காகப் பயன்படுத்தக் கூடிய 90 இணைந்த வீடுகள், பல்வகை உணவகங்கள், விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிக்காக அமைக்கப்பட்ட மண்டபம் மற்றும் ஸ்பா வசதிகள், ஸ்கை லொவி, திருமண விழா மற்றும் கூட்ட மண்டப வசதிகள் இதில் அடங்கியுள்ளதுடன், சகல நவீன வசதிகளும் கொண்ட 30 மாடிகளாக சொகுசு நகர வர்த்தக ஹோட்டல் கொழும்பு, காலி வீதியில் நிர்மாணிப்பதற்காக இச்செயற்றிட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. கொழும்பு ஹெயட் ரிஜன்சி ஆகிய வர்த்தகப் பெயரின் கீழ் “கைட் ஹோட்டல் என்ட் ரிசோஸ்” மூலம் இந்த ஹோட்டல் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. இச்செயற்றிட்டம் அமுல்படுத்தப்படும் கட்டத்தில் இருப்பதுடன் 2014 செப்டம்பர் மாதத்தில் வர்த்தகச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**முதலாவது துறைசார் குழுவின் விடயப் பரப்பின் கீழ் உட்படும் முதலீடுகள் தொடர்பாக கண்டறிவதற்கு 2012ஆம் ஆண்டுக்குள் கீழ் கூறப்பட்ட பிரதான கம்பனி / குழு இலங்கைக்கு வருகை தந்துள்ளது.**

**<u>சுற்றுலா வர்த்தகப் பிரிவு</u>**

1 இந்தியாவில் 80 கேந்திர நிலையங்களில் 100 ஹோட்டல்களைவிட கூடுதலான ஹோட்டல்கள் கொண்ட இந்தியாவின் மிகப் பெரிய ஹோட்டல் வலையமைப்பான இந்திய ஐடிசி தனியார் நிறுவனம் இலங்கை முதலீட்டு சபையுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து ஐந்து நட்சத்திர ஹோட்டல் ∴ கலப்பு அபிவிருத்திக்காக அவர்களின் முதலாவது சர்வதேச கேந்திர நிலையமாக இலங்கையைத் தேர்ந்தெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து 2012 ஜனவரி மாதத்தில் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. .

2 பேருவளைப் பிரதேசத்தில் 83 அமெரிக்க டொலர் முதலீடுகளைக் கொண்ட பாரிய அபிவிருத்தி செயற்றிட்டத்தைத் திட்டமிடுவதற்காக LOLC லெசர் தனியார் கம்பனியினால் செயற்றிட்ட யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டன. சேவை வழங்கல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட வீடுகள், மாடி வீட்டு கட்டத் தொகுதி, வர்த்தக களியாட்டத்திற்கான கட்டத் தொகுதியும், 500 அறைகள் ஹோட்ட சர்வதேச வரவேற்பு மண்டபம், வர்த்தக பெயர் கொண்ட முழுமையாக இணைந்த 5 நட்சத்திர விடுமுறை விடுதியும் இச்செயற்றிட்டத்தில் அடங்குகின்றது. இச்செயற்றிட்டம் 3½ வருடங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட உள்ளது. .

3 டுபாய் மற்றும் ஐக்கிய அரபு எமிரெட் நாடுகளில் அமுலிலுள்ள “எம்எஸ் என்ட் என் லைப்ஸ் ஸ்டைல் “ மூலம் 5 நட்சத்திர “வெல்னஸ் ரிசோட்” திட்டமிடுவதற்கான செயற்றிட்ட யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இது 31 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுன் “நியூ லைப் ரிசோஸ் எல்எல்சி” என்ற பெயரில் 100 சதவீத வெளிநாட்டு உரிமையுடன் அம்பாந்தோட்டையில் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. 45 சொகுசு அறைகளைப் போன்ற சகல நவீன வசதிகளும் கொண்டதாக 100% சுற்றுலா இல்லங்களும் இச்செயற்றிட்டத்தில் அடங்குகின்றன.

4 ஆம்பாந்தோட்டை, தங்கல்லையில் 40.5 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடுகளை மேற்கொள்ளும் எதிர்பார்ப்புடன் 158 அறைகள் கொண்ட சொகுசு சுற்றுலா விடுதிகளை நிர்மாணிப்பதற்காக ஆசிய பசுபிக் வலயத்தின் சுற்றுலாப் பிரயாணிகளுக்கு உபசரணைகள் மற்றும் ஓய்வீனைக் களிப்பதற்காக வசதிகளை வழங்கும் மிகப் பெரிய கம்பனிகளில் ஒன்றான தய்லாந்து “ மைனர் இன்டநெஷனல் சிசிஎல் கம்பனி” ஹேமாஸ் ஹோல்டின்ஸ் பிஎல்சி” உடன் இணைந்த கம்பனியான “பீஸ் ஹேவன் ரிசோஸ் லிமிடட்” இணைந்த செயற்றிட்ட அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது.

5 உலகின் மிகவும் கவர்ச்சிமிக்க இடங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பாக பிரபல்யம் பெற்றுள்ள சொகுசு சுற்றுலா இல்லத் தோட்டங்களின் உரிமையாளர்களான ஐக்கிய அமெரிக்க எமிரெட் இராஜ்சியத்தின் “எனி விலாஸ் இன்டநெஷனல்” கம்பனியினால் டிக்வெல்ல பிரதேசத்தில் 8 மில்லியன் அமெரிக்க டொலர் மில்லியன் முதலீட்டுன் சொகுசு சுற்றுலா இல்லம்கொண்ட விடுமுறை விடுதியினை திட்டமிடுவதற்காக செயற்றிட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது,

6 கொழும்பு 7 வேல்ஸ் பிளேசில் 17 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுடன் 70 அறைகள் சேவைகளை வழங்குதல் தொடர்பில் இணைந்த 28 வீடுகள் கொண்ட 4 நட்சத்திர சொகுசு விடுமுறை விடுதியினை நிர்மாணிப்பதற்கு நாட்டின் 11 சொகுசு ஹோட்டல்களைக் கொண்ட இலங்கையின் மிகப் பெரிய ஹோட்டல் வலயமைப்புக்களில் ஒன்றான “ஜெட் விங்ன் குறுப் கம்பனி” மேலும் செயற்றிட்டத்திற்கான விண்ணப்படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. செயற்றிட்டம் தற்போது நிர்மாணிக்கும் நிலையில் காணப்படுவதுன் 2014ஆம் ஆண்டில் இதன் செயற்பாட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

7 30 மில்லியன் அமெரிக்க டொலருடன் சர்வதேச கொல்ப் மைதானத்தைத் திட்டமிடும் இயலுமைகள் தொடர்பாகக் கண்டறிவதற்கு சுவீடன் கம்பனியான “பெரு பேன்” மற்றும் அவர்களின் உள்நாட்டு முகவர் நிறுவனம் இலங்கையில் முதலீட்டு சபைக்கு வருகை தந்தது. குச்சவேலி, பாசிக்குடா மற்றும் கிழக்குக் கரையோரத்தின் ஏனைய இடங்களை பார்வையிட்டதைத் தொடர்ந்து அக்கம்பனி இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இலங்கை முதலீட்டு சபையின் சுற்றுலா வர்த்தகத்துடன் இணைந்து கலந்துரையாடல்களை மேற்கொண்டது.

8 பலசுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டதன் பின்னர் பங்களாதேஷ் “பெளிசியுலா, சிட்டகோன்”இன் சிரேஷ்ட அதிகாரிகள் 2012 ஒக்டோபர் மாதத்தில் இலங்கை முதலீட்டு சபைக்கு வருகை தந்தனர். 10 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்ய 4 நட்சத்திர ஹோட்டல்கள் மற்றும் களியாட்டம் உபசரணைகள் வழங்கப்படும் மத்திய நிலையத்தை திட்டமிடுவதற்காக இவர்கள் இலங்கையின் தென் கரையோரப் பிரதேசத்தைப் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

9 தென்கொரியாவின் “புன்ஜின் பியுரீ இன்டநெஷனல் கம்பனி”

10 இந்தோனேசியாவின் பாலி உதாபாவிலுள்ள “பி.டி. பெனோராமா டிவலப்மென்ட் கம்பனி”

11 ஹைதராபாத்திலுள்ள “சரோவர் குறூப் “ இன் மன்ஜீரா ஹோட்டல் என் ரிசோர்ஸ் கம்பனி

12 கனடா “ சிடி மெக்ஸ் ஹோட்டல்” கம்பனி

13 BHD, SDN “சூப்பர் லேன் வேல் வைட்” கம்பனி

<u>விவசாயப் பிரிவு</u>

1. ஐக்கிய அரபு எமிரேட் கம்பனியின் “ பைன் கில் ஸ்ரீம்ஸ் கெப்பிடெல், எல்எல்சி” கம்பனியை பிரதிநிதித்துவப்படுத்தி பால் உற்பத்திப் பிரிவில் முதலீட்டுக்கான சந்தர்ப்பங்கள் குறித்து கண்டறிவதற்காக தூதுக் குழுவினர் இலங்கை முதலீட்டு சபைக்கு வருகை தந்தனர்.

2. 100 சதவீத வெளிநாட்டு முதலீட்டுடன் 22 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு செய்து 500 தொழில் வாய்ப்புச் சந்தர்ப்பங்களை உருவாக்கி டிக்கோவிட பிரதேச கடற்றொழில் கைத்தொழில் தொடர்பான செயற்றிட்ட திட்டங்களுக்காக “ நியூலென் பிசரி தனியார் கம்பனி” பிரதிநிதிகள் இலங்கை வருகை தந்தனர்.

3. ஹோங்கொங் இராஜ்சியத்தின் “பென் பில் தனியார் கம்பனி” கந்தளை சீனி கைத்தொழில்சாலையைப் பொறுப்பேற்பதற்கான விலைமனுக்களைச் சமர்ப்பித்தது.

4. 2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மேற்பட்ட நிலையான முதலீடுகளை மேற்கொண்டு அனுராதபுரத்தில் தாபிக்கவுள்ள ஆலையைத் திட்டமிடுவதற்காக “ எக்ஸ்செப் ஹேன்ஸ்” தனியார் கம்பனி முன்வந்துள்ளது.

5. தம்புல்லையில் அமுல்படுத்தப்படவுள்ள 4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மேற்பட்ட முதலீடுகள் கொண்ட பால் செயற்பாட்டு தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதற்கு “சிஜசி அக்ரி பிஸ்னஸ் “ தனியார் கம்பனி முன்வந்துள்ளது.

<u>தகவல் தொழில்நுட்பம் / அறிவுசார் சேவைப் பிரிவு</u>

1. 4.4 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடுகளை மேற்கொண்டு புதிதாக 100 தொழில் வாய்ப்புக்களை உருவாக்கக் கூடிய வெளிநாடுகளில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளுக்காக வர்த்தக செயற்பாடுகள் வெளி நிறுவனங்களில் இருந்து மேற்கொள்வதற்கான சேவைகள் மற்றும் அறிவுசார் செயற்பாடுகளை வெளி நிறுவனங்களினால் மேற்கொள்ளும் சேவைகளுக்கான ஏற்றுமதி சந்தை வாய்ப்புக்களுக்காக கணனி மென்பொருள் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பான செயற்றிட்ட யோசனை அவுஸ்திரேலியாவின் “பிஸ்னஸ் பேமன்ட் சேவிசஸ்” தனியார் கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்டது.

2. 1.25 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடுகளை மேற்கொண்டு 200 தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் வகையில் ஏற்றுமதி சந்தைக்காக மானிடவள மற்றும் வர்த்தக செயற்பாடுகளை வெளி நிறுவனங்களில் நிறைவேற்றிக் கொள்வதற்காக சேவை வழங்கலுக்கான செயற்றிட்ட திட்டமிடல்களை மேற்கொள்வதற்கு ஐக்கிய இராஜ்சியத்தின் விண்ணப்பதாரர்களினால் விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட்டது,

3. 500 பேர்களைவிட கூடுதலான ஊழியர்களைப் பயன்படுத்தி ஏற்றுமதி சந்தை வாய்ப்புக்காக தகவல் தொழில்நுட்பம் வர்த்தக செயற்பாடுகளை வெளி நிறுவனங்களில் இருந்து மேற்கொள்வதற்காக சேவைகள் தொடர்பாக செயற்றிட்டங்களை திட்டமிடுவதற்காக ஐக்கிய இராஜ்சியத்தின் “ பாக் லேஸ் கெப்பிட்டல் கம்பனி” உடன் கலந்துரையாடப்பட்டது.

4. நிதி நிறுவனம், கூட்டுத்தாபனங்கள் மற்றும் கைத்தொழிற்சாலைகளின் விசேட சந்தைக்காக தொழில் முயற்சி கொடுப்பனவு செயற்பாடுகளுக்காக தீர்வுகளை வழங்கும் பிரதான நிறுவனமான அவஸ்திரேலியாவின் “பேகொப் பேமன்ட் சேலுசன்ஸ்” தனியார் கம்பனியினால் 4.4 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடுகளை மேற்கொள்ளும் எதிர்பார்ப்புடன் 100 தொழில் வாய்ப்புக்களை வழங்கும் எதிர்பார்ப்புடன் இலங்கையின் அறிவுசார் செயற்பாடுகளை வெளி நிறுவனங்களில் இருந்து மேற்கொள்வதற்காக சேவை கையாள்கைகளுக்காக செயற்றிட்ட யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

5. “எஸ்எல்கே குலோபல் பி.பி.ஓ சேவிசஸ் தனியார் கம்பனி “ மூலம் 3 மில்லியன் அமெரிக்க டொலர்களை மேற்கொண்டு 500 தொழில்வாய்ப்புக்களை உருவாக்கக் கூடிய ஏற்றுமதி சந்தைக்கான வர்த்தக செயற்பாடுகளை வெளி நிறுவனங்களில் இருந்து மேற்கொள்ளும் சேவைகள் மற்றும் பொதுமக்கள் உட்பட நேரடியாக தொடர்புபடாத சேவைகளைத் திட்டமிடுவதற்காக விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

<u>முதலாவது துறைசார் குழுவின் வெளிநாட்டு ஊக்குவிப்புக் பணிகள்</u>

2012ஆம் ஆண்டில் முதலாவது துறைசார் குழுவினால் எந்தவொரு வெளிநாட்டு செயற்பாடுகளைத் திட்டமிடல் அல்லது அமுல்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.

<u>நிறுவனத்தினால் இலங்கைக்கு வரவழைக்கப்பட்ட வெளிநாட்டு தூதுக் குழுவினர்</u>

1. “கட்டார் ஹோல்டின் கம்பனி” மற்றும் இலங்கை முதலீட்டுச் சபைக்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டப்பட்டதைப் போன்று இலங்கை அரசுடன் ஏனைய புரிந்துணர்வு உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்காக கட்டார் இராஜ்சியத்தினால் அமீர் செக் பிந் கலிபா அல் தானியின் தலைமையில் கட்டார் இராஜ்சியத்தின் பிரதிநிதிகள் இரு நாள் உத்தியோபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்தனர்.

2. மலேசிய இலங்கை அமைப்பின் மாநாடு (FOMSO) இலங்கையில் முதலீட்டுக்கான சந்தர்ப்பம் தொடர்பான இயலுமைகளைக் கண்டறிவதற்காக 2012 ஜனவரி மாதத்தில் இலங்கை முதலீட்டு சபைக்கு வருகை தந்தனர்.

3. 12 அங்கத்தவர்களைக் கொண்ட இந்திய கைத்தொழில் அமைப்பின் வர்த்தக தூதுக் குழுவினர் 2012 மார்ச் மாதம் 27 – 30 இடைப்பட்ட கால எல்லையில் இலங்கை முதலீட்டு சபைக்கு வருகை தந்தனர். அமுலிலுள்ள முதலீட்டுக்கான சந்தர்ப்பங்கள் தொடர்பாக உரிய விடயங்கள் இலங்கை முதலீட்டு சபையினால் சமர்ப்பிக்கப்பட்டது. ஊற்பத்தி, ஒடோ இலக்ரிகல், தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் தொடர்பான கல்வி, சுகாதார சேவைகள், இலத்திரனியல் உபகரண ஏற்றுமதி மற்றும் இறக்குமதி, சற்றுலா வர்த்தகம் மற்றும் உபசரணை சேவைகள் போன்ற பிரிவுகள் குறித்தும் நவீன வர்த்தக சந்தர்ப்பங்கள் குறித்தும் கண்டறிவதற்காக கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

4. ஐக்கிய இராச்சியத்தின் “பேக் லேஸ் கெப்பிடல் கோல்டின்ஸ்” தனியார் கம்பனி பிரதிநிதிகள் இலங்கையின் நிதி மற்றும் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் உத்தியோகத்தர்களுடன் இலங்கை முதலீட்டு சபைக்கு வருகை தந்தனர். துகவல் தொழில்நுட்பம், வர்த்தகசெயற்பாடுகளை வெளிநிறுவனங்களால் மேற்கொள்ளும் சேவை தொடர்பாக முதலீடுகளை மேற்கொள்வதற்காக சந்தர்ப்பங்களைக் கண்டறிவதற்காக 2012 ஏப்ரல் மாதத்தில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

5. ஆமெரிக்க ஐக்கிய இராச்சியத்தின் கலிபோனியா “குலோபல் எலைன்ஸ்: கம்பனியின் பிரதிநிதிகள் இலங்கையின் கோளமய செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்காக அமுலிலுள்ள வர்த்தகத்திற்கான

சந்தர்ப்பங்கள் குறித்து கண்டறிவதற்காக 2012 ஏப்ரல் மாதத்தில் இலங்கை முதலீட்டு சபைக்கு வருகை தந்தனர்.

6. பிலிப்பைன்ஸ் விவசாய, அகழ்வு, மின்சக்தி, எரிசக்தி, சுற்றுலா கைத்தொழில் மற்றும் ஓய்வினைக் களித்தல், கல்வி ஆகிய துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஐந்து பேர்களைக் கொண்ட வர்த்தக பிரதிநிதிகள் இலங்கை முதலீட்டு சபை தொடர்பில் கண்டறிவதற்காக 2012 ஏப்ரல் மாதத்தில் இலங்கை முதலீட்டு சபைக்கு வருகை தந்தனர்.

7. மலேசிய வர்த்தக மற்றும் கைத்தொழில் தொடர்பான வர்த்தக மற்றும் முதலீட்டுப் பிரநிதிகள் 2012 ஜூலை மாதம் 1- 6 வரையான காலப் பகுதியில் இலங்கை முதலீட்டு சபைக்கு வருகை தந்தனர்.

8. இலங்கையின் முதலீட்டுக்கான சந்தர்ப்பங்கள் தொடர்பில் கண்டறிவதற்கு மற்றும் இலங்கையில் கம்பனிகளுடன் பங்குடமை வர்த்தகங்களில் ஈடுபடும் நோக்குடன் 2012 செப்டம்பர் மாதத்தில் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான கௌரவ பிரதியமைச்சரின் தலைமையில் இலங்கைக்கான தென்கொரிய தூதுவர் கௌரவ ஜெப் டொயிஸ், ஏஎன்சி தேசிய இணைப்பு மற்றும் ஏ.என்சியின் 30 உத்தியோகத்தர்கள் உட்பட தென்னாபிரிக்காவின் தொழில் முயற்சியாளர்களைக் கொண்ட அதிஉயரிய பலம் கொண்ட பிரதிநிதிகள் இலங்கை முதலீட்டு சபைக்கு வருகை தந்தனர். தென்னாபிரிக்கா சுற்றுலா பிரதிநிதிகள் நிர்மாண கைத்தொழில்கள், போக்குவரத்து, உபசரணை சேவை நிர்மாண கைத்தொழில்கள், போக்குவரத்து, உபசரணை சேவை சுற்றுலா வர்த்தகம் / சுற்றுலா வர்த்தகம் பொறியியல் கைத்தொழில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் மென்பொருள் அபிவிருத்தி உட்பட விரிவான பரம்பல் கொண்ட பிரிவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. இலங்கை முதலீட்டு சபையின் புதிய முன்னணி சேவைப் பிரிவு, வியூக புரிந்துணர்வு செயற்றிட்டம் உட்பட இலங்கை முதலீட்டு சபையின் ஏற்றுமதி செயற்பாட்டு வலயம் மற்றும் நாட்டில் தற்போது காணப்படும் சுதந்திர வர்த்தக சூழல் தொடர்பாகவும் இலங்கை முதலீட்டு சபையின் பல பணிப்பாளர்களினால் விளக்கங்கள் வழங்கப்பட்டன.

9. முன்னணி கைத்தொழிலாளர்கள் உட்பட இந்தியாவின் கைத்தொழில் அமைப்பின் (CII) 13 அங்கத்வர்களைக் கொண்ட பிரதிநிதிகள் 2012 நவம்பர் மாதத்தல் இலங்கை முதலீட்டு சபைக்கு வருகை தந்தனர். இலங்கையினால் முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் சந்தர்ப்பம் தொடர்பாகவும், துரித அபிவிருத்தி கண்டுவரும் வர்த்தக சூழல் தொடர்பாகவும் முதலீடு செய்யக்கூடிய முதனிலை பிரிவுகள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு வழங்கும் வசதிகள் உட்பட ஊக்குவிப்புக்கள் தொடர்பாகவும் முதலீட்டு சபையினால் விளக்கம் அளிக்கப்பட்டது. இலங்கையின் மோட்டார் வாகன உற்பத்தி, தகவல் தொழில்நுட்ப கைத்தொழில், மின்சக்தி செயற்றிட்டம், இணைந்த வர்த்தக பேட்டை அபிவிருத்தி உட்பட அசையா சொத்துக்கள், குளிரூட்டல் மற்றும் பான உற்பத்திகள் போன்ற பிரிவுகளில் முதலீடுகளை மேற்கொள்ள இந்திய கம்பனிகளுக்குக் காணப்படும் இயலுமைகள் தொடர்பாக இலங்கை முதலீட்டு சபையுடன்நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் போது விசேடமாக கவனம் செலுத்தப்பட்டது.

<u>முதலாவது துறைசார் குழு ஊக்குவிப்புச் செயற்பாடுகள்</u>

1. முதலீடு துறை தொடர்பாக இலங்கை முதலீட்டு சபை மற்றும் கட்டார் இராச்சியத்திற்கு இடையே ஒத்துழைப்பினை எட்டும் நோக்குடன் இணக்கப்பாட்டிற்கு அமைய ஜனவரி மாதத்தில் "கட்டாரி ஹோல்டின்ஸ் கம்பனி" மற்றும் இலங்கை முதலீட்டு சபைக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

2. நவீன முதலீட்டுச் செயற்றிட்டங்கள் மற்றும் தற்போதுள்ள கம்பனிகளுக்காக 2011 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய முதலீட்டு ஊக்குவிப்புக்கள் தொடர்பாக அறிவுறுத்தும் நோக்குடன் 2012 மார்ச் மாதத்தில் இலங்கை முதலீட்டு சபையுடன் முதலாவது துறைசார் குழுவினால் மலேசிய முதலீட்டு கூட்டமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டது. சபையின்

ஏனைய உத்தியோகத்தர்களுடன் மலேசிய ஒத்துழைப்புடன் இலங்கையில் செயற்படும் மலேசிய கம்பனி மற்றும் ஏனைய கம்பனிகளும் மலேசிய உயர்ஸ்தானிகர் உட்பட அரச பிரதான உத்தியோகத்தர்களும் இந்நிகழ்வில் பங்கேற்றனர். பதில் நிறைவேற்றுப் பணிப்பாளர் (முதலீட்டு ஊக்குவிப்பு) இலங்கை முதலீட்டு சபையினால் வழங்கப்படும் வசதிகள் பணிகள் தொடர்பாக விளக்கமளித்ததுடன், கேள்விகளைக் கேட்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்தே விளக்கங்கள் வழங்கப்பட்டன.

3. முதலாவது துறைசார் குழு உத்தியோகத்தர்கள் 2012 மார்ச் - ஏப்ரல் கால எல்லைக்குளக் நடத்தப்படும் "மெகா எக்ஸ்போ 2012" கண்காட்சியில் இலங்கை முதலீட்டு சபை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்றனர். கண்காட்சியைப் பார்வையிட செல்வதற்கு முன்னர் அநேகமான தூதுக் குழுவினரும் இலங்கை முதலீட்டு சபை தகவல்களை பங்கீட்டுக் கொண்டதுடன் துறைசார் அடிப்படையில் இலங்கை முதலீட்டு சபையுடன் விசேட கலந்துரையாடல்களும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தன. இக்கண்காட்சி இடம்பெற்ற காலத்திற்குள் சிங்கப்பூர், மலேசியா, கனேடிய மற்றும் இந்திய தூதுக் குழுவினர் இலங்கை முதலீட்டு சபை வருகை தந்ததுடன், பயன்மிக்க, அதிசிறந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளுடன் இலங்கையில் உருவாகியுள்ள முதலீட்டுக்கான சலுகைகள் மற்றும் சிறந்த சூழல் தொடர்பாக உரிய தகவல்களை வழங்குவதற்கான சந்தர்ப்பமாக இந்த சந்திப்பு முதலீட்டு சபைக்குக் கிடைத்தது.

4 பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்ட "இன்வேஸ் ரேட்" முதலீடு மற்றும் வர்த்தகக் கண்காட்சிக்கு இணைவாக முதலாவது துறைசார் குழுவினால் 2012 ஏப்ரல் 26ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை நடத்தப்பட்ட 3 நாள் கருத்தரங்கிற்காக இந்திய வர்த்தக உத்தியோகத்தர்கள் வருகை தந்து பங்கேற்றதுடன், "இலங்கையில் காணப்படும் முதலீட்டுக்கான சந்தர்ப்பங்கள்" என்ற தொனிப்பொருளில் உரிய விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. நிர்மாணத்துறையில் முதலீடுகளை மேற்கொண்ட 50 மேற்பட்ட இந்திய கம்பனிகள் இணக்கம் தெரிவித்ததுடன், வேறு இந்திய தரப்பினர்களும் மற்றும் ஆர்வம் கொண்டோர் சுற்றுலா சார்ந்த வர்த்தகக் கூட்டங்களில் பங்கேற்றனர்.

5. ஏற்பாட்டாளர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட அழைப்பிற்கு அமைய புலமைப்பரிசில் பற்றி தற்போது சிங்கப்பூரில் தங்கியுள்ள நிறைவேற்றுப் பணிப்பாளர் (முதலாவது துறை) 2012 மே மாதத்தின் சிங்கப்பூர் - இலங்கை வர்த்தக சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட "இலங்கையில் முதலீட்டுக்கான வலுவூட்டல்கள் " என்ற தொனிப்பொருளில் இலங்கை வர்த்தக சங்கத்தின் முதலீட்டாளர்களுக்காக நடத்தப்பட்ட கருத்தரங்குத் தொடரில் பங்கேற்று உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டன. இதன்போது முதலீட்டுக்கான ஒத்துழைப்புக்களும் இலங்கையில் முதலீட்டுக்கான சூழல் மற்றும் முதலீட்டு சபையின் பணிகளைப் போன்று இலங்கையில் தற்போது காணப்படும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த செயற்றிட்டங்கள் தொடர்பாக சமூகத்தை அறிவுறுத்தும் நோக்கும் இலங்கை முதலீட்டு சபையினால் மேற்கொள்ளப்படும் பணிகளைப் போன்று நாட்டின் அபிவிருத்திக்காக இதன்மூலம் பெறக்கூடிய அழுத்தங்கள் தொடர்பாகவும் விளக்கமாகவும், திருப்திகரமாகவும் உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

6. 2012 ஜூலை மாதத்தில் நடத்தப்பட்ட துறைமுக,வர்த்தக மற்றும் விநியோக மாநாட்டில் தெற்காசிய வலயத்தின் பிரதம சமுத்திர மற்றும் கடற்படை மத்திய நிலையத்திற்கு நியமனத்திற்காக இலங்கையில் காணப்பட்ட இயலுமைகள் தொடர்பாக விளக்கமாக முறையில்மற்றும் கவர்ச்சிகரமாக முறையில் உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டன. பதில் நிறைவேற்றுப் பணிப்பாளர் (முதலீட்டு ஊக்குவிப்பு) இவ்வமர்வில் பிரதம மந்திரியாகக் கலந்து கொண்டதுடன், இலங்கையின் முதலீட்டு சபையின் முக்கியத்துவம் மற்றும் யுத்தத்திற்குப் பின்னரான சமாதானம் உருவாகி முதலீட்டுக்காக காணப்படும் சந்தர்ப்பங்கள் தொடர்பாகவும் உரிய விடயங்களை அவர்கள் மூலம் சமர்ப்பிக்கப்பட்டன.

7. 2012 டிசெம்பர் மாதத்தல் நடத்தப்பட்ட "2012 ஆம் ஆண்டின் கோளமய வரத்தக விசேட நிகழ்வு" சமர்ப்பிப்பது தொடர்பிலான பணிகளில் இலங்கை முதலீட்டு சபை / முதலாவது துறைசார் குழு ஈடுபட்டதுடன், இலங்கையின் கடற்படை எகடமி இலங்கை மத்திய வங்கி, இலங்கை துறைமுக அதிகார சபை, இலங்கை விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் அதிகார சபை மற்றும் இலங்கை முதலீட்டு சபையுடன் இணைந்து ஒழுங்கு செய்யப்பட்டது. கடந்த காலங்களில் மிக முக்கியத்துவமான பணிகளை மேற்கொண்டது போன்று எதிர்காலத்திலும் விசேட பணிகளை நிறைவேற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. விசேடமாக ஏற்றுமதி மீது மக்களின் ஆழமான கவர்ச்சியுடன் உற்பத்தி மற்றும் சேவைகள் தொடர்பாக உரிய பணிகள் கம்பனியினால் இனங்காணப்பட்ட அக்கம்பனிகளுக்கு பொது மேடையொன்றில் விருது வழங்குவதும் இந்நிகழ்வின் பிரதான பொறுப்பாக அமைந்திருந்தது. விருது பெறும் நிறுவனங்களில் கூடுதலான நிறுவனங்கள் இலங்கை முதலீட்டு சபை சங்கமாகும்.

8. துறைசார் குழுவின் அங்கத்தவர்களின் உதவியுடன் ஆராய்ச்சி மற்றும் கொள்கை ஆலோசனை விளக்கங்கள் மூலம் தயாரிக்கப்பட்ட வெளிப்பாடுகள் நியமிக்கப்பட்டுள்ள முழுமையான முதலீட்டுத் தகவல்கள் உள்ளடங்கக் கூடிய 9 பிரிவினருக்கு கையேடுகளுடன் முதலீட்டு சபை வழிகாட்டல்களுக்கான ஊக்குவிப்புக் கருவியாக எதிர்கால முதலீட்டாளர்களுக்காக வழங்கப்படவுள்ளது.

9. தற்போது அமுலிலுள்ள சுற்றுலா செயற்பாடுகளை துரிதப்படுத்துவதைப் போன்று அதற்கான தடைகளை நீக்குவதற்கான நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு அதிகார சபையில் நடத்தப்பட்ட ஒரே இடத்தினில் சகல சேவைகளையும் பெற்றுக் கொள்ளும் பிரிவின் சுற்றுலாத் துறை கூட்டத்திற்காக சுற்றுலா துறையின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

10. பிரதான கோளமய முகாமைத்துவ ஆலோசனை வர்த்தகக் கம்பனியான "ஏ.ரீ.கோ்னி" கம்பனியினால் ஏனைய பிரதான அறிவுசார் சேவைகளை வழங்கும் கம்பனிகளுக்கு இணைவாக இலங்கை தரத்திற்கு அமைய ஒப்பீட்டு மதிப்பீடுகளுக்காக அவர்களது கண்டுபிடிப்புக்கள் 2012 மார்ச் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. போட்டிகரமான முறையில் தரத்திற்கு அமைய ஒப்பீடுகளை மேற்கொண்டு மதிப்பீடு இலங்கை அறிவுசார் சேவையின் அறிக்கை, தகவல் தொழில்நுட்பப் பிரிவு தொடர்பான விளக்கமான கற்கை இலங்கை முதலீட்டு சபையின் / தகவல் தொழில்நுட்பப் பிரிவின் வளவாளராக இதற்காக பாரிய பங்களிப்புக்கள் பிரதான உத்தியோகத்தரினால் 2012ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

## 11வது துறைசார் குழு (உட்கட்டமைப்பு வசதிகள், பயன்பாடுகள் மற்றும் கல்வி)

உட்கட்டமைப்பு வசதிகள், பயன்பாடுகள் மற்றும் கல்வி ஆகிய பிரதான மூன்று துறைகளில் இரண்டாவது துறைசார் குழு அடங்குகின்றது.

அ) விசாரணைகள், விண்ணப்பிக்கும் கட்டத்தில் இருந்து செயற்றிட்டத்தின் முழுமையான கால எல்லைக்குகள் முதலீட்டாளர்களுக்கான தேவையான சகல வசதிகளையும் வழங்குவது துறைசார் குழுவினால் காண்பிக்கப்படும் துறைசார் கேந்திர செயற்பாட்டின் முன்னிலைப் பணிகளாகும்.

ஆ) முதலீட்டு முக்கியத்துவத்தை இனங்காணுதல் மற்றும் முதலீட்டுக்கான சந்தர்ப்பங்களுக்கான ஊக்குவிப்புக்களை மேற்கொள்வதற்கான பிரிவின் நிரல்அமைச்சு உரிய முகவர் நிறுவனங்களுடன் இக்குழு செயற்படுகின்றது. முதலீடு செய்ய எதிர்பார்க்கும் முதலீட்டாளர்களுக்கு ஏதேனும் ஒரு பிரிவில் முதலீடு செய்யத் தீர்மானிக்கப்படும் பட்சத்தில் அக்குழு அவர்களின் துறையின் சகல முதலீடுகள் தொடர்பிலான முகாமையாளர்களாக செயற்றிட்ட மதிப்பீடு தொடக்கம் அமுல்படுத்தப்படும் வரை முதலீட்டுக்குப் பின்னரான உரிய பணிகள் தொடர்பில் உரிய நடவடிககைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆவர்களுக்கு உரிய துறைசார் தரப்பினருடன் பாரிய தொடர்பினை விருத்தி செய்வதற்கும் துறை தொடர்பில் விரிவான அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கு இதன் மூலம் அவர்களுக்கு முடிகின்றது.

2012 ஜனவரி – டிசெம்பர் வரை கிடைக்கப்பெற்ற செயற்றிட்டங்களின் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பான விபரங்கள்

| விபரங்கள் | உட்கட்டமைப்பு வசதிகள் | பயன்பாடுகள் | கல்வி | மொத்தம் |
|---|---|---|---|---|
| கிடைக்கப்பெற்ற புதிய விண்ணப்பப்படிவங்கள் | 37 | 16 | 05 | 58 |
| விரிவாக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் | 34 | 15 | 01 | 50 |
| கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் | 24 | 09 | 02 | 35 |
| அமுல்படுத்தப்பட்ட கட்டம் ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் | 13 | 18 | 02 | 33 |
| செயற்பாட்டுக் கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் | 03 | 05 | 04 | 12 |



ஆவிக் இன்டநெஷனல் - கெடிக்

**வியூக அபிவிருத்திச் செயற்றிட்ட சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட / கலந்துரையாடக் கட்டத்திலுள்ள பிரதான செயற்றிட்டங்கள்.**

1. 100 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுடன் மீரிகம இலங்கை முதலீட்டு சபை வலயத்திற்கு அண்மையில் அமைந்துள்ள காணியில் “சென்ரல் லென்கேசர் பல்கலைக்கழகம் (UCLAN)” கிளை மத்திய நிலையத்தை ஸ்தாபிப்பதற்காக செயற்றிட்ட யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. UCLAN இல் கோளமய விரிவாக்கல் திட்டத்தின் ஒரு பகுதியாக கோளமயப் பொருளாதார செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பில் அதி உயரிய மட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள “ சிறந்த தேர்ச்சியினைப் பெற்றுக் கொண்ட பட்டதாரிகளை உருவாக்குவது தொடர்பில் சென்ரல் லென்கேசர் பல்கலைக்கழத்தின் பொறுப்பாகக் காணப்பட்டது. விஞ்ஞானம், தொழில்நுட்பம், வர்த்தகக் கல்வி, மானிட சாஸ்த்திர என்ற நான்கு பீடங்கள் மூலம் பட்டத்தை எதிர்பார்ப்போருக்காக பட்டம் மற்றும் பட்டம் பின் பட்டத்தை வழங்கி ஐக்கிய இராச்சியத்தின் தரங்கொண்ட உயர்கல்வி அனுபவத்தை இலங்கையர்களுக்கு வழங்குவதற்காக இப்பல்கலைக்கழகத்தின் கிளை இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. தொழில்சார் நோக்கு, பொறுத்தமான மற்றும் சேவை பங்களிப்புக்கள் (தொழிலில் ஈடுபடுவதற்கான இயலுமை) தொடர்பாக இப்பாடநெறி மூலம் விசேடமாக விளக்கங்கள் வழங்கப்படுகின்றன. மீரிகம ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்தில் அமைந்துள்ள இலங்கை முதலீட்டு சபைக்குரிய 120 ஏக்கர் பாரிய உத்தேச காணி ஐக்கிய இராச்சியத்தின் “சென்ரல் லென்கேசர்” பல்கலைக்கழகத்திற்காக 99 ஆண்டுகளுக்கு குத்தகையாக வழங்கப்பட்டது. இச்செயற்றிட்டம் வியூக அபிவிருத்தி செயற்றிட்ட சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

   2013 ஜனவரி மாதத்தில் இதன் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன. அத்துடன் இச்செயற்றிட்டத்தின் செயற்பாட்டுப் பணிகளில் ஆரம்பித்து 2014 செப்டம்பர் மாதத்தில் முதலாவது பட்டதாரி குழுவாக 550 பேர்களைச் சேர்த்துக் கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

**முதலீடுகளுக்கான சந்தர்ப்பங்கள் தொடர்பில் கண்டறியும் நோக்கும் 2012ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிடப்பட்ட கம்பனிகள் / குழுகள் இலங்கைக்கு வருகை தந்தன.**

<u>கல்வித்துறை</u>

1. ரபல்ஸ் எடுவகேஷன் கோபரேஷன் லிமிடட்

   70 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடுகளை மேற்கொண்டு நீர்கொழும்பு உயர்கல்வி நிறுவனத்தினை தாபிக்கும் எதிர்பார்ப்புடன் சிங்கப்பூர் “எம்.־.எஸ் ரபல்ஸ் எடுவகேஷன் கோபரேஷன் லிமிடட்” மூலம் செயற்றிட்ட யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

   **ஆசிய பசுபிக் வலயத்தின் மிகப் பெரிய தனியார் நிறுவன கூட்டுக் கம்பனியான சிங்கப்பூரில் பிரதான கம்பனி அமைந்துள்ள எம் /எஸ் ரபல்ஸ் எடுவகேஷன் கோபரேஷன் லிமிடட் நிறுவனமாகும். 13 நாடுகளில் 30 நகரங்களில் 33 கல்வி நிறுவனங்களைக் செயற்படுத்தக் கூடியதாக இக்கம்பனி விருத்தியடைந்துள்ளது. 21,300 மேற்பட்ட மாணவர்கள் எம் /எஸ் ரபல்ஸ் எடுவகேஷன் கோபரேஷன் லிமிடடில் மூன்றாம் நிலை கல்வி வேலைத்திட்டங்களில் பதிவு செய்து கொண்டுள்ளனர்.**

   இலங்கை மாணவர்களைப் போன்று தெற்காசிய நாடுகளில் இருந்து வருகை தரும் சர்வதேச மாணவர்கள் பண்புசார் தரமிக்க கல்வியினை வழங்கும் நோக்குடன் இவ்உத்தேச செயற்றிட்டம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. வர்த்தக நிருவாகம், உபசரணைகள், சற்றுலா வர்த்தகம், கணக்கியல்,, மனோவியல், பொருளியல், தொழில்நுட்பவியல் போன்ற அடிப்படையில் டிப்ளோமா தொடக்கம் பட்டம், பட்டம் பின் பட்டம் வரை கீழ் குறிப்பிடப்பட்டவாறு பயிற்சிக் கோவைகளை வழங்க இச்செயற்றிட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## உட்கட்டமைப்பு வசதிகள் பிரிவு

1. **கிரிஸ்ட் டிரான்ஸ்வேக் கொழும்பு (தனியார் கம்பனி)**

450 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடுகளை மேற்கொள்ளும் எதிர்பார்ப்புடன் இந்தியா "கிரிஸ்ட் கூட்டு நிறுவனம் " இலங்கை முதலீட்டு சபைக்கு செயற்றிற அறிக்கையைச் சமர்ப்பித்தது. இச்செயற்றிட்டத்தைத் ஸ்தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருப்பது நான்கு ஏக்கர், ஒரு ரூட் 6 பேச்சஸ் கொண்ட கொழும்பு 1இல் அமைந்துள்ள "டிரான்ஸ்வேக் சதுக்கம் " ஆகும். இக்கம்பனிக்கு 99 ஆண்டு குத்தகை அடிப்படையில் இக்காணியை வழங்குவதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் எம் / எஸ் கிரிஸ் கூட்டு வர்த்தகக் கம்பனிக்கு இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை 2012.07.30ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. 2008 இலக்கம் 14 கொண்ட வியூக அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் இச்செயற்றிட்டம் கருதப்படுகின்றது. இக்காணியின் செலவீனத்திற்காக காணியின் பெறுமதியில் 80 சதவீதம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு இக்கம்பனியினால் வழங்கப்பட்டுள்ளது. காணியின் செலவீனத்தில் 30% ஐ தழுவக் கூடிய வகையில் கலாச்சார மரபுரிமைகள் கொண்ட வளாகத்திற்கான குத்தகை உடன்படிக்கை இக்கம்பனியினால் ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஒவ்வொரு கோபுரங்களும் 70 மாடிகள் கொண்ட கட்டடத்துடன் 4 கோபுரங்களாக இக்கட்டடத்தொகுதி அடங்கும். 3 கோபுரங்கள் கொண்ட சொகுசு இணைந்த வீடமைப்புக் கட்டத் தொகுதிகளும் நான்காவது கோபுரத்தில் சில்லறை வர்த்தக கட்டத்தொகுதியும், அலுவலகக் கட்டத்தொகுதி மற்றும் வாடிக்கையாளர்களுக்காக 7 நட்சத்திர ஹோட்டலும் இதில் அடங்குகின்றன. கலாச்சார மரபுரிமைகளைக் கொண்டதாக கட்டடத்தின் கலாச்சார அடையாளங்களும் அதேபோன்று இருக்கக் கூடிய வகையில் மீள்கட்டமைக்கப்பட்டுள்ளது. கவர்ச்சிமிக்க ஹோட்டல் புனரமைக்கப்படும் கட்டத்தின் மூலம் இடவசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. சகல நவீன வசதிகள் மற்றும் தேவையற்றவாறு அமையாத சேவை வழங்கும் நவீன அபிவிருத்தி செய்யப்பட்ட ஸ்பான் மத்திய நிலையத்தின் மூலம் நவீன அபிவிருத்தியடைந்த வர்த்தக மத்திய நிலையமும் இக்கட்டத் தொகுதியில் அமைந்துள்ளது.

2. **இலங்கை கேட்வே இன்ரஸரீஸ் (தனியார் கம்பனி)**

4 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுடன் திருகோணமலை சாம்பூர் பிரதேசத்தில் பாரிய கைத்தொழில் பேட்டையினைத் ஸ்தாபிப்பதற்காக "இலங்கை கேட்வே இன்ரஸ்டிஸ் தனியார் கம்பனி" (SLGIPL) மூலம் செயற்றிட்ட யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டன. எதிர்பார்க்கப்பட்ட வருடத்தின் முதலீட்டாளர்கள் வலயத்தின் கவர்ச்சிக்கு உட்படுத்தக் கூடிய வகையில் மற்றும் முதலீட்டுக்கான சந்தர்ப்பங்களை வழங்கக் கூடியவாறு கல்வி மற்றும் சுகாதார வசதிகள், ஓய்வூபெறல் மற்றும் களியாட்ட வசதிகள் கொண்டதாக வதிவதற்கு நவீன இல்லங்கள், ஆழமிக்க கால்வாய்கள் மற்றும் பொருட்களை சேகரிக்கக் கூடிய பிரிவினை ஸ்தாபித்தல், உள்ளக வீதி, மின்சக்தி தேவைகளை வழங்குதல், நீர் விநியோகம், கழிவுநீர் அகற்றும் தொகுதி, கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் தேவையான பௌதீக மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் நோக்கும் அடிப்படையில் 818 ஏக்கரில் விரிவடைந்துள்ள பிரதேசத்தை தழுவக்கூடிய வகையில் திருகோணமலை சாம்பூர் பிரதேசத்தில் பாரிய கைத்தொழில்சாலைக்கான விசேட வலயமாக அபிவிருத்தி செய்தல், ஒழுங்குகளை மேற்கொள்ளல் உட்பட முகாமைத்துவத்திற்காக செயற்றிட்ட யோசனைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்உத்தேச பாரிய கைத்தொழில் பேட்டை இப்பிரதேசத்தின் பொருளாதார ரீதியில் பாரிய மாற்றங்கள் ஏற்படுவதுடன், நாட்டின் பொருளாதார செயற்பாடுகளும் விரிவடையும். இதனால் இச்செயற்றிட்டம் 2008 இலக்கம் 14 கொண்ட வியூக அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் வியூக அபிவிருத்திச் செயற்றிட்டமாகக் கருதப்படுகின்றது.

3. **அவிக் இன்டநெஷனல் ஹோட்டல் இலங்கை கம்பனி**

அவிக் இன்டநெஷனல் ஹோட்டல் இலங்கை கம்பனியினால் 2012.09.25ஆம் திகதி இலங்கை முதலீட்டு சபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. 64.25 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் முதலீடுகளை மேற்கொள்ளும் நோக்கும் கொழும்பு 3இல் 3 மாடிகளைக் கொண்ட கலப்பு அபிவிருத்தி செயற்றிட்த்தைத் தாபிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4. **ஜீ.வி.ஆர் தனியார் கம்பனி**

34.7 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டு எதிர்பார்ப்புடன் கண்டியில் கலப்பு அபிவிருத்திச் செயற்றிட்டத்தைத் தாபிக்கப்பதற்காக 2012.12. 20ஆம் திகதி ஜீ.வி.ஆர் (தனியார் கம்பன) இலங்கை முதலீட்டுசபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

5. **ஹோவ்லோக் சிட்டி (தனியார் கம்பனி)**

210 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுடன் கொழும்பு 6இல் கலப்பு அபிவிருத்திச் செயற்றிட்டத்தை ஆரம்பிக்க 2012.12.31 ஹோவ்லோக் சிட்டி தனியார் கம்பனியினால் இலங்கை முதலீடு சபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

6. **இம்பீரியல் பில்டர்ஸ் (தனியார் கம்பனி)**

25.6 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுடன் கொழும்பு 2இல் கொம்பனி வீதியில் கலப்பு அபிவிருத்திச் செயற்றிட்டத்தை ஆரம்பிக்க 10.10.2012 இம்பீரியல் பில்டர்ஸ் (தனியார் கம்பனி) இலங்கை முதலீட்டு சபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டது. கொழும்பு நகர அபிவிருத்தியின் ஒரு பகுதியாக இச்செயற்றிட்டம் செயற்படுத்தப்பட உள்ளது. இச்செயற்றிட்டம் “ கொம்பனி வீதியை மீள் அபிவிருத்தி செய்தல் “ என அறிமுகப்படுத்தப்படுகின்றது. இவ்யோசனையின் கீழ் 3 ஏக்கர் காணி 470 குடும்பங்களுக்காக குத்தகை இல்லங்கள் மற்றும் 136 வர்த்தக நிலையங்களை நிர்மாணிக்க இக்கம்பனியினால் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

7. **கெம்பல் சிடி டெவலப்மன்ட் (தனியார் கம்பனி)**

65.58 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டு எதிர்பார்ப்புடன் கொழும்பு 13இல் குத்ததைக வீடமைப்பு கட்டத் தொகுதிகளை நிர்மாணிக்க 2012.11.30ஆம் திகதி இலங்கை முதலீட்டு சபையுடன் கெம்பல் சிடி டெவலப்மன்ட் (தனியார் கம்பனி) யினால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

<u>பயன்பாட்டுப் பிரிவு</u>

1. **சுப்ரீன் செட் தனியார் கம்பனி**

2.09 பில்லியன் ரூபா முதலீட்டு எதிர்பார்ப்புடன் வாடிக்கையாளர்களுக்காக தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் வசதிகளை வழங்குவதற்காக செய்மதி தொகுதியைத் ஸ்தாபிப்பதற்காகவும், அது சார்ந்த செயற்பாடுகளுக்காகவும் சுப்ரீன் சொலுசன் தனியார் கம்பனியினால் இலங்கை முதலீட்டு சபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. செயற்றிட்டத்தின் ஆரம்பத்தில் செயற்றிட்டக் கம்பனியினால் ஏற்கனவே ஏவப்பட்டுள்ள சீன செய்மதியின் பாகங்களை குத்தகை உரிமையில் பெற்றுக் கொள்வதுடன் சீன வங்கியில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் மூலம் இக்குத்தகை மீளளிப்பு செய்யப்பட்டது.

கண்டி தொழில்நுட்பப் பேட்டையில் புவித் தரிப்பிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2013ஆம் ஆண்டில் இலங்கை முதலீட்டு சபையுடன் குறைநிரப்பு உடன்படிக்கை ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டது.

2. **ரிநியூஜென் என்வரமென்ட் புரட்டெக்ஸன் கோட்டை தனியார் கம்பனி**

3.56 பில்லியன் ரூபா முதலீட்டு எதிர்பார்ப்புடன் கடுவலையில் கழிவுப் பொருட்கள் மூலம் பத்து மெகாவோட் மின்சக்தியை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை ஸ்தாபிப்பதற்காக ரிநியூஜென் என்வரமென்ட் புரட்டெக்ஸன் கோட்டை தனியார் கம்பனிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

3. **கித்துகல ஹைத்ரோ பவர் தனியார் கம்பனி**

கித்துகல ஹைத்ரோ பவர் தனியார் கம்பனியினால் 1.38 பில்லியன் ரூபா முதலீடு செய்யும் எதிர்பார்ப்புடன் ததுல்கலையில் 7.3 மெகாவோட் மின் உற்பத்தி நிலையத்தைத் ஸ்தாபித்து அமுல்படுத்துவதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

4. **எஸ்கேஸ் ஒவாலா தனியார் கம்பனி**

எஸ்கேஸ் ஒவாலா தனியார் கம்பனியினால் 860 பில்லியன் ரூபா முதலீடு செய்யும் எதிர்பார்ப்புடன் மாத்தளையில் நுண்ணுயிரியல் மின்னுற்பத்தி நிலையத்தை தாபித்து அமுல்படுத்துவதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

**இரண்டாவது துறைசார் குழுவினால் பொறுப்பேற்கப்பட்ட வெளிநாட்டு ஊக்குவிப்புப் பணிகள்**

1. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் தொழில்நுட்ப ஊக்குவிப்பு அமைப்பு (UNIDO) மற்றும் ஒசாக்கா மாநில அரசின் ஒத்துழைப்புடன் 2012 மார்ச் 12 ஆந் திகதி தொடக்கம் 16 அந் திகதி வரை ஜப்பானின் முதலீட்டுப் பணிகளை ஒழுங்கு செய்வதற்கு இலங்கை முதலீட்டுச் சபைக்கு முடிந்தது. “யுனிடோ” மூலம் டோக்கியோ நகரில் ஒவ்வொரு தரப்பினருக்கும் இடையே கூட்டத்தொடர்கள் ஒழுங்கு செய்யப்பட்டதுடன் ஒசாகா வர்த்தக மற்றும் தொழில்நுட்பச் சபையும், ஒசாகா மாநில அரசின் ஒசாகா சர்வதேச வர்த்தக ஊக்குவிப்பு மத்திய நிலையம் மூலம் 2012 மார்ச் 15 ஆந் திகதி முதலீட்டு கூட்டிணைப்பு ஒழுங்கு செய்யப்பட்டது.

   இப்பணிகளை நோக்காகக் கொண்டு முதலீட்டுக்கான இயலுமைகள் கொண்ட முதலீட்டாளர்களை இனங்காணுதல் மற்றும் தற்போதைய வர்த்தகச் சூழல் மற்றும் இலங்கை முதலீட்டுச் சபையினால் அவர்களுக்கு வழங்கப்படும் பயன்கள் தொடர்பாகவும் அவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன. முதலீடுகளுக்கான இயலுமைகள் கொண்ட முதலீட்டாளர்களை இனங்கண்டதன் பின்னர் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்காக இயலுமை கொண்ட முதலீட்டாளர்களை ஊக்குவிப்பது தொடர்பில் இலங்கை முதலீட்டுச் சபையினால் எதிர்காலப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஜப்பானில் இருந்து கிடைக்கப்பெறும் முதலீட்டு இணைப்புக்களுக்குப் பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர் இவ்வேலைத்திட்டத்தின் போது இலங்கை முதலீட்டுச் சபையினைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்.

2. சீன வர்த்தக விவகார அமைச்சு மற்றும் சர்வதேச வர்த்தகப் பொருளாதார ஒத்துழைப்புத் தொடர்பான சீன அகடமி (CAITEC) மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட சீன – தெற்காசிய முதலீட்டு ஊக்குவிப்புத் தொடர்பான கருத்தரங்கில் பங்கேற்பதற்காக சீனாவுக்கு விஜயம் மேற்கொள்ளப்பட்டது. சீனாவில் இருந்து கிடைக்கும் முதலீடுகளை இணைப்புச் செய்வதற்குப் பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர்கள் வேலைத்திட்டத்தின் போது இலங்கை முதலீட்டுச் சபையினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

**இரண்டாவது துறைசார் குழுவின் மூலம் நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட தூதுக்குழுவினர்**

1. 100 மெகா வோல்ட் சூரிய மின்சக்தி உற்பத்திச் செயற்றிட்டத்தில் முதலீடு செய்வது தொடர்பான யோசனைத் திட்டம் குறித்துக் கலந்துரையாடுவதற்காக 2012 ஜனவரி மாதத்தில் சீ.பீ. சோலர் கம்பனியினைப் பிரதிநிதித்துவப்படுத்திய 05 பேர்களைக் கொண்ட தூதுக்குழுவினர் வருகை தந்தனர். இத்தூதுக்குழுவின் ஆலோசகராக முன்னாள் இலங்கைக்கான சீனத் தூதுவர் சங் சென் லீ அவர்களும் பங்கேற்றார். மின்சக்தி எரிசக்தி அமைச்சர், கைத்தொழில் மற்றும் வாணிப விவகார அமைச்சர், நிலையான மின்சக்தி அதிகார சபை மற்றும் இலங்கை மின்சார சபையின் உயர்மட்ட அதிகாரிகளையும் சந்திக்கும் நோக்குடனேயே இவர்கள் இலங்கைக்கு வருகை தந்தனர்.

2. முதலீடுகளுக்காகப் பெறப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு "பவர் சைனா" கம்பனியின் ஆறு பேர்களைக் கொண்ட தூதுக்குழுவினர் இலங்கைக்கு வருகை தந்தனர். இத்தூதுக்குழுவினர் நிலையான மின்சக்திச் செயற்றிட்டங்கள் மற்றும் டென்ரோ மின்னுற்பத்தி நிலையங்களில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பாகக் கூடுதலாக ஆர்வங் காண்பித்தனர்.

3. சீன பெற்றோலிய மற்றும் இரசாயனக் கைத்தொழில் சம்மேளனத்தின் 7 அங்கத்தவர்களைக் கொண்ட தூதுக்குழுவினர் பெற்றோலியம் மற்றும் இரசாயன கைத்தொழில் உற்பத்தித் துறையில் வர்த்தகம் மற்றும் முதலீட்டுச் சந்தர்ப்பங்களை ஊக்குவிக்கும் நோக்குடன் 2012 ஏப்ரல் மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்தனர்.

4. நிறுத்தல் உபகரணங்களை உற்பத்தி செய்யும் துறையின் முதலீட்டுக்கான சந்தர்ப்பங்கள் தொடர்பில் கண்டறியும் வகையில் சிறு கைத்தொழில் தொடர்பான தேசிய கவுன்சிலின் அங்கத்தவர்கள் மற்றும் சீன நிறை உற்பத்தி கம்பனியின் முப்பது அங்கத்தவர்களைக் கொண்ட தூதுக்குழுவினர் (23 கம்பனிகள்) 2012 ஜூன் மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர். இத்தூதுக்குழுவின் அங்கத்தவர்கள் பங்குடைமை வர்த்தகங்களுக்கான சந்தர்ப்பங்கள் தொடர்பில் உள்நாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரச முகவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

5. "யுன்னன் புரவின்சியல் எனர்ஜி இன்வெஸ்ட்மென்ட் குருப் ஒப் கம்பனி"யின் உப கம்பனியான வைபீஜசீ சர்வதேச மின்சக்தி ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி தனியார் கம்பனியின் சீன தூதுக்குழுவினர் இலங்கையில் மின்சக்தி செயற்றிட்டங்களில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான இயலுமைகள் குறித்துக் கண்டறிவதற்காக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டர். சிறியளவு நீர் மின் உற்பத்தி நிலையங்களை ஆரம்பிப்பது தொடர்பாகவும் அவர்களின் விருப்பத்தினைத் தெரிவிக்கும் ஆவணமும் கௌரவ மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

6. சீனாவின் தியா இன்வெஸ்ட்மன்ட் அன்ட் மனேஜ்மன்ட் குரூப் ஒப் கம்பனியின் 6 அங்கத்தவர்களைக் கொண்ட தூதுக்குழுவினர் நிலையான சொத்து அபிவிருத்தி மற்றும் சுற்றுலா வர்த்தகம் தொடர்பிலான துறைகளில் முதலீடுகளுக்கான சந்தர்ப்பங்கள் குறித்துக் கண்டறிவதற்காக 2012 ஒக்டோபர் மாதத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர். 2009 ஆம் ஆண்டில் இலங்கை சுற்றுலா தொடர்பான எதிர்கால செயற்பாட்டுப் பணிகளைக் கண்டறியும் நோக்குடன் இவ்விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

7. கம்போடியாவின் ஜோர்ஜ் லின் தலைமையிலான வர்த்தக சமூகத்தின் முன்னணி அங்கத்தவர்களைக் கொண்ட 12 பௌத்த தூதுக்குழுவினர் முதலீட்டுக்கான சந்தர்ப்பங்களைக் கண்டறிவதனைப் போன்று 2013 செப்டம்பர் மாதத்தில் இலங்கையில் நடைபெறவுள்ள ஆசிய பௌத்த கலாச்சார விழா ஊக்குவிப்புப் பணிகளில் பங்கேற்கும் நோக்குடன் 2012 நவம்பர் மாதத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

8. வுகான் மாநிலத்தின் முன்னணி முதலீட்டுக் கம்பனியினைப் பிரதிநித்துவப்படுத்தும் சீனாவின் "வுகான் டன்காய் சயன்ஸ் அன்ட் டெக்னோலொஜி இன்டர்ரீஜ் குரூப் ஒப் கம்பனி" சீன தூதுக்குழுவினர் மருந்து சார் துறைகள், கால்நடை அபிவிருத்தி, அகழ்வுப் பணிகள், சுற்றுலா வர்த்தகத்துடன் தொடர்புபட்ட செயற்றிட்டங்கள், சொத்து அபிவிருத்திகள் போன்ற துறைகளின் முதலீட்டு இயலுமைகள் தொடர்பில் கண்டறிவதற்கு டிசம்பர் மாதத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர். இலங்கை இரச மருந்தாக்க உற்பத்திக் கூட்டுத்தாபனம், சுகாதார அமைச்சு, புவியியல் ஆய்வு மற்றும் அகழ்வுப் பணியகம், சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் போன்ற நிறுவனங்களில் இருந்து சுற்றுலாத் தூதுக்குழுவினருக்காக விளக்கமூட்டும் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இதன் பயனாக "கியுமன் வெல் ஹெல்த்கெயார் கூட்டு வர்த்தகத்தினால் இலங்கையில் மருந்தாக்க உற்பத்திக் கைத்தொழில்சாலையினைத் ஸ்தாபிப்பது தொடர்பான செயற்றிட்ட அறிக்கை அரச மருந்தாக்க உற்பத்திக் கூட்டுத்தாபனத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

9. ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பின் (JETRO) கொழும்பு அலுவலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டவாறு 2012 நவம்பர் 22 ஆந் திகதி இலங்கைக்கு வருகை தந்த தூதுக்குழுவின் 30 அங்கத்தவர்களைச் சந்திப்பதற்கு இலங்கை முதலீட்டுச் சபைக்கு முடிந்தது. ஜப்பான் வர்த்தக மற்றும் கைத்தொழில் சபை (JCCI) மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட உயர் மட்டத்திலான ஜப்பான் வர்த்தகத் தூதுக்குழுவுக்காக 2012 டிசம்பா 6 ஆந் திகதி இலங்கை முதலீட்டுச் சபையினால் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் “இலங்கையில் முதலீடுகளுக்கான சந்தர்ப்பம்” தொடர்பான விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. 17 ஆவது இலங்கை – ஜப்பான் மற்றும் ஜப்பான் - இலங்கை வர்த்தக ஒத்துழைப்புக் குழுவின் இணைந்த கூட்டங்களுக்கு இணைவாக இது சமர்ப்பிக்கப்பட்டது.

10. உற்பத்திப் பிரிவின் முதலீட்டுக்கான சந்தர்ப்பங்களைக் கண்டறிவதற்காக பூசான் வர்த்தகச் சபையின் 32 அங்கத்தவர்களைக் கொண்ட தூதுக்குழுவினர் 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

11. போக்குவரத்து / புகையிரத வீதி சார்ந்த செயற்றிட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக 2012 ஏப்ரல் மாதத்தில் கொரியாவில் போக்குவரத்து அமைச்சில் 17 அங்கத்தவர்களைக் கொண்ட தூதுக்குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்தனர்.

12. மத்தள சர்வதேச விமான நிலையம் தொடர்பில் விசேட ஆர்வம் கொண்டுள்ள விமான சேவைகளுடன் தொடர்புபட்ட செயற்றிட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு “ஐஷோர்நுழுடீ” சர்வதேச விமானநிலைய கூட்டுத்தாபனத்தின் 12 அங்கத்தவர்களைக் கொண்ட தூதுக்குழுவினர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

13. 2012 மார்ச் மாதத்தில் ஐக்கிய இராச்சியத்திற்கான இலங்கை வர்த்தக தூதுக்குழுவின் பயணம்

ஐக்கிய இராச்சியத்தின் இலங்கை உயர் ஸ்தானிகர் அலுவலகத்தினால் இணைப்புச் செய்யப்பட்ட வர்த்தகத் தூதுச் சபையின் இலங்கைச் சுற்றுலா 2012 “எக்ஸ்போ” கண்காட்சியும் இந்த சந்தர்ப்பத்தில் இடம்பெற்றது. இத்தூதுக் குழு கலாநிதி கிறிஸ் நோனிசினால் வழிநடாத்தப்பட்டதுடன் தகவல் தொழில்நுட்பம், கல்வி, சுற்றுலா வர்த்தகம், உட்கட்டமைப்பு வசதி விருத்தி ஆகிய துறைகளில் ஆர்வம் காண்பிக்கும் பல்வேறுப்பட்ட துறைகளுக்கு உரியதான கம்பனிகளைக் கொண்டதாக இக்குழு அமைந்தது.

14. 2012 மார்ச் மாதம் பெல்ஜிய வர்த்தகத் தூதுக்குழுவினர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

பிரசிலுள்ள இலங்கைக்கான தூதுவர் அலுவலகம் எக்ஸ்போ – 2012 கண்காட்சியினை இத்தூதுக்குழுவினரின் விஜயத்துக்கு இணைவாக ஒழுங்கு செய்தது. பெல்ஜியம் கம்பனிகள் பல துறைகளில் முதலீடுகளை மேற்கொள்ள இணக்கம் தெரிவித்தன.

சுற்றுலா வர்த்தகம், சொத்துக்கள் ஆதன வர்த்தகம், பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை, கொக்கோ உற்பத்தி, தங்க ஆபரணங்கள், விவசாயம், தகவல் தொழில்நுட்பம், உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா வர்த்தகம், ஒப்பனைக் கலைப் பொருட்கள், ஆடைகள் மற்றும் தைத்த ஆடைகள் ஆகியவை இவற்றில் அடங்குகின்றன.

15. “எக்ஸ்போ – 2012” கண்காட்சிக்கு இணைவாக ரோமில் இலங்கை தூதரக அலுவலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டவாறு இத்தாலி வர்த்தகத் தூதுக் குழுவினர் 2012 மார்ச் மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்தனர். இவர்கள் ஆடை / தைத்த ஆடை மற்றும் சுற்றுலா போன்ற துறைகளில் விசேட ஆர்வம் காண்பித்தனர்.

2வது துறைசார் பிரிவு – ஊக்குவிப்புச் செயற்பாடுகள்

அ. விசேடமாக ஜேர்மன், ஜப்பான், கொரியா மற்றும் ஐரோப்பிய சமூகத்துக்குரிய நாடுகளில் இருந்து வருகை தந்து ஏற்கனவே நாட்டில் முதலீட்டுப் பணிகளில் ஈடுபட்டுள்ள முதலீட்டாளர்களுடன் வசதிகளை வழங்குவது தொடர்பான கூட்டங்களை நடாத்துதல். 2வது துறைசார் குழு உத்தியோகத்தர்களினால் இது தொடர்பான பணிகள் இணைப்புச் செய்யப்படுகின்றன. உரிய வெளிநாட்டுத் தூதுக்குழுவினர் (ஜேர்மன் தூதர அலுவலகம், ஜப்பான் தூதர அலுவலகம், ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பு மற்றும் ஐரோப்பிய வர்த்தக சபையுடன் இணைந்த ஒத்துழைப்புடன் இக்கூட்டிணைப்பு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஆ. இலங்கை வர்த்தக சபையின் மேற்பார்வையின் கீழ்க் குறிப்பிடப்பட்ட வர்த்தக மாநாடுகளில் 2வது துறைசார் பிரிவு பங்கேற்றது. இலங்கை / பிரான்ஸ், இத்தாலி / இலங்கை, பிரித்தானியாவுடனான வர்த்தகத்துக்கான சபை, பேர்லக்ஸ் / இலங்கை, சீனா / இலங்கை, ஜப்பான் / இலங்கை, ஜப்பான் / இலங்கை, கொரியா / இலங்கை.

இ. “எக்ஸ்போ 2012” கண்காட்சியினை ஒழுங்கு செய்யும் போது 2வது துறைசார் குழு அது தொடர்பான பணிகளில் பங்கேற்றன. அத்துடன் 2வது துறைசார் குழு் வர்த்தகக் கூட்டமைப்பிற்குரிய பிரதான அங்கத்தவர் ஆகும். இவ்வர்த்தகக் கூட்டமைப்பில் “ஒமேகா லைன்” என அறிமுகப்படுத்தப்படும் இத்தாலி, கனிசிடோனியாவின் தலைவரான கலாநிதி சன்ரோ வெரோனைனினால் இலங்கை முதலீட்டுச் சபையின் அழைப்புக்கு அமைய விளக்கவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

## 111வது துறைசார் குழு

2012 ஆம் ஆண்டில் ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு வர்த்தகம் ஆகிய இரு வகைகளுக்காகவும் சம்பிரதாயம் அல்லாத உற்பத்திகள் தொடர்பான யோசனைகளுக்கு மற்றும் ஏற்றுமதிச் சந்தை உட்பட தொழில் முயற்சி வர்த்தகங்களுக்காக சேவைகளை வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்குவது தொடர்பில் கருத்திற் கொள்ளப்பட்டன. முதலீடு மற்றும் கீழே குறிப்பிடப்பட்ட சட்ட ஒழுங்கு விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏனைய செயற்பாட்டு ஒப்பளவுகளை அடிப்படையாகக் கொண்டு நவீன செயற்றிட்டங்கள் மற்றும் தற்போது அமுலில் உள்ள செயற்றிட்டங்களை விரிவாக்கல் ஆகிய இரு வகைகளுக்காகவும் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

i. உள்நாட்டு இறைவரிச் சட்டம்
ii. வியூக அபிவிருத்திச் செயற்றிட்டச் சட்டம்
iii. பிரதான செயற்பாடுகளுக்குரிய நிதிச் சட்டம்

இதற்கமைய குறைந்தபட்சம் 50 மில்லியன் ரூபா முதலீட்டுக்காக அங்கீகாரம் வழங்குவது தொடர்பில் கருத்திற் கொள்ளப்பட்டது. இது எவ்வாறாக இருப்பினும் செயற்பாட்டு மத்திய நிலையம் மற்றும் அதனுடன் இணைந்த செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக இறுதி வழிகாட்டல்கள் மற்றும் கோவைகள் தொடர்பாக இதுவரையில் இறுதித் தீர்மானங்கள் எட்டப்பட்டவில்லை.

<u>மூன்றாவது துறையின் முழுமையான செயற்சாதனைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள;</u>

துறையின் அமுலிலுள்ள கட்டங்கள்

| நிலைமைகள் | ஆடைக் கைத்தொழில் | பிராந்திய சேவை கள் | உற் பத்தி | பிரிவின் மொத்தம் | இ.மு.ச. செயற் றிட்ட மொத்தம் | பிரிவின் நிலைமை |
|---|---|---|---|---|---|---|
| அங்கீகாரத்தை எதிர்பாத்துள்ள செயற்றிட்டங்கள் | 02 | 04 | 19 | 23 | 59 | 39% |
| அங்கீகரிக்கப்பட்டு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிலையில் உள்ள செயற்றிட்டங்கள் | 06 | 03 | 51 | 60 | 177 | 34% |
| உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட செயற்றிட்டங்கள் | 05 | 24 | 42 | 71 | 126 | 56% |
| வர்த்தகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கும் நிலையிலுள்ள செயற்றிட்டங்கள் | 02 | 27 | 29 | 58 | 99 | 59% |
| வர்த்தகச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்கள் | 465 * | 228 | 382 | 1075 * | 1733 * | 62% |
| **மொத்தம்** | **478** | **286** | **523** | **1287** | **2194** | **59% **** |

* 200 ஆடைத் தொழிற்சாலைகளின் கீழ் செயற்படுத்தப்படும் 148 செயற்றிட்டங்கள் உட்பட.

**இலங்கை முதலீட்டுச் சபையின் கீழுள்ள மொத்த செயற்றிட்ட எண்ணிக்கையில் 59% இற்காக 3வது பிரிவின் மூலம் பங்களிப்புக்கள் வழங்கப்படுகின்றன.

3வது பிரிவின் செயற்சாதனைகள்

| மொத்த ஏற்றுமதி (அ.டொ.மி.) | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆண்டு | தேசிய | | இ.மு.ச. பெறுமதி | தேசிய பெறுமதியில் இ.மு.ச. இன் % | பெறுமதியில் இ.மு.ச. இன் % (கைத்தொழில்) |
| | மொத்த பெறுமதி | கைத் தொழில் பெறுமதி | | | |
| 2001 | 4,817 | 3,712 | 3,083 | 64% | 83% |
| 2002 | 4,699 | 3,634 | 3,123 | 66% | 86% |
| 2003 | 5,133 | 3,977 | 3,492 | 68% | 88% |
| 2004 | 5,757 | 4,518 | 3,858 | 67% | 85% |
| 2005 | 6,347 | 4,952 | 4,355 | 69% | 88% |
| 2006 | 6,883 | 5,385 | 4,699 | 68% | 87% |
| 2007 | 7,640 | 5,967 | 5,170 | 68% | 87% |
| 2008 | 8,111 | 6,159 | 5,330 | 66% | 87% |
| 2009 | 7,085 | 5,305 | 4,563 | 64% | 86% |
| 2010 | 8,570 | 6,154 | 5,175 | 60% | 84% |
| 2011 | 10,559 | 7,992 | 6,572 | 62% | 82% |
| 2012 | 9,774 | 7,371 | 6125 | 63% | 83% |

நேரடி வெளிநாட்டு முதலீடு (FDI) இற்காக துறைசார் பங்களிப்பு (அ.டொ.மி.)

| | ஆடைக் கைத்தொழில் | பிராந்திய மற்றும் சேவைகள் | உற்பத்தி | பிரிவு மொர்ததம் | இ.மு.ச. யின் மொத்த நே.வெ.மு. அளவு |
|---|---|---|---|---|---|
| FDI | 74.17 | 39.46 | 182.181 | 295.811 | 1146.756 |

## துறைசார் செயற்சாதனைகள்

### 1) ஆடைக் கைத்தொழில் பிரிவு

2012 டிசம்பர் மாத இறுதியில் வர்த்தகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட மொத்த செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 465 ஆகும். நாட்டின் பிரதான ஏற்றுமதி வருமானம் உழைக்கப்படுவது ஆடை உற்பத்தித் துறையின் மூலமாகும். 2012 ஆம் ஆண்டுக்கான மொத்த தேசிய ஏற்றுமதியில் 41% ஆடை ஏற்றுமதி வருமானம் 3.9 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.

#### 2012 ஆம் ஆண்டின் செயற்சாதன்னைகள்

2012 ஆம் ஆண்டு இறுதியில் சமர்ப்பிக்கப்பட்ட செயற்றிட்ட விண்ணப்பப்படிவங்களின் செயற்சாதனைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| செயற்பாட்டு நிலைமைகள் | செயற்றிட்டங் களின் எண்ணிக்கை | முதலீடு (ரூ.மி.) | | | தொ. வா. |
|---|---|---|---|---|---|
| | | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | |
| வர்த்தகச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்கள் | - | - | - | - | - |
| வர்த்தகச் செயற்பாடுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கும் செயற்றிட்டங்கள் | - | - | - | - | - |
| அமுல்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் | 05 | 327.500 | 1,370.096 | 1,697.596 | 4,373 |
| உடன்படிக்கைகள் கைச்சாத்திட எதிர்பார்க்கப்பட்ட செயற்றிட்டங்கள் | 01 | - | 533.016 | 533.016 | 1,030 |
| அங்கீகாரம் எதிர்பார்க்கப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் | - | - | - | - | - |
| **மொத்தம்l** | **06** | **327.500** | **1903.112** | **2,230.612** | **5,403** |

#### வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் விரிவாக்கல் வேலைத்திட்டங்கள்

“கிழக்கின் உதயம்” மற்றும் “வடக்கின் வசந்தம்” வேலைத்திட்டத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முதலீட்டு ஊக்குவிப்புக்கள் தொடர்பில் இலங்கை முதலீட்டுச் சபையினால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2011 / 2012 ஆம் ஆண்டுகளில் மேலதிக உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட செயற்றிட்டங்கள் தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. கைத்தொழில்சாலைகள் நிர்மாணிக்கப்படும் கட்டத்தில் உள்ளன.

| கம்பனியின் பெயர் | மேலதிக உடன்படிக்கை | முதலீடு (அ.டொ.மி.) | வேலை வாய்ப்பு (எண்ணிக்கை) | அமைவிடம் | தற்போதைய நிலைமைகள் |
|---|---|---|---|---|---|
| பிரண்டிக்ஸ் அப்பரல் லிமிட்டட் | 31/03/2011 | 9.00 | 600 | மட்டக்களப்பு | அமுலிலுள்ள |
| மாஸ் அக்டிவ் தனியார் கம்பனி | 21/07/2011 | 3.00 | 500 | கிளிநொச்சி | அமுலிலுள்ள |
| போர்கஸம் கார்மென்ட் தனியார் கம்பனி | 15/09/2011 | 2.30 | 500 | மன்னார் | அமுலிலுள்ள |
| டைமெக்ஸ் கார்மென்ட் தனியார் கம்பனி | 15/09/2011 | 2.30 | 500 | மன்னார் | அமுலிலுள்ள |
| ஒமேகாலைன் தனியார் கம்பனி | 30/03/2011 | 20.00 | 990 | வவுனியா | அமுலிலுள்ள |
| யுனிசெலா தனியார் கம்பனி | 12/01/2012 | 4.9 | 600 | கிளிநொச்சி | அமுலிலுள்ள |
| **மொத்தம்** | | **41.5** | **3690** | | |

2) <u>பிராந்திய வேலைத்திட்டங்கள் மற்றும் ஏற்றுமதி சேவைப் பிரிவு</u>

| செயற்பாட்டு நிலைமைகள் | செயற்றிட் டங் களின் எண்ணிக் கை | முதலீடு (ரூ.மி.) | | | தொ. வா. |
|---|---|---|---|---|---|
| | | வெளிநாடு | வெளிநாடு | மொத்தம் | |
| வர்த்தகச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்கள் | - | - | - | - | - |
| வர்த்தகச் செயற்பாடுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கும் செயற்றிட்டங்கள் | - | - | - | - | - |
| அமுல்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் | 01 | 5,368.00 | 8.540 | 5,376.540 | 136 |
| உடன்படிக்கைகள் கைச்சாத்திட எதிர்பார்க்கப்பட்ட செயற்றிட்டங்கள் | 03 | 1,036.71 | 3,907.200 | 4,943.907 | 300 |
| அங்கீகாரம் எதிர்பார்க்கப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் | 04 | 9,940.60 | 1,898.250 | 11,838.850 | 374 |
| **மொத்தம்l** | **08** | **16,345.307** | **5,813.990** | **22,159.297** | **810** |

கீழே குறிப்பிடப்பட்டுள்ள உப பிரிவுகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் மூலம் இப்பிரிவு அடங்கியுள்ளன.

i. ஏற்றுமதியினை அடிப்படையாகக் கொண்ட சேவைகள்
ii. பிராந்திய வேலைத்திட்டங்கள் (300 தொழிற் முயற்சி வேலைத்திட்டங்கள் மற்றும் வடக்கு கிழக்கு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்)
iii. செயற்பாட்டு மையத்திற்கான செயற்றிட்டங்கள்

2012 ஆம் ஆண்டில் நேரடி வெளிநாட்டு முதலீட்டுக்கான துறைசார் இலக்கு 34.54 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். தீர்க்கப்பட்ட நேரடி வெளிநாட்டு முதலீட்டின் பெறுமதி 39.88 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். 2012 ஆம் ஆண்டில் துறைசார் பிரிவின் சகல செயற்றிட்டங்களுக்காகவும் உண்மையான முதலீடு 57,307 மில்லியன் ரூபாவாகும்.

### ஏற்றுமதிச் சேவை மற்றும் பிரதேச வேலைத்திட்டங்கள்

பிரதேச செயற்பாட்டுத் தலைமையகம், முகாமைத்துவ ஆலோசைன, கப்பல் சரக்குப்பொருள் சேவை, அச்சு மற்றும் வெளியீட்டு சேவை, மோட்டார் வாகன சேவை மற்றும் ஏனைய சேவைகள் போன்றன ஏற்றுமதி சேவையின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் வகையின் கீழ் முன்னெடுக்கப்படும் 60 செயற்றிட்டங்கள் காணப்படுகின்றன.

2012 டிசம்பர் 31 ஆந் திகதி அளவில் 300 தொழில் முயற்சி வேலைத்திட்டத்தின் கீழ் அமுலில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 205 ஆகும். 162 கம்பனிகள் செயற்பாட்டு நிலையில் காணப்படுகின்றன. 300 தொழில் முயற்சியாளர் வேலைத்திட்டங்களை அமுல்படுத்தும் கால எல்லை 2012 மார்ச் 31 ஆந் திகதி நிறைவடைந்தது.

2012 டிசம்பர் 31 ஆந் திகதியன்று வடக்கு மற்றும் கிழக்கு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் அமுலில் உள்ள செயற்றிட்ட அங்கீகாரங்களின் மொத்தம் 30 ஆகும். இதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட முதலீட்டின் அளவு ரூபா 8,280.24 மில்லியன் ரூபா என்பதுடன் தொழில் வாய்ப்பு உருவாக்கம் 4378 ஆகும். (அமுல்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ள செயற்றிட்ட எண்ணிக்கை - 02, வர்த்தகச் செயற்பாடுகளை ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ள செயற்றிட்ட எண்ணிக்கை – 12, தற்போது செயற்பாடுகள் அமுல்படுத்தப்படும் செயற்றிட்ட எண்ணிக்கை – 16 ஆகும்)

<u>பிரதான செயற்பாடுகளுக்கான செயற்றிட்டம்</u>

நிதிச் சட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள செயற்பாட்டு ஒப்பபளவுகளை அடிப்படையாகக் கொண்டு கீழ்க்குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்கான செயற்பாட்டு மத்திய நிலையங்களின் செயற்பாட்டுப் பணிகளுக்காக இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

i. ஏற்றுமதி, சிறு செயற்பாட்டுப் பணிகள் மற்றும் மீள் ஏற்றுமதியில் ஈடுபடும் தொழில் முயற்சிசார் வர்த்தகப் பணிகள்.

ii. இலங்கைக்குப் பொருட்களைக் கொண்டு வராது வேறு நாடுகளில் இருந்து பொருட்களைப் பெறக்கூடிய மீள் கப்பலேற்றும் வர்த்தகம்.

iii. வெளிநாட்டு உற்பத்தியாளாகளுக்கு கொடுக்கல் வாங்கல் ஆரம்பத்திலேயே நிதிக் கொடுப்பனவுச் சேவைகளை வழங்குதல்.

iv. நிதி முகாமைத்துவச் செயற்பாட்டு வலையமைப்பு மற்றும் பற்றுச்சீட்டுப் பணிகளுக்கான கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவோர் முன்னணியில் இருப்பது தொடர்பிலான முகாமைத்துவ மத்திய நிலையத்தின் செயற்பாட்டுப் பணிகள்.

v. இலங்கையில் பல் ராஜ்ய கூட்டிணைப்பு போன்ற வழங்கல் சேவைகளை ஏற்பாடு செய்தல்.

மிரிஜ்ஜவில வலயத்தின் வர்த்தகத்துடன் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி இறக்குமதி மத்திய நிலையங்களின் வர்த்தகச் செயற்பாடுகள் மற்றும் ஏற்றுமதிச் சேவைகளுக்காக ஐந்து யோசனைத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

### 3) உற்பத்திப் பிரிவு

| செயற்பாட்டு நிலைமைகள் | செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | முதலீடு (ரூ.மி.) | | | தொ. வா. |
|---|---|---|---|---|---|
| | | வெளிநாடு | வெளிநாடு | மொத்தம் | |
| வர்த்தகச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்கள் | - | - | - | - | - |
| வர்த்தகச் செயற்பாடுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கும் செயற்றிட்டங்கள் | 18 | 9,116.520 | 7,809.840 | 16,926.360 | 3,094 |
| அமுல்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் | 11 | 16,040.580 | 11,654.898 | 27,695.478 | 859 |
| உடன்படிக்கைகள் கைச்சாத்திட எதிர்பார்க்கப்பட்ட செயற்றிட்டங்கள் | 14 | 6,612.940 | 5,948.678 | 12,561.618 | 2,123 |
| அங்கீகாரம் எதிர்பார்க்கப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் | 19 | 33,943.670 | 3,034.956 | 36,978.626 | 2,522 |
| **மொத்தம்l** | **62** | **65,713.710** | **28,448.372** | **94,162.082** | **8,598** |
| | | | | | |



**டாபர் லங்கா தனியார் கம்பனி – யகடாகல தோட்டம், கொட்டகதெனிய**





2012 ஆம் ஆண்டில் 94.20 பில்லியன் ரூபா பாரிய முதலீட்டுடன் 62 செயற்றிட்ட யோசனைத் திட்டங்கள் கிடைக்கப்பெற்றதுடன் இதில் 65.70 பில்லியன் ரூபா வெளிநாட்டு மூலங்களில் இருந்து பெறப்பட்டதுடன் இதனூடாக 8598 தொழில் வாய்ப்புக்கள் உருவாகுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இவ்வாண்டுக்குள் 17 செயற்றிட்டங்கள் வர்த்தகச் செயற்பாடுகளை ஆரம்பித்தன.

2012 ஆம் ஆண்டில் அம்பாந்தோட்டைத் துறைமுகக் கட்டிடத் தொகுதியில் அமுல்படுத்த இருந்த பாரிய முதலீட்டாளர்களைக் கொண்ட ஒரு சில பாரிய செயற்றிட்டங்களுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. வ/ப இலங்கை சீனி சுத்திகரிப்பு தனியார் கம்பனி 220 மில்லியன் அமெரிக்க டொலர் பாரிய முதலீடுகளைக் கொண்ட முழுமையான இந்திய உரிமை கொண்ட கம்பனியாகும். ஹம்பனபெட்ரோ கெமிகல்ஸ் கம்பனியும், பொலிமர் ரேசிங் உற்பத்திக்காக 141.19 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடுகளைக் கொண்ட இந்திய உரிமை கொண்ட கம்பனிகளாகும்.

வ/ப டோக்கியோ கிழக்கு சீமெந்துக் கம்பனியினாலும் 63.12 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுடன் சீமெந்து உற்பத்திக் கைத்தொழில் சாலையினைத் தாபிப்பதற்காக இறக்குமதி மீள் கட்டமைப்புக் குழுவின் கீழ் முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. பாதணி உற்பத்திப் பாகங்களை விநியோகிக்கும் மற்றும் அமெரிக்க ஐக்கிய இராச்சியம் (NIKE நிறுவனம்) உடன் இருந்து பாதணித் தொழிற்சாலைக்காக சேவைகளை வழங்கும் மாஸ் பெப்ரிக் பேட்டையில் 78.5 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டுக்காக எதிர்பார்க்கப்பட்ட மொத்த நேரடி வெளிநாட்டு முதலீடு 172.62 மில்லியன் அமெரிக்க டொலர் என்பதுடன் இதில் 182.181 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பொறுப்பேற்கப் பட்டன. 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 52.27% வளர்ச்சியாகும்.

### முதலீட்டாளர் சேவைத் திணைக்களம்

இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆவது வாசகத்தின் / பகுதியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகச் செயற்பாடுகளின் ஏற்றுமதி / இறக்குமதிக்காக அங்கீகாரம் வழங்குவதனைப் போன்று கீழ்க்குறிப்பிடப்பட்ட முதலீடுகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட பணிகளை வழங்குவதும் முதலீட்டாளர் சேவைத் திணைக்களத்தின் பொறுப்புக்களாகும்.

- ❖ ஏற்றுமதி / இறக்குமதிப் பொருளிருப்புக்களை பௌதீகப் பரிசோதனைக்கு உட்படுத்தல்.
- ❖ உப ஒப்பந்தம், பரிமாற்றல்கள், மீள் இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதிச் செயற்பாடுகள்.
- ❖ தைத்த ஆடை ஏற்றுமதியின் போது ஐரோப்பிய பங்குடமை நாடுகளுக்கு உற்பத்தித் தேச சான்றிதழ்களை வழங்குதல்.
- ❖ இலங்கை முதலீட்டுச் சபைச் செயற்றிட்டங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொடர்பிலான புள்ளிவிபரங்களை வகுத்தல்.
- ❖ ஏற்றுமதி இற்குமதி தொடர்பான அரச வரிகளைச் சேகரித்தல்.
- ❖ வெளிநாட்டவர்களுக்காக வழங்கும் விசாக்களுக்கான பரிந்துரைகளை வழங்குதல் (வலயங்களின் வர்த்தகச் செயற்பாடுகள் தொடர்பில்)

இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகத்தர்களினால் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொடர்பிலான சுங்க வெளிப்பாடுகள் சார்ந்த ஆவணப் பணிகளில் அங்கீகாரங்கள் மேற்கொள்ளப்பட்ட ஐந்து மத்திய நிலையங்கள் இத்திணைக்களத்தின் கீழ் கொழும்பு, கட்டுநாயக்க, பியகம, கொக்கல, பல்லேகலை ஆகிய இடங்களில் தாபிக்கப்பட்டுள்ளன. இது எவ்வாறக இருப்பினும் இலங்கை முதலீட்டுச் சபையின் கைத்தொழில்களில் பொருள்

ஏற்றுமதி, இறக்குமதி போன்ற செயற்பாடுகள் தொடர்பில் பௌதீகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுச் சான்றிதழ் வழங்கும் 12 மத்திய நிலையங்கள் நாடு பூராகவும் தாபிக்கப்பட்டுள்ளன.

இலங்கை சுங்கப் பிரிவின் உதவியுடன் முதலீட்டு சேவைத் திணைக்களத்தினால் இணையத் தளத்தினை அடிப்படையாகக் கொண்டு ASYCUDA WORLD என்ற பெயரில் சுங்க கணனி முறைமையினை அமுல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து DTI வசதிகள் ஊடாக இலத்திரனியல் முறைக்கு இலங்கை முதலீட்டுச் சபைக்கு சகல ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் சுங்க வெளிப்பாடுகள் (CUSDECs) வழங்குவதன் மூலம் இலங்கை முதலீட்டுச் சபையின் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகத்தினால் கப்பலேற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக ஏற்றுமதி இறக்குமதிச் செயற்பாட்டு முறைமைகள் (IEMS) இன் கீழ் முற்கொடுப்பனவு கணக்கு ஊடாக சுய செயற்பாடுகள் இலங்கை முதலீட்டுச் சபை சேவைக் கட்டணத்தினைச் செலுத்தும் பணிகளுக்காக வகுக்கப்பட்டுள்ளன. இலங்கை முதலீட்டுச் சபையின் சேவைக் கட்டணங்களை உரிய நேரத்திற்குச் செலுத்துவதற்காக முதலீட்டாளர்களுக்கு ஈ-கொடுப்பனவு (இலத்திரனியல் கொடுப்பனவு) வசதிகளை அமுல்படுத்துவதற்குத் தேவையான பணிகள் இலங்கை முதலீட்டுச் சபையின் நிதித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

ஏற்றுமதி மற்றும் இற்குமதிகளின் பெறுமதி (ரூ.மி.)




| வகைகள் | 2010 | 2011 | மாற்றங்கள் | வளர்ச்சி (%) |
|---|---|---|---|---|
| இறக்குமதி | 486,495.00 | 558,306.66 | 71,811.66 | 12.86 |
| ஏற்றுமதி | 711,558.00 | 761,111.06 | 49,553.06 | 6.51 |

<u>இலங்கை முதலீட்டுச் சபையின் கைத்தொழில்களுக்கான செயற்பாட்டு கொள்கலன் கையாளுகை அளவு (ஏற்றுமதி / இறக்குமதி)</u>




| வகைகள் | 2011 | 2012 | வித்தியாசம் | வளர்ச்சி (%) |
|---|---|---|---|---|
| இறக்குமதி | 58829 | 69533 | 10704 | 15.39 |
| ஏற்றுமதி | 75678 | 90826 | 15148 | 16.68 |

<u>அரசுக்கான வருமானம் - வரி</u>




| வகைகள் | 2011 | 2012 | வித்தியாசம் | வளர்ச்சி (%) |
|---|---|---|---|---|
| வருமர்னம் | 9,528.00 | 10,004.14 | 476.14 | 4.76 |

<u>செயற்பாடுகள் சார்ந்த சுங்க வெளிப்பாடுகளின் எண்ணிக்கை</u>




| வகைகள் | 2010 | 2011 | வித்தியாசம | வளர்ச்சி (%) |
|---|---|---|---|---|
| இறக்குமதி | 167163 | 193481 | 26318 | 13.60 |
| ஏற்றுமதி | 289187 | 328950 | 39763 | 12.09 |

## சட்டம்சார் உதவிகள்

இலங்கை முதலீட்டுச் சபையின் சட்டம்சார் திணைக்களத்தினால் முதலீட்டுச் சபையினைப் போன்று முதலீட்டாளர்களுக்கு தொழில்சார் ஆலோசனைகள் / சேவை வழங்கலுக்கான பொறுப்புக்களை முன்னெடுக்கின்றது. இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆவது வாசகத்தின் கீழ் 2008 இலக்கம் 14 கொண்ட சீர்திருத்தப்பட்ட வியூக அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டங்களுக்கான முதலீடுகள் மற்றும் முதலீட்டு உடன்படிக்கைகளுக்காக வசதிகளை வழங்குவதற்காக உரியதான சட்ட முறைமை / கட்டமைப்புக்கள் தொடர்பாக முதலீட்டாளர்களுக்கான சேவைகளை வழங்குவதும் இப்பிரிவின் பிரதான பொறுப்புக்கள் ஆகும். இலங்கை முதலீட்டுச் சபைக்கு எதிராக நிறுவனங்களினால் தாக்கல் செய்யப்படும் வழக்குகளின் போது நிலையியற் சபைச் சட்ட ஒழுங்கு விதிமுறைகளுக்கு அமைவாக அது சார்ந்த செயற்பாடுகள் குறித்த பணிகளைக் கையாழுவதும் இத்திணைக்களத்தின் பிரதான பொறுப்பாகும்.

முதலீடு சார்ந்த சட்டச் சேவைகளுக்காக வழங்கும் போது ஆலோசகராகச் செயற்படுவதுடன் இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆவது வாசகம் மற்றும் அதன் வியூக அபிவிருத்திச் செயற்றிட்டச் சட்டத்தின் கீழ் செயற்றிட்டங்களுக்காக இலங்கையில் அமுலில் உள்ள சட்டம் சார் செயற்பாடுகளைப் பயன்படுத்த வேண்டிய முறைகள் தொடர்பாக அறிவுறுத்துவதும் இலங்கையில் ஆரம்பிக்க அங்கீகாரம் வழங்கப்பட்ட செயற்றிட்டங்கள் தொடர்பில் கம்பனியின் பிரமாணக் குறிப்பினை வகுப்பதற்காகத் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்வதும், அவற்றை அங்கீகரிப்பதும் சட்டத் திணைக்களத்தின் பணிகளில் அடங்குகின்றன.

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17வது வாசகத்தின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபை இலங்கையில் புதிதாக 126 வர்த்தக நிலையங்களைத் தாபிப்பதற்காக உடன்படிக்கைகள் எட்டப்பட்டன. இவ்வுடன்படிக்கைக்கு அமைய 2008 இல. 14 கொண்ட வியூக அபிவிருத்தி செயற்றிட்ட சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட ஐந்து செயற்றிட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. இலங்கை கேட்வே இன்ரஸ்ரீஸ் தனியார் கம்பனி

2. வெல்கம் ஹோட்டல்ஸ் தனியார் கம்பனி
3. சினோ லங்கா ஹோட்டல்ஸ் அன் ஸ்பா (தனியார்) கம்பனி
4. கிறிஸ் ரான்ஸ்வேர்க் கொழும்பு (தனியார்) கம்பனி
5. யுக்லன் லங்கா (தனியார்) கம்பனி

மீளாய்வுக்குட்படுத்த ஆண்டில் சட்டத் திணைக்களத்தினால் எட்ட வேண்டிய இலக்குகளுக்கு அப்பால் சென்று 126 உடன்படிக்கைகள் எட்டப்பட்டமை இவ்வாண்டில் சட்டத்திணைக்களத்தினால் ஈட்டப்பட்ட பாரிய வெற்றியாகக் கருத முடியும். இதற்கு மேலதிகமாக தொடர்ந்தும் முதலீடுகளை மேற்கொள்ளல், அமுலிலுள்ள வர்த்தகச் செயற்பாடுகளை விரிவுபடுத்தல், வர்த்தகத்தின் தன்மைகளை மாற்றியமைத்தல், செயற்றிட்டங்களை மீள உருவாக்குதல், பின்னடைந்து கைத்தொழில்சாலைகளைச் சுவீகரித்து அவற்றை மீள் கட்டமைத்தல் போன்ற 287 உடன்படிக்கைகள் இவ்வாண்டில் எட்டப்பட்டன.

மேற்கூறப்பட்ட பணிகளுக்கு மேலதிகமாக இலங்கை முதலீட்டுச் சபையிடம் காணப்படும் காணி, தமது கைத்தொழில்களைத் தாபிப்பதற்காக முதலீட்டாளர்களுக்குப் பொறுப்பளிக்கும் பணிகளின் போது பங்கேற்று சட்டத் திணைக்களத்தினால் தமது முதலீட்டாளர்களுக்காக மேற்கொள்ளக் கூடிய பணிகள் தொடர்ந்தும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

## தொழில்நுட்ப சேவைகள் திணைக்களம்

(1) தொழில்நுட்ப சேவைகள் திணைக்களம் கீழக்குறிப்பிடப்பட்ட பணிகளுக்காக பிரதான பொறுப்புக்களை வகிக்கின்றது.

(i) புதிய முதலீட்டு வலயம் / செயற்றிட்டங்களுக்கான துறைகளை இனங்காணுதல்.

(ii) புதிய முதலீட்டு வலயங்களைத் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.

(iii) புதிய முதலீட்டு வலயங்களின் அடிப்படை அபிவிருத்திச் செயற்பாடுகளைப் பொறுப்பேற்றல், அடிப்படை பணிகளுக்காக வலயங்களின் அலகுகளைத் ஸ்தாபித்தல் மற்றும் வலயங்களின் மேற்பார்வை, முகாமைத்துவத்திற்காக ஏனைய வலயங்களின் அமுல்படுத்தப்பட்டவாறான அதிகாரங்களை வழங்கும் அடிப்படையில் உரிய வலயங்களின் பொறுப்பாளர்களுக்கு அதுசார்ந்த பணிகளைப் பொறுப்பளித்தல்.

(iv) கோரிக்கை விடுக்கப்பட்டவாறு மற்றும் தேவைக்கு ஏற்றவாறு அமுலிலுள்ள ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயங்களினால் மேற்கொள்ளப்படும் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திப் பணிகளுக்காக தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.

(v) அமுலிலுள்ள 12 முதலீட்டு வலயங்களுக்கு நீர் விநியோகம், நீர் மற்றும் திண்மக் கழிவு முகாமைத்துவ முறையினை மேற்பார்வை செய்தலும், அது சார்ந்த பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.

(vi) உயர்கல்வி நிறுவனம், வர்த்தகக் கட்டிடத் தொகுதி போன்ற விசேட முதலீட்டுத் திட்டங்களுக்காக உதவி மற்றும் தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்குதல்.

(vii) காணிச் செயற்பாடுகள் தொடர்பிலான பணிகளை முன்னெடுத்தல்.

(viii) உட்கட்டமைப்பு வசதி விருத்திக்காக முழுமையான செயற்பாட்டுத் திட்டங்களை நிர்வகித்தல்.

(2) கட்டநாயக்க, பியகம, கொக்கல, கண்டி, சீதாவாக்க, மீரிகம, மல்வத்த, வத்துபிட்டிவெல, ஹொரண, பொல்ககவெல, மாவத்கம மற்றும் மிரிஜ்ஜவில ஆகிய இடங்களில் தற்போது அமுலில் உள்ள ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயங்கள் (EPZZ) 12 இயங்குகின்றன.

2010 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு ஏனைய நாடுகளின் சர்வதேச வலயங்களாக அடையாளமிடுவதற்கு மாதிரி கைத்தொழில் வலயங்களாக முதலீட்டுச் சபையில் காணப்படும் ஏற்றுமதிச் செயற்பாடுகள் விருத்தி செய்யப்படுவதுடன் 2012 ஆம் ஆண்டில் அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகளுக்காக 707 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டில் சம்பூர், மிரிஜ்ஜவில, சூரியவெவ, முல்லைத்தீவு மற்றும் ஹொரண, வகவத்த புதிய முதலீட்டு வலயங்களைத் தாபிப்பதற்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட அடிப்படைச் செயற்பாட்டுப் பணிகளுக்காக தொழில்நுட்ப சேவைத் திணைக்களம் மற்றும் ஏனைய உரிய திணைக்களங்களுடன் இணைந்து செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

## ஏற்றுமதி செயற்பாட்டு வலயம்/IP/EPP




2012 டிசம்பர் 31 ஆந் திகதி காணப்பட்ட ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயங்கள் தொடர்பான விபரங்கள்

| | KEPZ | BEPZ | KgEPZ | KIP | MwEPZ | PEPZ | MEPZ | HEPZ | SEPZ | MirjEPZ | WEPZ | MalEPP |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பில் இருந்து தூரம் (கி.மீ.) | 31 | 24 | 131 | 135 | 106 | 77 | 65 | 54 | 47 | 234 | 42 | 32 |
| தாபிக்கப்பட்ட ஆண்டு | 1978 | 1985 | 1991 | 1995 | 2000 | 2000 | 1998 | 1999 | 1999 | 1999 | 1998 | 1998 |
| நிலப்பரப்பு | Total – 528.93 Industrial - 288.59 | 450 A | 227 A | 201 A | 53.15 A | 50 A | 260 A | 381 A | 431 A | 54 A | 123 A | 32 A |
| தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | 90 | 59 (Com. Operation) | 22 | 21 | 07 | 05 | 18 | 13 | 30 | 03 | 17 | 05 |
| தொழில் வாய்புக்கள் | 39,397 | 21862 | 12443 | 6931 | 5200 | 3788 | 2650 | L – 1727 F – 24 | 20,729 | 1463 | 8677 | 2540 |

KEPZ = கட்டுநாயக்கா ஏற்றுமதி செயற்பாட்டு வலயம்

BEPZ = பியகம ற்றுமதி செயற்பாட்டு வலயம்

KgEPZ = கொக்கலை ஏற்றுமதி செயற்பாட்டு வலயம்

KIP = கண்டி கைத்தொழில் பேட்டை

MwEPZ = மாவத்தகம ஏற்றுமதி செயற்பாட்டு வலயம்

PEPZ = பொல்கஹவெல ஏற்றுமதி செயற்பாட்டு வலயம்

MEPZ = மீரிகம ஏற்றுமதி செயற்பாட்டு வலயம்

HEPZ = ஹொரண ஏற்றுமதி செயற்பாட்டு வலயம்

SEPZ = சீதாவக்கை ஏற்றுமதி செயற்பாட்டு வலயம்

MirjEPZ = மிரிஜ்ஜவில ஏற்றுமதி செயற்பாட்டு வலயம்

WEPZ = வத்துப்பிட்டிவெல ஏற்றுமதி செயற்பாட்டு வலயம்

MalEPZ = மல்வத்தை ஏற்றுமதி செயற்பாட்டு வலயம்

## சூழல் முகாமைத்துவம்

**திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளின் சுருக்கம் கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.**

- மத்திய சுற்றாடல் அதிகார சபை (CEA) உடன் இணைந்து முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆவது வாசகத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்கான சூழல் அங்கீகாரங்களை வழங்குதல்.

  தேசிய சூழல் (செயற்றிட்டங்களின் அங்கீகாரங்களுக்கான ஒழுங்கு விதிமுறைகள்) கோவைகளுக்கு இணங்க சூழல் அழுத்தங்களை மதிப்பீடு செய்யும் செயற்பாடுகள் (EIA) தேவையானவாறு செயற்றிட்டங்களுக்கு அது தொடர்பில் நடாத்தப்படும் அமர்வுகளில் பங்கேற்றல் மற்றும் அதன் மூலம் அங்கீகரிப்பு ஒழுங்கு விதிமுறைகளுக்காக வசதிகளை வழங்குவதற்கான பங்களிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

  மேலும் மத்திய சுற்றாடல் அதிகார சபை (CEA) இனால் முதலீட்டுச் சபைச் செயற்றிட்டங்களை அங்கீகரிக்கும் நிறுவனம் (PAA) எனத் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

- மத்திய சுற்றாடல் அதிகார சபை (CEA) உடன் இணங்கும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் (EPLL) வழங்கப்பட்டுள்ளது.

- தொடர்புசாதனக் கோபுரங்களைத் ஸ்தாபிப்பதற்காக உத்தேச துறைசார்ந்த தொலைத்தொடர்பு ஒழுங்காக்கல் ஆணைக்குழுச் சபை (TRC) சூழல் பரிந்துரை (ERR) வழங்குதல்.

- முதலீட்டுச் சபைச் செயற்றிட்டங்களுக்குரிய சூழல் மாசுபடுதல் தொடர்பிலான முறைப்பாடுகளுக்கு உரியதாக மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் மற்றும் தேவையான சூழல் மாசுபடுத்தும் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதன் மூலம் அவற்றைத் தீர்த்தல்.

- ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயங்களின் தொழில்நுட்பக் கழிவகற்றும் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்.

மேற்கூறப்பட்ட விடயங்கள் சார்ந்த விளக்கங்கள் சுருக்கமாகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| செயற்பாடுகள் | இல. |
|---|---|
| 1.(அ) செயற்றிட்டங்களுக்காக வழங்கப்பட்ட சூழல் அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை | 69 |
| (ஆ) செயற்றிட்ட மீள் கட்டமைப்பு / விரிவாக்கல்களுக்காக வழங்கப்பட்ட சூழல் அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | 17 |
| 2. வழங்கப்பட்ட / நவீனமயப்படுத்தப்பட்ட சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் (EPLL) எண்ணிக்கை | *695 |
| 3. தொடர்புசாதனக் கோபுரங்களை விருத்தி செய்வதற்கான உத்தேச துறைகள் தொடர்பில் வெளியிடப்பட்ட சூழல் பரிந்துரை (ERR) அளவு | **363 |
| 4. இனங்காணப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 32 |
| 5. சூழல் செயற்பாடுகள் | |
| (அ) கைத்தொழில்சாலைகளில் இருந்து சேகரிக்கப்பட்ட நீர் மாதிரிகளின் எண்ணிக்கை<br>(ஆ) பொதுவான நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் மூலம் சேகரிக்கப்பட்ட நீர் மாதிரிகளின் எண்ணிக்கை | 1032 |
| (இ) நீர் மாதிரிகளின் எண்ணிக்கை | 111 |

* EPL கட்டணங்களினால் உழைக்கப்பட்ட ரூபா 52,12,500.00
** ER கட்டணங்களினால் உழைக்கப்பட்ட ரூபா 72,60,000.00
மொத்த உழைப்பு = ரூ.124,72,500.00

❖ மேற்கூறப்பட்ட விடயத்துக்கு மேலதிகமாக சுற்றாடல் வள அமைச்சு மற்றும் ஏனைய உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடியதைத் தொடர்ந்து இலங்கையினால் கைச்சாத்திடப்பட்டுள்ள சர்வதேச உடன்படிக்கைகளுக்கு (சூழலுக்குரிய) அமைவாக முதலீட்டுச் சபைச் செயற்றிட்டங்கள் உறுதிப்படுத்தப்பட்டன. இவ்வுடன்படிக்கையினால் பாதிப்பு மிகுந்த கலைப்பொருட்களை எல்லைப் பிரதேசம் ஊடகக் கொண்டு செல்வது தொடர்பான பிரிசல்ஸ் உடன்படிக்கை, ஓசோன் படலத்தினை தேய்மானத்துக்கு உட்படுத்தும் பொருட்கள் தொடர்பான மொன்ரியல் உடன்படிக்கை, உக்கலடையாத பொருட்கள் தொடர்பான ஸ்டொக்கோம் உடன்படிக்கை, இரசாயன ஆயுத இணக்கப்பாடு மற்றும் அபாயகர ஔடத மற்றும் உள ரீதியிலான பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய பொருட்களைச் சட்ட ரீதியாகக் கொண்டு செல்வதற்கு எதிரான உடன்படிக்கைகளும் இவற்றில் அடங்குகின்றன.

<u>அடைவுமட்டம் (வெற்றிகள்)</u>

❖ சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் (EPLL) மற்றும் சூழல் பரிந்துரை (ERR) வழங்குவதற்கான செயற்பாடுகள் ஊடாக 12.5 மில்லியன் ரூபாவினை அண்மித்த நிதி ஈட்டப்பட்டது.

❖ 1990 இலக்கம் 12 கொண்ட மாகாண சுற்றாடல் பிரமாணக் குறிப்பின் ஏற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளுக்கு அமைய சூழல் அழுத்தங்களை மதிப்பீட்டுக்கு உட்படுத்தல் (EIA) இனைப் பின்பற்றுவதன் மூலம் மாகாண சுற்றாடல் சூழல் அதிகார சபை (PEA) / வடமேல் மாகாண (NWP) மூலம் புத்தளத்தில் உத்தேச முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தினைத் தாபிப்பதற்காக சூழல் அங்கீகாரங்கள் பெறப்பட்டன.

❖ ISO 9001 : 2008 நிலைமைகளை உறுதிப்படுத்துவதன் அடிப்படையில் தர முகாமைத்துவ முறைமையின் கீழ் 2012 ஆம் ஆண்டுக்காக தாபிக்கப்பட்ட இலக்கு எட்டப்பட்டது. இதன் கீழ் தாபிக்கப்பட்ட இலக்கின் மூலம் 90% முதலீட்டுச் செயற்றிட்டங்களுக்கான சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் (EPL) பெற்றுக் கொள்வது உறுதிப்படுத்தப்படல் வேண்டும். எட்டப்பட்ட இலக்கு 91.8% ஆகும்.

# பொறியியல் அங்கீகாரம் மற்றும் விசேட செயற்றிட்டங்கள்

## திணைக்களத்தின் செயற்பாடுகள் / பணிகள்

பொறியியல்சார் அங்கீகாரம் மற்றும் விசேட செயற்றிட்டத் திணைக்களம் இரு பிரிவுகளாகச் செயற்படுவதுடன் இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆவது வாசகத்திற்குரிய செயற்றிட்டங்களுக்காக அடிப்படை இரு சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் இரு பிரிவுகளாக அமைவன,

1. பொறியியல் சார் அங்கீகாரப் பிரிவு / பகுதி

2. காணி மற்றும் வசதிகளை வழங்கும் பிரிவு

## 1. பொறியியல்சார் அங்கீகாரப் பிரிவு

### 1. அ) பொறியியல்சார் அங்கீகாரப் பிரிவின் பணிகள்

முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆவது வாசகத்திற்குரிய செயற்றிட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் அவற்றின் நிர்மாணக் கட்டங்களுக்கிடையே, அடிப்படைச் சேவைகள் நான்கு மேற்கொள்ளப்படுகின்றன.

அ) அமைவிட அங்கீகாரம்
ஆ) திட்டமிடல் அங்கீகாரம்
இ) அளவினை உறுதிப்படுத்தல்
ஈ) உறுதிப்பாட்டுச் சான்றிதழை வழங்குதல்

- அமைவிட அங்கீகாரம்

உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னர் உரிய அமைவிடத்தின் புதிய செயற்பாடுகளைத் ஸ்தாபிப்பதில் காணப்படும் இயலுமைகள் மற்றும் அச்செயற்றிட்டங்கள் காரணமாக எழக்கூடிய சூழல் அழுத்தங்கள் தொடர்பில் கண்டறிவதற்காக சகல உத்தேச துறைகளுக்கும் சூழல் முகாமைத்துவத் திணைக்களத்துடன் இணைந்து செயற்படுகின்றது. அவற்றின் செயற்பாடுகளின் போது 17 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உடன்படிக்கையில் கைச்சாத்திடும் வகையில் முதலீட்டுச் சபையின் சட்டத் திணைக்களத்திற்கு முடியுமான வகையில் துறைசார் அங்கீகார ஆவணம் வழங்கப்படுகின்றது.

- கட்டிடத் திட்டமிடல்களை அங்கீகரித்தல்

உரிய கோவைகள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட சகல தரங்களும் பொருத்தமான கட்டிடங்களின் திட்டமிடல்கள் மூலம் நிவர்த்தி செய்யப்பட்டுள்ள வேளையில் கட்டிடத் திட்டமிடலுக்கான அங்கீகாரச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. கட்டிடத் திட்டமிடலுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பின்னர் முதலீட்டாளர்களுக்கு நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க முடியும்.

- நிர்மாணிப்புப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான அளவியல் சான்றிதழ்

17 ஆவது வாசகத்தின் செயற்றிட்டங்களுக்கு வரியின்றி ஒரு சில நிர்மாணப் பொருட்களை இறக்குமதி செய்ய முடியும். அவ்வாறான பொருட்கள் இறக்குமதி செய்யப்படும் சகல சந்தர்ப்பங்களிலும் இறக்குமதி உட்பட மொத்தத் தேவைகளுடன் தற்போது கையளிக்கப்பட்டுள்ள பொருட்களின் நிலைமைகள் தொடர்பில் பரிசோதனை செய்ததன் பின்னர் உரிய அளவையியல் சான்றிதழை வழங்குவது பொறியியல் அங்கீகாரத் திணைக்களத்தின் பணிகளாகும்.

- உறுதிப்பாட்டுச் சான்றிதழ்

  அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கு அமைய நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டதனை உறுதிப்படுத்துவதற்காக நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்ததன் பின்னர் பொறியியல் சார் அங்கீகாரத் திணைக்களத்தினால் நிர்மாணத் துறைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படு கின்றன. இதன் போது வரியற்ற இறக்குமதிப் பொருட்கள் / மூலப்பொருட்கள் பௌதீகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு உரியவாறு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பது கண்டறியப்படும்.

1. ஆ) 2012 ஆம் ஆண்டில் ஏற்பட்ட முன்னேற்றங்கள்

2012 ஆம் ஆண்டுக்குள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள்;

- 155 கட்டிட நிர்மாணத்தள அங்கீகாரங்கள்
- கட்டிட திட்டமிடல் அங்கீகாரங்கள் 177 வழங்கப்பட்டன
- 1,483 பொருட்கள் வரிச்சலுகையின்றி விடுவிக்கப்பட்டன
- 21 ஒப்பீட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

## 2. காணிகள் மற்றும் வசதி வழங்கல் பிரிவின் செயற்பாட்டுப் பணிகள்

2. அ) காணி மற்றும் வசதிகள் வழங்கும் பிரிவின் பணிகள்

- இப்பிரிவினால் முதலீட்டாளர்களுக்கு சமயச் செயற்றிட்டங்களுக்காக அரச காணிகளைப் பெற்றுக்கொள்ள விருப்பம் காண்பிப்போருக்கு உதவுதல் மற்றும் வசதிகளை வழங்குவதற்கான செயற்பாடுகளும் அமுல்படுத்தப்பட்டுள்ளன. மேலும் அமுல்படுத்தப்பட்டுள்ள வேளையில் எழக்கூடிய பிரச்சினைகளுக்கு தீர்மானங்களை எட்டுவதற்காக அரச காணிகள் முதலீட்டாளர்களினால் ஏற்கனவே உரிமை கோரும் செயற்றிட்டங்களுக்கு உதவுதலும் இப்பிரிவின் பணிகளாகும். இப்பிரிவின் செயற்பாடுகள் கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றன.

அ) முதலீட்டுச் சபையின் செயற்றிட்டங்கள் மற்றும் பொருளாதார செயற்பாட்டு வலயங்களின் செயற்பாடுகளுக்கான இயலுமைகள் கொண்ட காணிகளை வழங்குதல்.

ஆ) 17 ஆவது வாசகத்தின் கீழ் முதலீட்டுச் சபைச் செயற்றிட்டங்களுக்கான அரச காணியினைப் பெற்றுக் கொள்வதற்கு முதலீட்டாளர்களை ஈடுபடுத்தல் மற்றும் வசதிகளை வழங்குதல்.

இ) தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு உரியதாக நிரல் நிறுவனங்களுடன் இணைப்புப் பணிகளை மேற்கொள்ளல்.

ஈ) 17 ஆவது வாசகத்தின் கீழ் முதலீட்டுச் சபைச் செயற்றிட்டத்திற்காக அமுலிலுள்ள தனியார் மற்றும் அரச காணிகள் தொடர்பாக சமகாலப்படுத்தப்பட்ட தகவல்களுடன் காணி வங்கியினைப் பேணல்.

2. ஆ) இப்பிரிவின் கீழ் 2012 ஆம் ஆண்டுக்குள் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றங்கள்

- இத்திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கீழ்க்குறிப்பிடப்பட்ட செயற்றிட்டங்களுக்கான அரச காணி மற்றும் அவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான முகாமைத்துவச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

i) ஓமேகாலைன் (தனியார்) கம்பனி - ஆடைக்கைத்தொழில் செயற்றிட்டங்களை விரிவாக்கும் அடிப்படையில் வவுனியா மாவட்டத்தில் 22 ஏக்கர் காணி நீண்ட காலக் குத்தகை முறைக்கு வழங்குதல்.

ii) மாஸ் அக்டிவ் (தனியார்) கம்பனி - தமது ஆடைக் கைத்தொழில் செயற்றிட்டத்தை உருவாக்குவதற்காக நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 14 ஏக்கர் காணியினை வழங்குதல்.

iii) மாஸ் இன்டிமேட் (தனியார்) கம்பனி - தமது ஆடைக் கைத்தொழில் சாலைச் செயற்றிட்டத்தை விரிவாக்குவதற்காக நீண்டகால குத்தகை அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 15 ஏக்கர் காணியினை வழங்குதல்.

- 50 ஆடைக் கைத்தொழில்சாலைகள் மற்றும் 200 வேலைத்திட்டங்களின் கீழ் கீழ்க்குறிப்பிடப்பட்ட மூடப்பட்ட வர்த்தக நிறுவனங்களை மீள் கட்டியெழுப்புதல்.

i) பிபிலையில் முன்னர் இருந்த லங்கா கார்மன்ட்ஸ் (தனியார்) கம்பனி, இன்டர்லொக் பெசன்ஸ் (தனியார்) கம்பனிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

ii) நுவரெலியா வட்டவல முன்னர் இருந்த கிங்ஸ் இன்டர்நெஷனல் (தனியார்) கம்பனி, ஜே.எஸ். வட்டவல தனியார் கம்பனிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டது.

iii) வவுனியா முன்னர் இருந்த சென்டன் கார்மென்ட் (தனியார்) கம்பனி, ஹைட்ரோமணி பெஷன் (தனியார்) கம்பனிக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டது.

- சுற்றுலாக் கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்ட செயற்பாட்டு வலயங்களை முல்லைத்தீவில் ஸ்தாபிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் இப்பணிக்கான பொருத்தமான இடத்தினை இனங்காணும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- றைனோ இன்டர்ரீஸ் (தனியார்) கம்பனிக்கு அஸ்பெஸ்டஸ் கூரைத்தகடு உற்பத்தி நிலையத்தினைத் ஸ்தாபிப்பதற்காக வவுனியாவில் அரச காணியினை வழங்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## கைத்தொழில் உறவுகள்

முதலீட்டுச் சபை வர்த்தக நிலையங்களில் அதிகூடுதலான வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறனுக்காக அபிவிருத்தி செய்யப்படும் சிறந்த தொழில்நுட்ப உறவுச்சூழலை மேற்கொள்ளும் போது முதலீட்டுச் சபையின் கைத்தொழில் உறவுகள் திணைக்களத்தினால் அத்தியவசியப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்விலக்கினை எட்டும் வகையில் கைத்தொழில் உறவுத் திணைக்களத்தினால் கீழ்க்குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் நிர்வகிக்கப்படுகின்றன.

- முதலீட்டுச் சபையின் கீழுள்ள வர்த்தக நிலையங்களில் தொழிலாளர் முகாமைத்துவ இணைப்பு கைத்தொழில் சமாதானம் மற்றும் ஒத்துழைப்புக்கள் உட்பட அதியுயரிய உற்பத்தித் திறனை முன்னெடுக்கும் வகையில் ஊக்குவிப்புக்கள் உட்பட வசதிகளை வழங்குதல்.

- தேவையான சந்தர்ப்பங்களில் முதலீட்டுச் சபை வர்த்தக நிலையங்களின் முகாமைத்துவத்திற்கு மற்றும் ஊழியர்களுக்கு தொழிலாளர் சட்டம் / கோவைகள் மற்றும் கைத்தொழில் உறவுகளை பழக்குவது தொடர்பான ஆலோசனைச் சேவைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல்.

- ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயங்களில் தொழில் வங்கி இணையத்தளங்களை அமுல்படுத்தும் முதலீட்டுச் சபையின் தொழில் சேவைப் பிரிவு மற்றும் நியமிப்பதற்கான உதவி வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்தல் ஊடாக முதலீட்டாளர்களின் ஊழிய அணித் தேவையினை எட்டுவதற்கு உதவுதல்.

2012 ஆம் ஆண்டில் கைத்தொழில் உறவுத் திணைக்களத்தினால் கீழ்க்குறிப்பிடப்பட்ட முன்னேற்றங்கள் எட்டப்பட்டன.

❖ **தொழிலாளர் தரங்களைப் பேணல்**

தொழிலாளர் சட்டம் / கோவைகள் மற்றும் முதலீட்டுச் சபை தொழிலாளர் தரம் மற்றும் தொழில் உறவுகள் கையேட்டின் ஊடாக வகுக்கப்பட்டுள்ள தொழிலாளர் தரங்களுக்கு ஏற்றவாறான செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக வலய மற்றும் முதலீட்டுச் சபையின் பிரதான அலுவலகங்களுடன் இணைந்த கைத்தொழில் உறவுகள் தொடர்பான உத்தியோகத்தரினால் முதலீட்டுச் சபையின் வர்த்தகங்களில் காலத்துக்குக் காலம் தொழிலாளர் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2012 ஆம் ஆண்டில் வலய மற்றும் வலயங்களுக்கு வெளியே முதலீட்டுச் சபைச் செயற்றிட்டங்களின் 675 தொழிலாளர்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டதைப் போன்று மேற்கூறப்பட்ட ஆய்வின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

❖ **தொழிலாளர் முகாமைத்துவ ஒத்துழைப்புக்களை ஊக்குவித்தல்**

முதலீட்டுச் சபை வர்த்தகங்களின் தொழிலாளர் முகாமைத்துவ ஒத்துழைப்புக்களை ஊக்குவிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட பிரதான கருவியாக அமைவது “ஊழியர் சபை” ஆகும். ஊழியர்களின் கவுன்சில், தொழிற்சங்கங்களை ஆர்வமூட்டம் மற்றும் இணைப்புக்கள் மேற்கொள்ளப்படும் அதேவேளையில் தொழிலாளர் முகாமைத்துவம் தொடர்பில் முதலீட்டுச் சபை வர்த்தகங்களின் ஊழியர்களின் விரிவான பங்கேற்பினை உறுதிப்படுத்தும் நோக்குடன் ஊழியர் கவுன்சிலுக்கு ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

2012 ஆம் ஆண்டில் 98 ஊழியர் சபைகளை வகுக்க மற்றும் அமுல்படுத்துவதற்காக தொழில்நுட்ப உறவுகள் திணைக்களத்தினால் வசதிகள் வழங்கப்பட்டன.

தொழிற்சங்க உத்தியோகத்தர்களுக்கு வலயத்தின் தொழிலாளர்களை சுதந்திரமாக தனிப்பட்ட ரீதியில் சந்திக்கும் போது பயன்படுத்துவதற்காக கட்டுநாயக்க, பியகம மற்றும் கொக்கல ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயங்களில் வசதிகளை வழங்கும் மத்திய நிலையத்திற்கு உரியதாக தொழிலாளர் உறவுப் பிரிவின் மூலம் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் உரிய அரச நிறுவனங்களுடன் தொடர்புபட்டு சமூகக் கலந்துரையாடல்கள் ஊடாக அறிவுறுத்தல்கள், வேலைத்தள ஒத்துழைப்பு, நட்புறவு ரீதியிலான பணிகள் மற்றும் சுகாதாரம் உட்பட பாதுகாப்பு போன்ற பல்வேறுபட்ட தலைப்புக்கள் தொடர்பாக முதலீட்டுச் சபையின் ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ உத்தியோகத்தர்களுக்காக 2012 ஆம் ஆண்டுக்குள் 80 அறிவுறுத்தல் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

❖ **கைத்தொழில் பிணக்குகளைத் தீர்த்தல் / இணக்கப்பாடுகளைத் தோற்றுவித்தல்**

முதலீட்டுச் சபை வர்த்தகச் செயற்பாடுகளில் தொழில்நுட்ப சமாதானம் மற்றும் ஐக்கியத்தினை முன்னெடுக்கும் நோக்குடன் முதலீட்டுச் சபை வர்த்தகங்களில் உருவாகக் கூடிய எந்தவொரு கைத்தொழில் பிணக்குகளையும் தீர்ப்பதற்காக தொழில் உளவு உத்தியோகத்தர்கள் தலையீடு

செய்வார்கள். 2012 ஆம் ஆண்டில் தொழிலாளர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் 19 கைத்தொழில் பிணக்குகள் தீர்க்கப்பட்டுள்ளன.

❖ **ஆட்சேர்ப்பு உதவித் திட்டம்**

முதலீட்டுச் சபை வர்த்தகம் மற்றும் தொழில் எதிர்பார்க்கும் இளைஞர்களுக்கிடையே சர்வதேச உறவுகளுக்கான வசதிகள் வழங்கப்படுவது முதலீட்டுச் சபையின் தொழில் வங்கியின் இணையத்தளத்தின் (www.boijobbank.com) ஊடாகவே வழங்கப்படுகின்றது. முதலீட்டுச் சபை வர்த்தகங்களில் காணப்படும் தொழில் வாய்ப்புக்கான சந்தர்ப்பங்கள் தொடர்பாக பொது மக்களுக்கு அறிவுறுத்துவதற்காக இச்சேவைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

2012 ஆம் ஆண்டில் ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயங்களின் தொழில் வாய்ப்புச் சேவை அலகுகளின் 63,578 பேர் தொழில் எதிர்பார்த்துப் பதிவு செய்துள்ளதுடன் இதில் 61,903 இனைத் தாபிப்பதற்கான ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சைகளுக்கு வர்த்தக நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

மேலும் முதலீட்டுச் சபை வர்த்தகங்களில் காணப்படும் தொழில் வாய்ப்புச் சந்தர்ப்பங்களுக்காக கூடுதலாக தொழில் வாய்ப்புக்களை எதிர்பார்போரை கவர்ச்சிக்குட்படுத்தும் நோக்குடன் ஏனைய உரிய நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் தொழில் சந்தை / தொழில் வழிகாட்டல் வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்வதற்கு தொழிலாளர் உறவுத் திணைக்களத்தினால் வசதிகள் வழங்கப்படுகின்றன. 2012 ஆம் ஆண்டில் அவ்வாறான 19 தொழில் சந்தைகள் நாடுபூராகவும் நடாத்தப்பட்டுள்ளன.

❖ **விசேட அடைவு மட்டங்கள்**

பல ஆண்டுகளாக இலங்கையினால் அனுபவித்து வந்த நியாய மதிப்புக் கணக்கு முறைமை (US-GSP) 2010 ஆம் ஆண்டில் அமெரிக்க அரசாங்கத்தினால் இடைநிறுத்தப்பட்டது விசேடமாக ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயங்களின் ஊழியர்களின் உரிமைகளில் குறைபாடுகள் ஏற்பட்டதாகக் குற்றஞ்சாட்டி AFLCIO வினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவினை அடிப்படையாகக் கொண்டாகும். இது எவ்வாறாக இருப்பினும் மேற்கூறப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் தொழில் அமைச்சுடன் இணைந்து முதலீட்டுச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட பங்குடமை முயற்சிகள் காரணமாக 2012 ஜூன் மாதம் அளவில் எதுவித மாற்றங்களும் இன்றி மீள மேற்கூறப்பட்ட வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

## ஊடகம் மற்றும் பிரச்சாரம்

பல்வேறுபட்ட ஊடகங்கள் மூலம் வெளித் தொடர்பாடல்கள் தொடர்பில் முதலீட்டுச் சபையின் ஊடகத் திணைக்களம் பொறுப்புக்களை வகிக்கின்றது. பல்வேறுபட்ட ஆர்வங்கொண்ட (முதலீட்டாளர்களை) தொடர்புபடுத்தக் கூடிய வகையில் இலங்கையில் காணப்படும் முதலீட்டுச் சந்தர்ப்பங்கள், வர்த்தகச் சூழல், முதலீட்டுச் சபையின் பயன்பாடுகள் போன்ற விடயங்கள் தொடர்பில் அறிவுறுத்துவதற்காக 2012 ஆம் ஆண்டில் முதலீட்டுச் சபையினால் உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

2012 ஆம் ஆண்டில் ஊடகங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பிரச்சார வேலைத்திட்டங்கள் முதலீட்டுச் சபையினால் மேற்கொள்ளப்பட்டன. மேலும் அச்சு ஊடக ஊக்குவிப்பு வேலைத்திட்டங்கள், வெளியீடுகள், விளம்பரங்கள், கூடுதலான மக்களைத் தழுவக் கூடியவாறு தகவல்களை வழங்கக் கூடிய வகையில் முதலீட்டுச் சபையினால் அறிக்கைகள், நிகழ்ச்சிகள், திரைப்படங்களும் தயாரிக்கப்பட்டன.

2012 ஆம் ஆண்டில் இலங்கை முதலீட்டுச் சபை ஊடகத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் கீழே குறிப்பிடப்பட்டள்ளன.

ஊடக வெளியீடுகள் :

- ஊடக வெளியீடுகள் கணிசமான அளவு மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டதுடன் அவை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கும் விநியோகிக்கப்பட்டன.

- "முதலீட்டாளர்களுக்கு ஆலோசனை" "வரிச் சலுகை மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீடு (FDI) கொள்கை" ஆகிய புதிய ஊக்குவிப்புக் கையேடு மற்றும் விசேட துறைசார் கையேடு ஆகிய "சுற்றுலாக் கைத்தொழில் மற்றும் ஓய்வு, தகவல் தொழில்நுட்பம் / ITES", "மீள் பயன்பாட்டு சக்தியூட்டல்", "உட்கட்டமைப்பு வசதிகள்", "உற்பத்தி", "விவசாயம்", "கல்வி" போன்ற திட்டமிடல்கள் மற்றும் அச்சுப் பணிகள்.

- விசேட சந்தர்ப்பங்களில் விளம்பர அறிவித்தல்களைத் தயாரித்துச் சமர்ப்பித்தல்.

நிகழ்வுகளுக்கான பங்கேற்புக்கள் :

- அனுராதபுரம் ஓயாமடுவில் இடம்பெற்ற தேசத்துக்கு மகுட தேசிய கண்காட்சியில் பங்கேற்றல், முதலீட்டுச் சபையின் விற்பனைக் கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கண்காட்சி வளாகத்தில் ஆகும். முதலீட்டுச் சபையின் கண்காட்சி கூடத்தில் முதலீடுகள் தொடர்பான முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் கொண்ட புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டதுடன் தொழில் வங்கி கருமபீடம், முதலீடுகள் தொடர்பிலான தகவல்கள் மற்றும் விசேடமாக வகுக்கப்பட்ட கையேடுகள், கண்காட்சிக் கூடங்களைப் பார்வையிட வருகைதரும் பொது மக்களுக்கிடையே விநியோகிக்கப்பட்டன.

- மீரிகம, மல்வத்த மற்றும் வத்துப்பிட்டிவெல ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களின் பிரவேச வீதியில் பாரிய விளம்பர அறிவித்தல் பலகைகள் மூன்று காட்சிப்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்டதுடன் இதனைக் காட்சிப்படுத்தும் பணிகள் தொழில்நுட்ப வளத் திணைக்களத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டன.

- மூன்று தசாப்தங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட முதலாவது சர்வதேச வர்த்தகக் கண்காட்சியான யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் பங்கேற்றதுடன் இவ்வர்த்தக் கண்காட்சி இங்கை கண்காட்சி மற்றும் சம்மேளன சேவை (தனியார்) கம்பனி, இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சபையுடன் இணைந்து யாழ் வர்த்தக மற்றும் தொழில்நுட்பச் சங்கத்துடன் இணைந்து ஒழுங்கு செய்யப்பட்டது. இதற்கு இணைவாக இலங்கை முதலீட்டுச் சபையினால் யாழ் நூலகத்தில் முதலீட்டு மாநாடு நடாத்தப்பட்டது.

- கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் நடாத்தப்பட்ட தேசிய நிலையான மின்சக்திக் கண்காட்சியான "விதுல்கா – 2012" இல் பங்கேற்றமை.

- கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற ஏற்றுமதி ஊக்குவிப்புச் சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட "எக்ஸ்போ – 2012" வர்த்தகக் கண்காட்சியில் பங்கேற்றமை.

- இணையத்தள முகாமைத்துவம், முதலீட்டுச் சபை இணையத்தளம் www.investsrilanka.com இனைப் பார்வையிட்டோரின் எண்ணிக்கை 125470 ஆகும்.

## நிர்வாகம்

நிர்வாகத் திணைக்களம் கீழ்க்குறிப்பிடப்பட்ட உப பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளன.

1) களஞ்சியசாலை மற்றும் வழங்கல் பிரிவு
2) போக்குவரத்துப் பிரிவு
3) கட்டிடப் பராமரிப்பு
4) பொது நிர்வாகம்
5) தபால் சேவை

நிர்வாகத் திணைக்களத்தினால் ஏனைய திணைக்களங்கள் மற்றும் முதலீட்டுச் சபைகளின் ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயங்களின் செயற்பாடுகளுக்குத் தேவையான ஒத்துழைப்புக்கள் வழங்கப்படுகின்றன. போக்குவரத்து மற்றும் வாகனத் தேவைகளை வழங்குதல், பொருள் மற்றும் அலுவலக உட்கட்டமைப்பு வசதிகளை தேவைக்கு ஏற்றவாறு வழங்குவதன் மூலம் தமது சேவை பெறுநர்களின் திணைக்களங்களுக்கு இத்திணைக்களத்தினால் வசதிகள் வழங்கப்படுகின்றன.

### 2012 ஆம் ஆண்டின் அடைவு மட்டங்கள்

1) வீதிப் போக்குவரத்துக்குப் பொருத்தமற்ற 15 வாகனங்கள் அகற்றப்பட்டு இதனூடாக 6.9 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டது. பிரதான அலுவலகம் மற்றும் வலய ங்களின் போக்குவரத்துத் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் புதிதாக 9 மோட்டார் வண்டிகள் மற்றும் 6 டபல்கப் வண்டிகைளைக் கொள்வனவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2) சர்வதேச பிணக்குகளைத் தீர்க்கும் மத்திய நிலையங்களைத் ஸ்தாபிக்கும் வகையில் உலக வர்த்தக மையத்தின் 6 ஆவது மாடியில் குத்தகை வரிக்காக நிதி அமைச்சுடன் முதலீட்டுச் சபையினால் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது.

3) 19 மில்லியன் ரூபா பெறுமதியான நவீனரக 156 கணனிகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் களஞ்சியசாலை மற்றும் விநியோகப் பிரிவினால் பங்களிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. சபையின் வருடாந்த காகிதாதிகள் மற்றும் பாவனைப் பொருட்களின் வழங்கல் விநியோகப் பிரிவினால் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டது.

### தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு

முதலீட்டுச் சபையின் தீயணைப்பு மற்றும் பாதுகாப்புத் திணைக்களத்தினால் சொத்துக்கள் மற்றும் மானிட உயிர்களின் பாதிப்புக்கள் உட்பட பாதுகாப்புத் தொடர்பிலான முக்கிய பணிகளை மேற்கொள்கின்றது. வெளிநாடு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்களினால் ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயங்கள் மற்றும் தொழில்நுட்பப் பூங்காக்களில் பிரதானமாக முதலீட்டுச் செயற்றிட்டங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் தாபிக்கப்பட்டிருப்பது இலங்கையின் பிரதான முதலீட்டு / வர்த்தக செயற்பாடுகளை மேற்கொள்ளும் முதலீட்டுச் சபையின் ஊடாகவாகும். இச்சகல இடங்களிலும் தாபிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு மற்றும் தீயணைப்பு பணியாளர் சபைக்கு ஓய்வுடன் இருப்பதற்கான இயலுமைகள் காணப்படுவதில்லை என்பதுடன் மிகுந்த அவதானத்துடன் தொடர்ந்தும் 24 மணித்தியாலங்கள் கடமையில் ஈடுபட வேண்டியிருப்பது அதியுயரிய மட்டத்திலான பண்புசார் தரமிக்க சேவையினை வழங்கும் நோக்குடனாகும். பாதுகாப்பு மற்றும் தீயணைப்பு பணியாளர் சபையின் தரப்பினருக்கு எதுவித சிரமங்களும் இன்றி அல்லது முறைமையில் குறைபாடுகள் இருக்கக் கூடாது என்பதனால் இப்பிரிவு மிகுந்த கவனத்துடன் செயற்படுகின்றது. தமக்குப் பொறுப்பளிக்கப்படும் பிரதேசங்களில் சொத்துக்கள், உடமைகள், உயிர்களைப் பாதுகாப்பதனைப் போன்று பாதுகாப்பு தொடர்பான தேவையான தரங்கள் உரியவாறு கடைப்பிடிக்கப் படுகின்றமையினால் இப்பிரிவு பாராட்டத்தக்க செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. சேவையின் தரத்துக்கமைய முதலீட்டுச் சபையினால் அமுல்படுத்தப்பட்டுள்ள சர்வதேச தர நிறுவகம் (ISO) தரம் வழங்கப்பட்டுள்ளதுடன் இதே தரம் வலயங்களில் காணப்படும் கைத்தொழில்சாலைகளிலும் காணப்படுகின்றன.

கடமை நிலையங்களின் எண்ணிக்கை - பிரதேச ரீதியாக




முதலீட்டுச் சபையின் பாதுகாப்பு மற்றும் தீயணைக்கும் திணைக்களம் முதலீட்டுச் சபையினால் நியமிக்கப்பட்ட பணியாளர் சபை மற்றும் தனிப்பட்ட பாதுகாப்புக் கம்பனியினால் கூலிக்கு அமர்த்தப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்களைக் கொண்டமைந்துள்ளன.

**முதலீட்டுச் சபையின் - பார்துகாப்பு மற்றும் தீயணைப்புப் பிரிவு உட்பட கூலிக்கு அமர்த்தப்பட்ட ஊழியர்களின் முழுமையான பலம்**




நிலையத்தின் பாதுகாப்பினை நிலைப்படுத்தும் வேளையின் போது சகல வலயங்களிலும் நடமாடும் சேவைகள் தொடர்பான தேர்ச்சி மிக்க பணியாளர் சபையினை சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பாதுகாப்பு மற்றும் தீயணைப்புப் பிரிவுகள் மூலம் தழுவப்படும் பிரதான பணிகளாக அமைவது நாசகாரச் செயற்பாடுகள், புரட்சிகர / அழிவுச் செயற்பாடுகள், திருட்டு, வரிச்சலுகை மற்றும் ஏனைய சட்டரீதியல்லாத பொருட்களை அகற்றுதல், வலயங்களுக்கு சட்டவிரோதமாகப் பிரவேசித்தல் மற்றும் சகல நுழைவு மற்றும் வெளியேறும் வாயில்களும் ஆளணியின் பலத்தினைப் பிரயோகித்தல் போன்றன மேற்கொள்ளப்படுகின்றன.

கேள்விமனுக் கோரலின் ஊடாக முதலீட்டுச் சபையினால் வருடாந்தம் அலுவலகம் / பேட்டை / வலயங்களுக்கான குறைபாடுகளைத் தீர்ப்பதற்காக தனியார் பாதுகாப்புக் கம்பனிகளின் சேவைகள் பெறப்படுகின்றன. போதியளவு உத்தியோகத்தர்களினால் பொறுப்பேற்கப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளும் முதலீட்டுச் சபையின் பாதுகாப்பு மற்றும் தீயணைப்புத் திணைக்களம் ஏற்பாடுகளை மேற்கொள்கின்றது.

முதலீட்டுச் சபையின் தீயணைப்புப் பிரிவு கட்டுநாயக்க, பியகம மற்றும் சீதாவக்க ஆகிய ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. சகல வலய, கைத்தொழில் சாலைகள் மற்றும் பிரதான அலுவலகங்களில் தொடர்ந்தும் தீயணைப்பு ஒத்திகை வேலைத்திட்டங்கள் மற்றும் அவசர வெளியேற்றல் பயிற்சிகளும் நடாத்தப்படுகின்றன. இவ்வலயங்களில் தாபிக்கப்பட்டுள்ள கைத்தொழில்சாலைகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளன. வலயத்துக்குள் அவசர நிலைமைகளுக்கு மேலதிகமாக வலயங்களுக்கு வெளியே அவற்றுக்கு அருகாமையில் அவசர நிலைமைகள் தொடர்பாகவும் தீயணைக்கும் பிரிவு உரிய பணிகளை மேற்கொள்வதுடன் கைத்தொழில்சாலை உத்தியோகத்தர்களுக்கு தீயணைக்கும் பயிற்சி மற்றும் உரிய பிரதேசங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நபர்கள் வருகை தரும் வேளையில் உரிய சந்தர்ப்பங்களிலும் சேவையில் ஈடுபடுத்தப்படும். சகல தீயணைக்கும் செயற்பாடுகளும் பிரதேசத்தில் பொலிஸ் நிலையம் மற்றும் அருகாமையில் உள்ள இராணுவ முகாம்களின் உத்தியோகத்தர்களின் இணைப்புடன் மேற்கொள்ளப்படுகின்றன. முதலீட்டுச் சபையின் பிரதான அலுவலகத்தினால் ஓவசீஸ் ரியலிட்டி கம்பனி மற்றும் கொழும்பு தீயணைக்கும் பிரிவின் உதவியுடன் பெறப்படுவதுடன் முதலீட்டுச் சபை தீயணைக்கும் பிரிவின் உதவியின்றி வலயங்களின் மாநகர சபை, அருகாமையில் உள்ள இராணுவ முகாம்களின் உதவியும் பெறப்படுகின்றன.

**பிரதேசங்களுக்கு அமைய பாதுகாப்பு / தீயணைப்பு உத்தியோகத்தர்களைத் ஸ்தாபித்தல் (முதலீட்டுச் சபை மற்றும் கூலிக்குப் பெற்ற)**




2012 ஆம் ஆண்டில் உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறல், விலகல் அல்லது தொண்டர் அடிப்படையில் சேவையை விட்டு விலகல் காரணமாக பணியாளர் சபையில் கூடுதலான வெற்றிடங்கள் காணப்பட்டன. இருப்பினும் குறைந்த வளத்துக்கு மத்தியிலும் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை விட அதியுயரிய அளவு பணிகளை மேற்கொள்ள முடிந்தது. தினத்தின் 24 மணித்தியாலயம் பூராகவும் பாதுகாப்பு மற்றும் தீயணைப்பு செயற்பாட்டுப் பிரிவு மிகுந்த கவனத்துடன் செயற்படுகின்றது. இதன் போது கடமையாற்றும் மணித்தியாலங்களுக்கு அப்பால் எழும் எந்தவொரு எதிர்பாராத செயற்பாடுகள் அல்லது நிர்வாகப் பிரச்சினைகள் தொடர்பிலும் நிலைப்படுத்தப்பட்டுள்ள பணியாளர் சபையினால் சிறந்த முறையில் நிர்வகித்து உயர் மட்ட அதிகாரிகளின் ஆலோசனைகள் இன்றியும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கட்டுநாயக்க, பியகம, சீதாவக்க, கொக்கல மற்றும் புதிய வலயங்கள் தொடர்பாகக் கூடுதலான கவனஞ் செலுத்தப்பட்ட போதிலும் சிறிய சம்பவங்களைத் தவிர பாதுகாப்பு மற்றும் தீயணைப்புப் பணியாளர் சபைக்கு எதிராக வலயப் பொறுப்பாளர்கள் அல்லது சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் எதுவித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை.

ஆண்டு பூராகவும் செயற்படும் பிரதேசங்களில் வார இறுதி மற்றும் விடுமுறை தினங்களிலும் முழுமையான பாதுகாப்புப் பணியாளர்கள் சபை பொறுப்புடன் செயற்படும் சந்தர்ப்பங்களைத் தவிர வேலை மணித்தியாலங்களுக்குள் முழுமையான அனுமதிப்பத்திர வருமானம் அதியுயரிய மட்டத்தில் காணப்பட்டது. அதனைத் தொடர்ந்து முதலீட்டுச் சபை பணியாளர் சபையுடன் இணைந்து பிரதேச அனுமதிப் பத்திரங்களை வெளியிடுவது வலயப் பாதுகாப்புப் பணியாளர் சபையின் பொறுப்பாகும். 2012 ஆம் ஆண்டில் முழுமையான அனுமதிப்பத்திர வருமானங்களில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

சகல வலயங்களிலும் தொடர்ந்தும் கைத்தொழில்சாலைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. திருட்டு முயற்சிகள் தொடர்பில் கண்டறிவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

**2012 ஆம் ஆண்டில் பாதுகாப்பு இனங்காணல்கள்** - மொத்த அடிப்படையில் நோக்கும் போது கட்டுநாயக்க ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயம் (KEPZ) இல் ஐந்து பரிசோதனைகள், ஏனைய மூன்று சம்பவங்கள், 850 பயன்படுத்தப்படாத அனுமதிப் பத்திரங்கள், பியகம ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயத்தின் (BEPZ) – 2 திருட்டு முயற்சிகள், 568 காலங்கடந்த அனுமதிப் பத்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றமை தொடர்பில் இனங்காணப்பட்ட ஐந்து சந்தர்ப்பங்கள், கொக்கல ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயம் (KGEPZ) இல் உள்ளகப் பணியாளர் சபை 900 / 20 ஆடைக் கைத்தொழில்சாலைகள், சீதாவாக்க ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம் (SEPZ) – 321 ஆடைக் கைத்தொழில்சாலைகள் / காலாவதியான 625 அனுமதிப்பத்திரங்கள், ஹொரண செயற்பாட்டு வலயத்தில் இருந்து ர்நீணு 28 பீப்பாய் எரிபொருள், மீரிகம ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயத்தில் இருந்து 3, மீரிகம ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயத்தில் (MEPP) நாளாந்த அடிப்படையில் பயன்படுத்தாத பிரதேச அனுமதிப் பத்திரங்கள், மாவத்தகமையில் இருந்து (MPEPZ) மூன்று மற்றும் பொல்ககவெல ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயத்தில் இருந்து (PEPZ) 32 நூல் பந்துகள் / 15 தைத்த ஆடைகள் என்பன அடங்குகின்றன.

### மாதாந்த அமர்வு

மாதாந்தக் கூட்டம், சுருக்கம், பயிற்சி மற்றும் ஆலோசனை அமர்வுகள் சகல வலயங்களிலும் நடாத்தப்பட்டுள்ளன. பாதுகாப்பு மற்றும் தீயணைப்புப் பயிற்சி நிறுவனங்கள் ஊடாக திறன் விருத்திக்கான சந்தர்ப்பங்கள் 2013 ஆம் ஆண்டில் பணியாளர் சபைக்கு வழங்கப்பட்டன.

சகல பிரிவுகளிலும் பாதுகாப்பு மற்றும் தீயணைப்புப் பணியாளர் சபைக்கு பதவியுயர்வு மிகக் குறிப்பிட்ட அளவு 2012 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

### முதலீட்டுச் சபையின் தீயணைக்கும் பிரிவு

தீயணைக்கும் பிரிவின் பணிகளாக அமைவது தீ அனர்த்தம் மற்றும் அவசர சந்தர்ப்பங்களில் செயற்பாடுகளை மேற்கொள்ளல், தீ அபாயம் தொடர்பில் கவனஞ் செலுத்துதல், கைத்தொழில் சாலைப் பணியாளர் சபைக்கு தீயணைப்பு ஒத்திகைகள் மற்றும் அறிவுறுத்தல்களை வழங்குதல், தீயணைப்பு உபகரணங்கள் தொடர்பிலான பயிற்சிகள், ஒப்பீட்டுச் சான்றிதழ்களை வழங்குதல், வர்த்தகச் செயற்பாடுகளுக்காக தீயணைப்புச் சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் அகற்றுவதற்கான சான்றிதழ்களை வழங்கும் பணிகளும் இவற்றில் அடங்குகின்றன. நாளாந்தம் தீயணைப்பு உபகரணங்கள் வினைத்திறனுடன் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. ஒருசில தீயணைக்கும் வண்டிகள் பழைய மற்றும் செயற்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதுடன் தீயணைக்கும் உபகரணங்கள் பூர்த்தியற்ற நிலையில் காணப்படுகின்றன. மேலும் வலய முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட அவசர நிலைமைகள் தொடர்பாகவும் தீயணைக்கும் பிரிவினர் செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர்.

**கட்டுநாயக்க ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயம் (KEPZ)**

தீயணைக்கும் பிரிவினால் 27 தீயணைப்பு அழைப்புக்கள் வெற்றிகரமாகக் கையாளப்பட்டதுடன் விசேடமாக 4 கடமைகள் தொடர்பிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டு பயிற்சிகள், வெளியேற்றல் மற்றும் பரிசோதனைகள் (உள்ளக மற்றும் வெளி) தொடர்பான 73 எழுத்துமூல அமர்வுகளில் பங்கேற்புக்கள் இடம்பெற்றன.

**பியகம ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயம் (BEPZ)**

தீயணைக்கும் பிரிவினால் உள்ளக தீயணைப்பு 23 அழைப்புக்கள், 9 வெளி அழைப்புக்கள் தொடர்பில் இப்பிரிவு வெற்றிகரமாக பதிலளித்துள்ளதுடன் அதற்கான செயற்பாடுகளையும் மேற்கொண்டது. தயார்நிலையில் இருக்க வேண்டிய 8 பிரதேசங்கள் காணப்படுகின்றன. (உள்ளக மற்றும் வெளி) பிரதேசங்களில் 16 கம்பனிகளுக்கு தீயணைப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

**சீதாவாக்க ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயம் (SEPZ)**

தீயணைக்கும் பிரிவினால் 65 உள்ளகத் தீயணைப்பு அழைப்புக்கள் தொடர்பில் வெற்றிகரமான கையாளுகைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் 22 ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. 33 தீயணைப்புப் பயிற்சிகள், அவசர 17 ஒத்திகைகள் மற்றும் 42 தயார்படுத்தல்கள் உட்பட ஏனைய கடமைகளும் மேற்கொள்ளப்பட்டன.

குறைபாடுகளுக்கு மத்தியிலும் 2012 ஆம் ஆண்டில் எட்டப்பட்ட வெற்றிகள் பாராட்டத்தக்கது எனக் குறிப்பிடுவது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதுடன் ஆண்டு பூராகவும் தொடர்ந்தும் 24 மணித்தியாலங்கள் பாதுகாப்பு மற்றும் தீயணைப்புப் பணியாளர் சபையின் அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளப்பட்ட சேவை மூலம் ஈட்டப்பட்ட பயனாக இதனைக் குறிப்பிட முடியும்.

## மானிட வள முகாமைத்துவம்

<u>மானிட வளத் திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள்</u>

முதலீட்டுச் சபையின் முழுமையான மானிட வளக் கட்டமைப்பினை முகாமைத்துவத்திற்கு உட்படுத்தும் பொறுப்பினைக் கொண்டுள்ள பிரதான திணைக்களம் மானிட வளத் திணைக்களம் ஆகும். அதன் பிரதான பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

❖ மானிட வளத்தினைத் திட்டமிடல்
  - தற்போது மற்றும் எதிர்கால மானிட வளத் தேவைகளை மதிப்பீடு செய்தல்.
  - மேற்கூறப்பட்ட தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் ஆட்சேர்ப்பு மற்றும் தேர்ந்தெடுப்புச் செயற்பாடுகளை அமுல்படுத்தல்.

❖ செயற்சாதனை மதிப்பீடு
  - ஊழியர் செயற்சாதனையை வருடாந்தம் மீளாய்வுக்கு உட்படுத்தி மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும்.
  - ஊழியர்களின் செயற்சாதனைக்கு அமைய வருடாந்த சம்பள அதிகரிப்புக்களை வழங்குதல்.
  - ஊழியர்களின் செயற்சாதனை, தகைமை மற்றும் அனுபவங்களுக்கு அமைய அவர்களை உயர் தரங்களுக்குப் பதவியுயர்த்துதல்.

❖ மானிடவள அபிவிருத்தி
  - தனிப்பட்ட மற்றும் அமைப்பின் வெற்றியினை விருத்தி செய்வதற்காக பயிற்சி மற்றும் தொழில்சார் முயற்சிகளைக் கூட்டாக இணைந்து பயன்படுத்தல், அதன் மூலம் உரிய நபர்களுக்கு தமது தொழில்

வாய்ப்புக்களில் ஈடுபடுவதற்குக் காணப்படும் சந்தர்ப்பங்கள் குறித்து இயலுமைகளை விருத்தி செய்ய நடவடிக்கை எடுப்பதுடன் சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட கற்றல் செயற்பாடுகள் ஊடாக எதிர்காலத் தொழில் விருத்திக்காக தயார்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.

❖ ஒழுக்கத்தைப் பேணல்
  - ஊழியர்களின் ஒழுக்கத்தைப் பேணல் மற்றும் முன்னேற்றுவதற்காகத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
  - தொழிலாளர் பணியகம், கைத்தொழில் திணைக்களம், மானிடவள கவுன்சில் மற்றும் நீதி மன்றம் போன்ற வெளி நிறுவனங்களின் தொழிலாளர் பிரச்சினைகள் தொடர்பிலான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

❖ சமூகமளிப்பு மற்றும் விடுமுறையினைப் பேணல்.

❖ ஊழியர் நலன்புரிச் சேவைகள்
  - பல்வேறுபட்ட முறையிலான கடன் யோசனைத் திட்டங்களை அமுல்படுத்தல், விளக்கமான ஆயுள் மற்றும் அங்கவீனக் காப்புறுதி, வைத்திய வசதிகள், இறுதிக் கிரியைகளுக்கான உதவி யோசனைத் திட்டங்கள், போக்குவரத்துச் சேவைகள், போக்குவரத்து நிவாரணம் மற்றும் சமூகமளிப்பு ஊக்குவிப்புக் கொடுப்பனவு யோசனைத் திட்டங்கள் போன்றன.

2012 ஆம் ஆண்டின் அடைவு மட்டங்கள் (வெற்றிகள்)

❖ இந்தியாவின் AonHewitt நிறுவனத்துடன் இணைந்து மானிடவள தொழிலாளர் சங்கத்தினால் நடாத்தப்படும் மானிடவள முகாமைத்துவ விருது விழா 2012 ஆம் ஆண்டுக்காகப் பங்கேற்று அதில் அரச / அரச சார் அமைப்பின் பிரிவின் கீழ் இறுதிப் போட்டியாளர்களுக்கிடையே முன்னணியில் இருக்க வாய்ப்புக் கிட்டியது.

❖ முதலீட்டுச் சபையினை நியமித்தல் மற்றும் பதவியுயர்வுச் செயற்பாடுகளை கிரமமாக முன்னெடுத்து அதன் புதிய ஆட்சேர்ப்பு யோசனைத் திட்டம் (SOR) இற்கான அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

❖ முதலீட்டுச் சபையின் வைத்தியக் கொடுப்பனவுகளை மீளளிப்புச் செய்யும் முறைமை புதிய மானிட மூலதன முறைமையின் ஊழியர் பயன்பாட்டு மொடியுலில் இடைத் தொடர்புகளுக்கு இடையிலான மானிட மூலதன முகாமைத்துவம் (HCM) முறைமையூடாக மேற்கொள்வதற்கான செயற்பாடுகளை பின்பற்றுவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

❖ முதலீட்டுச் சபையின் ஊழியர் சேவைக்காக புதிதாக 7 நிறைவேற்று உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவிச் சேவைப் பிரிவின் 46 ஊழியர்கள் மற்றும் ஆரம்பத் தரத்தில் 34 ஊழியர்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

❖ ஒப்பந்த அடிப்படையில் இருந்த 7 ஊழியர்கள் மற்றும் சமயாசமய அடிப்படையில் இருந்த 4 ஊழியர்கள் சேவையில் நிரந்தர ஊழியர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

❖ 145 நிறைவேற்று உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரிவின் 35 ஊழியர்கள் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 17 ஊழியர்கள் உயர் தரங்களுக்குப் பதவியுயர்த்தப் பட்டனர்.

❖ 11 உத்தியோகத்தர்கள் விஞ்ஞானமானி / கலைமானிப் பட்டப் பாடநெறியினைத் தொடர்வதற்காக அனுசரணை வழங்கப்பட்டதுடன் முதலீட்டுச் சபை ஊழியர்களுக்காக 10 வெளிநாட்டுப் பயிற்சிக்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன. மேலும் 528 முதலீட்டுச் சபை உத்தியோகத்தர்களுக்கான வதிவிடப்பயிற்சி வேலைத்திட்டங்கள் 10 நடாத்தப்பட்டதுடன் நபர்களுக்கிடையிலான மற்றும் சமூக

நிலைப்பாட்டுக்கான தேர்ச்சியினை விருத்தி செய்யும் நோக்குடன் முதலீட்டுச் சபைக்குப் புதிதாகப் பதவியுயர்வு பெற்ற பிரதிப் பணிப்பாளர்கள் மற்றும் சகல உதவிப் பணிப்பாளர்களுக்கான ஆளுமை விருத்தி, வர்த்தக சமூக விழுமியங்கள் தொடர்பான மூன்று செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக முதலீட்டுச் சபைக்குப் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட 65 ஊழியர்களுக்காக மூன்று நாள் அறிவுறுத்தல் வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

❖ நிதி மற்றும் கணக்கியல், மானிடவள முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், கணினி உள்ளீடு, சுருக்கெழுத்து, செயலகப் பணிகள், தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் கணக்காய்வு ஆகிய துறைகளில் தொழில்பயிற்சி தொடர்பில் பல்கலைக்கழக மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்களினால் 35 பேர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

<u>பிரதான செயற்சாதனை தொடர்பான துறைசார் ஒப்பீடுகள் - 2011 மற்றும் 2012</u>




<u>மொத்த ஊழியர் அணி</u>

2012 டிசம்பர் 31 ஆந் திகதியன்று முதலீட்டுச் சபையின் மொத்த பணியாளர் சபையின் பலம் 1151 ஆகும்.




| | |
|---|---|
| நிறைவேற்று உத்தியோகத்தர் | 504 |
| முகாமைத்துவ உதவியாளர் | 384 |
| ஆரம்ப மட்டத்தில் ஊழியர் | 263 |
| **மொத்த ஊழியர் சபை** | **1151** |




| 2012 ஆம் ஆண்டுக்குள் மேற்கொள்ளப்பட்ட புதிய நியமனங்கள் | |
|---|---|
| பதவிகள் | ஊழியர் எண்ணிக்கை |
| நிறைவேற்று பணியாளர் சபை | |
| நிறைவேற்றுப் பணிப்பாளர் | 01 |
| பணிப்பாளர் | 01 |
| உதவிப் பணிப்பாளர் | 02 |
| கனிஷ்ட முகாமைத்துவ ஊழியர் பிரிவு | 03 |
| **–புதிய முழு நியமனங்கள் - நிறைவேற்று** | **07** |
| முகாமைத்துவ உதவியாளர் சேவை | |
| முகாமைத்துவ உதவியாளர் | 41 |
| கணினி இயக்குனர் | 03 |
| தொழில்நுட்ப உதவியாளர் | 02 |
| ஆரம்ப மட்டத்தின் ஊழியர்கள் | |
| சாரதிகள் | 12 |
| தச்சுத் தொழிலாளி | 01 |
| மேசன் | 01 |
| அலுவலக உதவியாளர் / தொழிலாளி | 20 |
மேலும், இலங்கை முதலீட்டுச் சபை முன்னைய ஆண்டிற்கான ரூபா 23,558,385 ஆன தொழிற்பாட்டு நட்டத்திற்கு எதிராக மீளாய்வாண்டில் ரூபா 137,599,489 ஆன தொழிற்பாட்டு இலாபத்தை உழைத்திருந்தமை தொழிற்பாட்டு இலாபம் ரூபா 161,579,647 ஆல் அதிகரித்திருந்தமையைக் காட்டுகின்றது.

3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகள் முன்னைய ஆண்டிற்கான நேரொத்த தொகைகள் மற்றும் முக்கிய தரவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு | |
|---|---|---|
| | 2012 | 2011 |
| | ரூபா | ரூபா |
| தொழிற்பாட்டு வருமானம் | 2,226,369,460 | 2,004,951,097 |
| கழி : தொழிற்பாட்டு செலவுகள் | (2,088,769,971) | (2,028,509,481) |
| தொழிற்பாட்டு மிகை / (நட்டம்) | 137,599,489 | (23,558,385) |
| தேறிய நிதி வருமானம் | 130,485,678 | 142,660,209 |
| வரிக்கு முன்னரான மிகை | 268,085,167 | 119,101,824 |
| கழி : வட்டி வருமானத்தின் வரி | (28,960,401) | (32,935,760) |
| வரிக்குப் பின்னரான மிகை | | |
| கூட்டு :- ஏனைய திரண்ட வருமானம்:- | 239,124,766 | 86,166,064 |
| கடப்பாட்டில் கணிப்பீட்டு இலாபம் / (நட்டம்) | (10,046,932) | 18,825,926 |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் | 229,077,834 | 67,340,138 |

(ஆ) ஏற்றுமதி செயன்முறை வலையங்கள், ஏற்றுமதி செயன்முறை பேட்டைகள் கைத்தொழிற் பேட்டைகள், பிராந்திய அலுவலகங்கள் மற்றும் புதிய பொருளாதார வலையங்கள் என்பவற்றின் நிதிசார் மீளாய்வு கீழே தரப்படுகின்றது.

7

| ஆக்கக் கூறு | வருமானம் | தொழிற்பாட்டுச் செலவுகள் | தொழிற்பாட்டு இலாபம் | % | வரிக்கு பிந்திய இலாபம் | % |
|---|---|---|---|---|---|---|
| | (ரூபா. '000) | (ரூபா. '000) | (ரூபா. '000) | | (ரூபா. '000) | |
| தலைமை அலுவலகம் | 588,477 | 894,683 | (306,206) | -52 | (212,671) | (36) |
| ஏற்றுமதி செயன் முறை வலயங்கள் | | | | | | |
| - கட்டுநாயக்கா | 512,710 | 392,814 | 119,896 | 23 | 122,412 | 24 |
| - பியகம | 344,928 | 272,768 | 72,160 | 21 | 74,283 | 22 |
| - சீதாவாக்கை | 280,027 | 129,389 | 150,638 | 54 | 151,083 | 54 |
| - மீரிகம | 31,155 | 37,940 | (6,785) | (22) | (6,666) | (21) |
| - வத்துபிட்டிவெல | 40,656 | 48,795 | (8,139) | (20) | (7,873) | (19) |
| - ஹொறண | 138,611 | 75,008 | 63,603 | 46 | 63,743 | 46 |
| - மாவத்தகம | 33,667 | 24,007 | 9,660 | 29 | 9,750 | 29 |
| - பொல்காவலை | 36,305 | 16,131 | 20,174 | 56 | 20,222 | 56 |
| - கொக்கல | 91,129 | 104,071 | (12,942) | (14) | (12,105) | (13) |
| ஏற்றுமதி செய்முறை பேட்டை | | | | | | |
| - மல்வத்த | 12,992 | 18,601 | (5,609) | (43) | (5,553) | (43) |
| கைத்தொழில் பேட்டைகள் | | | | | | |
| - கண்டி | 92,892 | 49,751 | 43,141 | 46 | 43,876 | 47 |
| - மிரிஜ்ஜவல | 2,394 | 1,915 | 479 | 20 | 479 | 20 |
| பிராந்திய அலுவலகங்கள் | | | | | | |
| - வடமேல் | 4,521 | 27,004 | (22,483) | 497 | (21,881) | 484 |
| - வட கிழக்கு | 23,630 | 3,619 | 20,011 | 85 | 20,024 | 85 |
| மொத்தம் | 2,234,103 | 2,096,503 | 137,599 | | (1,821,304) | |

இலங்கை முதலீட்டுச் சபையானது 9 ஏற்றுமதி செயன் முறை வலையங்கள் (ஈபீசற்) ஒரு ஏற்றுமதி செயன்முறைப்பேட்டை (ஈபீபீ) 2 கைத்தொழிற்பேட்டைகள் (ஐபீ) மற்றும் 2 பிராந்திய அலுவலகங்கள் (ஆர்ஓ) என்பவற்றினூடாக அதன் செயற்பணிகளை மேற்கொள்கிறது மேற்படி தகவல்களின் படி, பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

8

(i) தலைமை அலுவலகத்திலிருந்தான செயற்பாட்டு இலாபம் கடந்த மூன்று ஆண்டுகளில் பாதகமாக குறைந்திருந்ததுடன் மீளாய்வாண்டில் செயற்பாட்டு நட்டம் ஏற்பட்டிருந்தது.

| ஆண்டு | இலாபம் /(நட்டம்) |
|---|---|
| | ரூபா |
| 2009 | 55,205 |
| 2010 | 45,582 |
| 2011 | 12,735 |
| 2012 | (306,206) |

(ii) 3 ஏற்றுமதி செயன் முறை வலையங்கள் மற்றும் ஏற்றுமதி செயன்முறை பேட்டை என்பன பாரிய நிருவாகக் கிரயம் காரணமாக 2007 தொடக்கம் 2012 வரை தொடர்ந்து நட்டத்தை ஏற்படுத்தியிருந்தன. விபரங்கள் பின்வருமாறு

| | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 |
|---|---|---|---|---|---|---|
| | (ரூபா. '000) | (ரூபா. '000) | (ரூபா. '000) | (ரூபா. '000) | (ரூபா. '000) | (ரூபா. '000) |
| ஏற்றுமதி செயன் முறை வலயங்கள் | | | | | | |
| - மீரிகம | (6,620) | (11,418) | (11,584) | (18,720) | (22,978) | (16,624) |
| - வத்துபிட்டிவெல | (7,766) | (15,743) | (13,703) | (12,787) | (11,872) | (18,214) |
| - கொக்கல | (11,775) | (26,980) | (17,503) | (23,149) | (23,412) | (42,364) |
| ஏற்றுமதி செயன்முறை பேட்டை | | | | | | |
| - மல்வத்த | (5,531) | (3,226) | (3,458) | (3,639) | (2,576) | (6,237) |

### 3.3 தொழிற்பாட்டு மூலதன முகாமைத்துவம்

| (அ) திரவ வீதம் | 2012 | 2011 | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| நடை முறை வீதம் | | | நடைமுறை வீதத்தின் பாரிய வித்தியாசம் மற்றும் போதிய தொழிற்பாட்டு மூலதனம் |
| - உண்மையானது | 1.2 | 3.29 | |
| - நியமம் | 2 | 2 | |

9

(ஆ) நடவடிக்கை வீதம்

| | | | |
|---|---|---|---|
| - கடன்பட்டோர் புரள்வு வீதம் - காலம் | 3.17 | 3.27 | கடன் சேமிப்பு திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை. |
| - கடன்பட்டோர் புரள்வு வீதம் - நாட்கள் | 115 | 113 | நலிந்த கடன் சேகரிப்பு |

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 இ.மு.சபை செயற்திட்டங்களின் முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை முதலீட்டுச் சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட செயற்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்ட மற்றும் மூடப்பட்ட அல்லது இடை நிறுத்தப்பட்ட செயற்திட்டங்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் சதவீதங்கள் என்பன பற்றிய விபரங்கள் 2012 ஆம் ஆண்டு மற்றும் முன்னைய 10 ஆண்டுகளின் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட செயற்திட்டங்களுடன் ஒப்பிட்டு கீழே தரப்படுகின்றன.

| | உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட செயற்திட்டங்கள் | இரத்துச் செய்யப்பட்ட செயற்திட்டங்கள் | மூடப்பட்ட மற்றும் இடை நிறுத்தப்பட்ட செயற்திட்டங்கள் | இரத்துச் செயயப்பட்ட மூடப்பட்ட மற்றும் இடை நிறுத்தப்பட்ட செயற்திட்டங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | v1 | V2 | V3 | |
| 2002 | 202 | 68 | 3 | 71 |
| 2003 | 272 | 55 | 3 | 58 |
| 2004 | 274 | 75 | 7 | 82 |
| 2005 | 208 | 121 | 8 | 129 |
| 2006 | 258 | 113 | 14 | 127 |
| 2007 | 310 | 119 | 18 | 137 |
| 2008 | 252 | 107 | 22 | 129 |
| 2009 | 182 | 93 | 33 | 126 |
| 2010 | 269 | 124 | 61 | 185 |
| 2011 | 165 | 47 | 20 | 67 |
| 2012 | 171 | 80 | 42 | 122 |
| மொத்தம் | 2,563 | 1002 | 231 | 1,233 |

10

v1 உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டவை / மூடப்பட்டவை / செயற்பாடு இடைநிறுத்தப்பட்ட செயலற்ற செயற்திட்டங்கள் மற்றும் விரிவாக்கல் உள்ளடங்கலாக

v2 வர்த்தக செயற்பாடு ஆரம்பித்த பின்னர் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டவை (விரிவாக்கல் இரத்துச் செய்யப்பட்டவை நீங்கலாக)

v3 வர்த்தக செயற்பாடு ஆரம்பித்த பின்னர் மூடப்பட்டவை /இடைநிறுத்தப்பட்டவை (மூடப்பட்டவை / விரிவாக்கல் இடைநிறுத்தப்பட்டவை நீங்கலாக)

(i) இரத்துச்செய்யப்பட்ட, மூடப்பட்ட மற்றும் இடை நிறுத்தப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கையை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 85 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ii) உடன்படிக்கை கைச்சாத்திட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை மீளாய்வாண்டின் போது 163 வரை கைவிடப்பட்டதுடன் இது கடந்த 10 ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது ஆகக் குறைந்த பதிவாக இருந்தது.

(iii) 123 செயற்திட்டங்கள் அல்லது 53 சதவீதமானது 2010 முதல் 2012 வரையான காலத்தின் போது மூடப்படும் இடை நிறுத்தப்பட்டும் இருந்தது.

(ஆ) 2006 தொடக்கம் 2012 வரையான காலத்தின் போது இலங்கை முதலீட்டுச் சபையூடாக மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் உள்நாட்டு தேறிய முதலீடுகள் என்பன கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (எவ்டிஐ) | உள்நாட்டு தேறிய முதலீடுகள் |
|---|---|---|
| | யூ.எஸ்.டொலர் (மில்) | யூ.எஸ்.டொலர் (மில்) |
| 2006 | 603 | 400 |
| 2007 | 734 | 490 |
| 2008 | 888 | 226 |
| 2009 | 601 | 151 |
| 2010 | 516 | 433 |
| 2011 | 1066 | 426 |
| 2012 | 1338 | 608 |

வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2011 ஆம் ஆண்டில் 106 சதவீதத்தாலும் மீளாய்வாண்டில் 25 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தன. மேலும், உள்நாட்டு தேறிய முதலீடுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 43 சதவீதம் அதிகரிப்பான ரூபா 182 மில்லியனால் அதிகரித்திருந்தது.

4.2 முகாமைத்துவ திறமையின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உலக வர்த்தக மைய கட்டிடத்தின் மேற்குக் கோபுரத்தின் 12 ஆம் தட்டு தொடர்பாக இலங்கை முதலீட்டுச் சபை ஒரு தனியார் கம்பனியுடன் 1996 நவம்பர் 04 இல் ஒரு குத்தகை உடன்படிக்கையை கைச்சாத்திட்டிருந்ததுடன் வைப்பாக ரூபா 2.637,240 ஐச் செலுத்தியிருந்தது. அந்த அலுவலகப் பகுதி 2010 யூனில் மேற்படி கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை முதலீட்டுச் சபை வைப்புச் செய்யப்பட்ட தொகையை 2013 மே மாதம் வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

12 ஆம் மட்டத்திலிருந்து அப்போதைய மந்திரியின் அலுவலகம் சடுதியாக – வெற்றிடமாக்கப்பட்டமை தொடர்பாக முன்னறிவித்தல் கொடுக்கப்படாமை காரணமாக ரூபா 1,303,020 ஆன வைப்பை குத்தகையாளர் பறிமுதல் செய்துவிட்டதாக தலைவர் எனக்கு அறிவித்திருந்தார்.

(ஆ) இ.மு.சபையால் மீளாய்வாண்டில் முன்னாள் சிரேஷ்ட முகாமையாளரால் (உள்ளகக் கணக்காய்வு) தொடரப்பட்ட விருப்பத்தற்குரிய இளைப்பாறும் வயதான 58 ஆண்டுகளிற்கு அப்பால் சேவையை நீடிக்கப்படாத திர்மானத்திற்கெதிரான வழக்கில் தொழில் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட இறுதித் தீர்ப்பின்படி அவருக்கு ரூபா 618,530 தொகையான நட்டஈட்டைச் செலுத்தியிருந்தது.

(இ) வத்துப்பிட்டிவல ஏற்றுமதி செயன்முறை வலயத்தில் 1998 ஆம் ஆண்டில் ஒரு வீடமைப்புத் திட்டத்தை நிருமாணிப்பதற்காக இலங்கை முதலீட்டுச் சபை ஒரு மலேசியக் கம்பனியுடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகினறன.

(i) கம்பனியின் நலிந்த செயலாற்றல் காரணமாக வழங்கப்பட்ட அங்கீகாரம் மீளப்பெறப்பட்டதுடன் இலங்கை முதலீட்டுச் சபையால் திட்டம் 34 வீடுகளுடன் கையேற்கப்பட்டது.

(ii) நிருமாணிக்கப்பட்ட வீடுகள், இன்னொரு கம்பனிக்கு வீடுகளை ஏலத்தில் விற்பதற்காக வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இலங்கை

12

முதலீட்டுச் சபைக்கும் ஏலவிற்பனையாளருக்குமிடையில் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டமைய நிருபிப்பதற்கான சான்றுகளெதுவும் கணக்காய்விற்கு தரப்பட்டிருக்கவில்லை.

(iii) அந்தக் கம்பனியிடமிருந்து ரூபா 1,604,200 தொகை ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்பாடாது கிடைக்க வேண்டியதாக இருந்தது.

(iv) ரூபா 24,216,500 பெறுமதியான இருபத்தைந்து வீட்டு அலகுகள் ரூபா 19,772,192 விற்பனை விலையில் விற்கப்பட்டிருந்தன. இதன் விளைவாக இலங்கை முதலீட்டுச் சபைக்கு ரூபா 4.444,308 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(v) இரண்டு வீடமைப்பு அலகுகள் தவணைப்பண அடிப்படையின் கீழ் 2006 இலிருந்து வரிசை அமைச்சின் முன்னாள் அமைச்சருக்கு இணைக்கப்பட்ட தனிப்பட்ட செயலாளருக்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2012 ஆம் ஆண்டின் போது இலங்கை முதலீட்டுச் சபை மத்திய ஆய்வு நிலையம் (சீபீரீ) உறுகொடவத்தை மற்றும் விமான சரக்கு கிராம அலகு (ஏசீவீயூ) கட்டுநாயக்கா ஆகிய இரண்டில் இலங்கை சுங்க திணைக்களத்தால் ஈடுபடுத்தப்பட்ட சுங்க அலுவலகளிற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,771,885 தொகையான மேலதிக நேர வேலைக்காக அவற்றின் சரியான தன்மைக்காக இணைக்கப்பட்ட அந்த அலுவலர்களின் வருகைப் பதிவேடுகளைப் பரீசீலனை செய்யாது மீளளிப்புச் செய்திருந்தது. சுங்கத்திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட பதிவேடுகளின் படி உத்தியோகத்தர்களில் சிலர் ஒரு மாதத்திற்கு 600 மணித்தியாலங்களிற்கு மேல் பணியாற்றியிருந்தனர்.

இரண்டு நிறுவனங்களிற்கிடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தின் 4.1 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரமே இலங்கை சுங்க திணைக்களத்திற்கு மேலதிக நேர வேலை கொடுப்பனவுகளை இலங்கை முதலீட்டுச் சபை மீளளிப்பு செய்ததென தலைவர் எனக்கு அறிவித்திருந்தார்.

(உ) பியகம ஏற்றுமதி செயன்முறை வலயத்தில் (பீஈபீசற்) அமைந்துள்ள இல 26பீ மற்றும் 26பீ/1/பீ தொகுதியிலிருந்து வியாபார நடவடிக்கைகளை அமைத்து மேம்படுத்துவதற்காக 2005 திசெம்பர் 22 இல் இரண்டு கல்விகள் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கை செய்துகொண்டிருந்தன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னர் இன்னொரு கம்பனியால் குடியிருக்கப்பட்டதும் அந்த நேரத்தில் எதுவித காரணமுமின்றி நீக்கப்பட்டதுமான புளொக் „ஏ“ யிலுள்ள 43 மற்றும் 43 ஏ இலக்கங்களுடைய தொகுதியிலுள்ள காணி மற்றும் வளவில் தமது செயற்திட்டங்களை மீளமைக்கும் படி மேற்படி இரண்டு கம்பனிகளிற்கும் இலங்கை முதலீட்டுச் சபை அறிவித்திருந்தது.

(ii) பின்னர் இலங்கை முதலீட்டுச் சபையானது மூடப்பட்ட கம்பனியால் கோரிக்கை செய்யப்பட்டவாறு வளவில் நிருமாணிக்கப்பட்ட கட்டிடத்தின் பெறுமதிக்கான நட்டஈடாக ரூபா 59 மில்லியனை செலுத்தும்படி மேற்படி இரண்டு கம்பனிக்கும் அறிவித்திருந்தது.

(iii) இறுதியாக இரண்டில் ஒரு கம்பனி மத்தியஸ்தத்திற்கு முன்னரே முடிவுறுத்தப்பட்டதுடன் அதனால் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை முடிவுறுத்தப்பட்டதன் காரணத்தால் ஏற்பட்ட நட்டங்களிற்காக 2011 ஆம் ஆண்டில் ரூபா 32,719,097 ஆன நட்டஈட்டை இலங்கை முதலீட்டுச் சபை செலுத்த வேண்டி ஏற்பட்டது.

(iv) மேலும், இலங்கை முதலீட்டுச் சபை இரண்டாவது கம்பனிக்கு மீளாய்வாண்டில் அவர்களுக்கு ஏற்பட்ட நட்டங்களிற்காக நட்டஈடாக ரூபா 7,178,111 தொகையைச் செலுத்துவதற்கு தீர்மானித்தது.

(ஊ) ஹொரணை ஏற்றுமதி செயன்முறை வலையத்தில் பிரேரிக்கப்பட்ட பதனிடப்பட்ட தொழிற்சாலை கழிவு நீர் இறைக்கும் பொறியை நிருமாணிப்பதற்கு 2010 சனவரி 12 இல் ஹொறணை பிரதேச சபைக்கு ரூபா 1,301,584 ஆன முற்பணத்தை இலங்கை முதலீட்டுச் சபை செலுத்தியிருந்தது ஆனால் கந்தானையில் களுகங்கை ஆற்றுப்பாய்ச்சலில் பதனிடப்பட்ட தொழிற்சாலை கழிவுகள் கலப்பதாக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதனால் செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டது. எனினும், இந்த முற்பணம் இலங்கை முதலீட்டுச் சபையால் 2013 யூன் வரை அறவிடப்பட்டிருக்காததுடன் இந்தத் தொகை 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைபெறும் வேலைகளாகக் காட்டியிருந்தது.

(எ) இலங்கை முதலீட்டுச் சபையானது 2000 திசெம்பர் 29 இல் இருந்த வீதங்கள் ஆண்டுக்கு 6.9 சதவீதத்திற்கு மேல் அதிகரித்தால் மின்சார விலைப்பட்டியலை மீளளிப்பதற்கு – ஏற்றுமதி செயன்முறை வலயத்தில் அமந்துள்ள ஒரு றப்பர் உற்பத்திக் கம்பனியுடன் உடன்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

14

(i) கம்பனியானது 2002 யூன் தொடக்கம் 2007 செப்தெம்பர் வரையான காலத்தில் மின்சார விலைப்பட்டியல் வீதம் அதிகரித்தமை தொடர்பாக ரூபா 356,793,568 தொகையும் இழப்பீட்டுக் கொடுப்பனவிலான தாமதத்திற்கான வட்டி மற்றும் சர்வதேச வர்த்தக சம – சர்வதேச மத்தியஸ்த நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட இறுதித் தீர்மானத்தின் பிரகாரம் கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட மத்தியஸ்த கிரயம் என்பன தொடர்பாக ரூபா 388,161,877 ஆன தொகையையும் கோரிக்கை செய்திருந்தது. மத்தியஸ்த நீதிமன்றம் கம்பனிக்குச் சாதகமாக தீர்ப்பைக் வழங்கியிருந்ததுடன் விடயம் இன்னமும் விசாரனையிலுள்ளது.

(ii) செயற்திட்டத்திற்கான அங்கீகாரத்தை வழங்குவதற்கு முன்னர் இந்தப் பிரதேசத்தில் பாவனைக்கு தேவையான இறப்பர் மரங்கள் உள்ளனவா என்பதற்காக இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் மற்றும் இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம் என்பவற்றிடமிருந்து இலங்கை முதலீட்டுச் சபை மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றிருக்கவில்லை.

(iii) நீதிமன்ற வழக்கின் முடிவிற்கு காத்திருப்பதன் காரணமாக இலங்கை முதலீட்டுச் சபையானது இந்த கம்பனியிடமிருந்து இலங்கை முதலீட்டுச் சபைக்கு கிடைக்க வேண்டிய நில வாடகை, நீர்பட்டியல் மற்றும் பங்களா வாடகை முதலியவற்றை அறவிட இயலாத நிலைமையிலுள்ளது.

(ஏ) 'பேர்த்' தோட்டம் இலங்கை முதலீட்டுச் சபையால் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் ஐந்து (5) ஆண்டுகள் காலத்திற்கு முகாமைத்துவம் செய்வதற்கும் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு அந்தத் தோட்டத்தின் பகுதி கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தோட்டத்திலுள்ள கட்டிடங்கள் பெறுமதிமிக்க மரங்கள் முதலிய சொத்துக்கள் கொள்வனவிற்கு பின்னர் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) எஸ்எல்எஸ்பீசீ இடமிருந்து 2006 ஆம் ஆண்டிலிருந்து நிறுவனத்தின் கணக்குகள் இலங்கை முதலீட்டுச் சபைக்கு கிடைத்திருக்கவில்லை

(iii) கூட்டுத்தாபனமானது 2005 ஆம் ஆண்டில் மேற்கொண்ட ரூபா 10 மில்லியன் தொகை தவிர இலங்கை முதலீட்டுச் சபைக்கு ஒழுங்காக இலாபங்களை அனுப்பியிருக்கவில்லை. 2006 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் படி 'பேர்த்' தோட்டம் சம்பந்தமாக எஸ்எல்எஸ்பீசீ இடமிருந்து கிடைக்க வேண்டிய தொகை ரூபா 16.47 மில்லியனாகும். எனினும், 2011 நவம்பர் 15 மற்றும் 2012

நவம்பர் 14 இல் நடைபெற்ற பொது முயற்சிகளிற்கான கணக்குக் குழுவால் அறிவுறுத்தப்பட்டவாறு கிடைக்க வேண்டிய நியாயமான தொகையை இனங்கண்டு பதிவு செய்ய முடியாத நிலையில் இலங்கை முதலீட்டுச் சபை இருந்தது.

(iv) முகாமைத்துவக் கட்டணத்தைச் 15 வீதத்தால் அதிகரித்தல் "பேர்த்" தோட்த்தின் வருமானத்தை ஒரு தலைப்பட்சமாக பயன்படுத்தியமை பேர்த்தோட்டத்திலிருந்து உருவாக்கப்பட்ட ரூபா 20 மில்லியன் தொகையான வைப்புக்களை முதலீடு செய்தமை ஒப்பந்தக்காரரின் நடைமுறைக் கணக்கினூடாக ரூபா 12.42 மில்லியன் தொகையான மோட்டார் வாகனங்கள் மற்றும் பங்களா வாடகையின் அங்கீகாரமற்ற மாற்றம் என்றவாறான உடன்படிக்கை நிபந்தனைகளிற்கு முரணான "பேர்த்" தோட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களிற்கு தீர்வு காண்பது முன்னேற்றத்திலுள்ளது.

## 4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ) இலங்கை முதலீட்டுச் சபை 2007 திசெம்பர் 31 இல் ரூபா 530 மில்லியன் கிரயத்தில் உலக வர்த்தக மையத்தின் (டபிள்யூரீசீ) மேற்குக் கோபுரத்தில் 04 தொடர்மாடி அலகுகளைக் கொள்வனவு செய்திருந்ததுடன் அதே கோபுரத்தில் மேலும் குத்தகை அடிப்படையில் 2000 செப்தெம்பரிலிருந்து இலங்கை முதலீட்டுச் சபை குடியிருக்கும் 5 அலகுகளை 2008 மார்ச் 05 இல் 625 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரூபா 128 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட தட்டு ஆறு வாடகைக்குக் கொடுப்பதற்காக 2011 யூலை 01 இலிருந்து முற்றாக வெற்றிடமாக்கப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 வரை பயன்பாடின்றியிருந்தது. எனினும் தலைவரின் கருத்துரையின் படி அந்தத் தளப் பரப்பின் ஒரு பகுதி 2013 இல் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் அலுவலக இடமாக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மற்றப்பகுதி இலங்கை முதலீட்டுச் சபையின் முதலீட்டாளர் சேவை திணைக்களத்தை மீள அமைப்பதற்காக பயன்படுத்தப்படும் என்பதாகும்.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு என்ற புதிய அமைச்சு உருவாக்கப்பட்ட பின்னர் அமைச்சு அலுவலகத்தை அமைப்பதற்காக டபிள்யூரீசீ கட்டிடத்தில் அலுவலக இடத்தை பார்க்கும் தேவைப்பாடு இருந்ததுடன் அத்தகைய தட்டு 06 இன் பகுதி இந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், இலங்கை முதலீட்டுச் சபை டபிள்யூரீசீ தட்டு 06 இன் எஞ்சிய தளப் பரப்பில் முதலீட்டாளர் சேவை

16

திணைக்களத்தை மீளமைப்பிற்காக தீர்மானிக்கப்பட்டிருப்பதாக தலைவர் எனக்கு அறிவித்திருந்தார்.

(ii) தட்டு 25 இல் 6,318 ச.அடி தளப்பரப்பு மற்றும் தட்டு 27 இல் 2781 ச.அடி, தளப்பரப்பு என்பன உடன்படிக்கை எதுவும் செய்யாமலும் பயன்பாட்டிற்கான வாடகை எதுவும் தாக்கல் செய்யாமலும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன.

**4.4 மனிதவள முகாமைத்துவம்**

இலங்கை முதலீட்டுச் சபையானது தாக்கமான ஆளணி முகாமைத்துவத்திற்காக நல்லாட்சிக்கான பொது முயற்சிகள் வழிகாட்டிகளில் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிரூபத்தின் 9.3 ஆம் பிரிவின் பிரகாரம் அந்த தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முறையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 73 நிறைவேற்றுப் பதவியினர் (பணிப்பாளர், உள்ளகக் கணக்காய்வாளர் பதவி உட்பட) உள்ளடங்கலாக பதவியினரில் வெவ்வேறு வகைகளில் உள்ள நூற்றுப்பத்து (110) வெற்றிடங்கள் 2012 திசெம்பர் 31 வரையிற் கூட நிரப்பப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறாகும்.

| விபரம் | அனுமதிக்கப்பட்ட ஆளணியின் ஊழியர்களின் எண்ணிக்கை | ஊழியர்களின் உண்மையான எண்ணிக்கை | | | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|
| | | நிரந்தரம் | ஒப்பந்தம் | மொத்தம் | |
| நிறைவேற்றுப் பதிவியினர் | 575 | 497 | 5 | 502 | 73 |
| எழுதுனர் மற்றும் சமமான பதவியினர் | 354 | 330 | 4 | 334 | 20 |
| பொது சேவை பதவியினர் | 321 | 272 | 32 | 304 | 17 |
| மொத்தம் | 1250 | 1099 | 41 | 1140 | 110 |

17

(ஆ) 2011 மார்ச் 23 ஆம் திகதிய இல ஈஎஸ்/12/ஈஎஸ்ரி/188 உள்ளக சுற்றுநிருபத்தின்படி அவர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படலாகாது அல்லது அந்த நோக்கத்திற்காக விடுவிக்கப்படக் கூடிய இன்னொருவரால் அவர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்பட முடியும். என்ற நிபந்தனைக்கிணங்க வயது வருவதற்கு முன்னர் இளைப்பாற விரும்பும் ஊழியர்களிற்காக தன்னார்வ ஓய்வுபெறும் திட்டம் (வீஆர்எஸ்) நடைமுறைப்படுத்தப்பட்டது. எனினும், இலங்கை முதலீட்டுச் சபை மேற்படி சுற்றுநிருப எற்பாடுகளைக் கவனத்திற் கொள்ளாது, நிறைவேற்றுப் பணிப்பாளர் (நிதி) என்ற பிரதான பதவியில் ஈடுபடுத்தப்பட்ட ஒரு அலுவலரை விடுவித்திருந்தது.

4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

இலங்கை முதலீட்டுச் சபை 2006 ஆம் ஆண்டில் ஒரு முதலீட்டு வலையத்தை அமைப்பதற்காக புத்தளம் கெப்பலகந்தையில் அமைந்துள்ள வனபரிபாலன திணைக்களத்திற்கு சொந்தமான 250 ஏக்கர் காணியை சுவீகரிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்திருந்தது. சுற்றாடல் பின் விளைவு மதிப்பீடு நிலக் கீழ் நீர்ப்பரிசோதனை அமைப்புக்கு முன்னரான வடிகாலமைப்பு மற்றும் வரைபடங்கள் பூகோள தொழில்நுட்ப பரிசோதனை, நில அளவைத்திட்டங்கள் தயாரித்தல் போன்ற ஆரம்ப செலவுகளாக ரூபா 11,270,120 ஐ மேற்கொண்டிருந்தது. இலங்கை முதலீட்டுச் சபையானது காணியை சுவீகரிக்கும் செயன்முறையை இடை நிறுத்துவதற்கும் 2012 ஆம் ஆண்டில் மேற்படி ஆரம்ப செலவு தொகையை சபையின் அனுமதியுடன் பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருந்தது என்று அவதானிக்கப்பட்டது.

5. கணக்குப் பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 கூட்டுத் திட்டம்

2009 தொடக்கம் 2013 வரையான காலப்பகுதிக்கான கூட்டுத்திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளில் சில இலக்குகளை எய்துவதில் இலங்கை முதலீட்டுச் சபை தவறியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2009/2010 இல் மட்டக்களப்பு மற்றும் அம்பாறையில் புதிய முதலீட்டு ஊக்குவிப்பு வலையங்களை இனங்கண்டு ஊக்குவிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், இந்தப் பிரதேசத்தில் எதுவித முதலீட்டு ஊக்குவிப்பு வலையங்களையும் நிறுவுவதற்கு 2012 திசெம்பர் 31 வரையிற் நடவடிக்கை எதனையும் ஆரம்பித்திருக்கவில்லை.

(ஆ) 2009/2010 அளவில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிற்கு வெளியே 300 புதிய தொழில் முயற்சிகளை அமைப்பதற்கு இலக்கிடப்பட்டதில் 163

செயற்திட்டங்கள் மாத்திரம் (5 நீடிப்புக்கள் உள்ளடங்கலாக) செயற்பாட்டை ஆரம்பித்திருந்ததுடன் 18 செயற்திட்டங்கள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமுலாக்கலின் கீழ் இருந்தன.

### 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 கணக்காய்வு குழு

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9.12 ஆம் பிரிவின்படி கணக்காய்வுக்கு குழு குறைந்தது மூன்று மாதங்களிற்கொரு முறையாவது ஒழுங்கான அடிப்படையில் கூடியிருக்க வேண்டியிருந்ததுடன் அவற்றின் அவதானிப்புக்கள் அவசிய நடவடிக்கைகளிற்காக அவர்களின் விதப்புரைகளுடன் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், 2012 ஆம் ஆண்டில் ஒரு கணக்காய்வுக் குழுக் கூட்டமே நடைபெற்றிருந்தது.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம் மற்றும் செலவினங்களிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமை, பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு ஆக்கபூர்வமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் பொழுது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட நலிவுகள் நிதியதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கையின் மூலம் இலங்கை முதலீட்டுச் சபை தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்குதல்
(ஆ) செயற்திட்டங்களைக் கண்காணித்தல்
(இ) கடன் சேகரிப்பு
(ஈ) ஆளணி முகாமைத்துவம்
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்

எச். ஏ. எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
S/y

2012.12.31 ஆந் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்காக
இலங்கை முதலீட்டுச் சபை
நிதி வெளிப்பாடுகள் தொடர்பாக 1971 இல. 38 கொண்ட
நிதிச் சட்டத்தின் 14 (2) (இ) வாசகத்துக்கு அமைய
கணக்காய்வாளர் அறிக்கைக்கான பதில்கள்

# இலங்கை முதலீட்டு சபை

இலங்கை முதலீட்டு சபையின் 2012 டிசெம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதி வெளிப்பாடுகள் தொடர்பாக 1971 இலக்கம் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் 14 (2) (சீ) வாசகத்திற்கமைய கணக்காய்வாளரின் அறிக்கை

**2.2.1 இலங்கை கணக்கீட்டுத் தரவுகளுக்கு (இ.க.த) ஒவ்வாமை**

(அ) இ.க.த. 40

2013ஆம் ஆண்டில் தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

(ஆ) இ.க.த. 39

2013ஆம் ஆண்டில் தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்..

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

மேற்கூறப்பட்ட ஒப்பந்தத்தைப் பூர்த்தி செய்து உரிய ஆவணங்கள் கிடைக்கப் பெற்றதன் பின்னர் ஒப்பந்தத்துக்குரிய கணக்குகளுக்கு மாற்றப்பட்டுள்ளன. .

- எஸ்.பீ.கே.எப் கட்டிடம் - பீ ஓ ஐ/ரி எஸ் / எச் ஓ/ 2011/ 11 05.30

  நாளேட்டுக் குறிப்புக்கள் டி.ஓ 84 மூலம்2013 ஏப்ரல் மாதத்தில் உரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறைபாடுகள் தொடர்பான பொறுப்புக் காலம் 2014.04.25 ஆம் திகதி வரை நீடிப்பதற்குரிய கணக்குகளுக்கு மாற்றப்பட்டமை தாமதத்திற்குக் காரணமாகும். இதற்கிடையே “ஏ” மற்றும் “பீ” மாதரிப் படிவம் நிதிப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

- உள்ளக வீதி - கே.ஈ.பீ.இஸட் மற்றும் பீ.ஈ.பீ.இஸட் - பீ.ஓ.ஐ / ரிஎஸ் / கே.ஈ.பி. இஸட் - பீ.ஈ.பீ.இஸட்/11/ 01

  நாளேட்டுக் குறிப்பு பீ.ஓ.20 மூலம் 2013 பெப்ரவரி மாதத்தில் உரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

  சொத்துக்களுக்குரிய கணக்குகளுக்கு மாற்றுவதற்காக குறைபாடுகள் தொடர்பான பொறுப்புக்கள் உரிய கால எல்லையில் பூர்த்தியடைந்திருக்க வேண்டியது உரிய கணக்குகளுக்கு மாற்றுவது தொடர்பில் தாமதத்திற்கு காரணமாக அமைந்துள்ளது. குறைபாடுகள் தொடர்பான பொறுப்புக் கால எல்லையில் 2013.06.19 ஆம் திகதி முடிவடைந்தமையினால் அது தொடர்பாக நிதிப் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டது.

- வெளியேறும் சமிஞ்சைப் பலகை மற்றும் கொண்டு செல்லக்கூடிய தீயணைக்கும் உபகரணங்கள் - பீ.ஓ.ஐ/ ரி. எஸ்/ எச்.ஓ/ 2011/ 22/ 05/ 035

  நாளேட்டுக் குறிப்பு டி.ஒ 83 மூலம் 2013 ஏப்ரல் மாத்திவல் உரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

  ஒப்பந்த்திற்குரிய தேக்கி வைக்கப்பட்ட நிதிக்குரிய கணக்கிற்கு மாற்றுவதற்கு முன்னர் ஒப்பந்ததாரருக்கு விடுவிக்கவேண்டிய ஏற்பட்டுள்ளமை உரிய கணக்குகளுக்க மாற்றுவதற்கான தாமதங்களுக்குக் காரணமாகும். குறைபாடுகள் தொடர்பான பொறுப்புக்கள் 2013.07.23 திகதி முடிவடைந்துள்ளதுடன் உரிய கணக்கிற்கு மாற்றுவதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- மகுருவில வீதி – எச்.ஈ. பீ.இஸட் - இ.மு.ச/ ரி.எஸ்/ எச்.ஈ.பி.இஸட்/ 2011/ 05/01

  இறுதிக் கொடுப்பனவு 2013 ஆகஸ்ட் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டதுடன், அது நாளேட்டுக் குறிப்பு எச் 001 மூலம் 2013 ஆகஸ்ட் மாதத்தில் மாற்றப்பட்டுள்ளது.

  ஒப்பந்தத்திற்குரிய தேக்கிவைக்கப்பட்ட நிதிக்குரிய கணக்குகளுக்கு மாற்றுவதற்கு முன்னர் ஒப்பந்த தாரருக்கு விடுவிக்க முடிந்தமை உரிய கணக்குகளுக்கு மாற்றுவதற்குரிய தாமதத்திற்குக் காரணமாகும். குறைபாடுகள் தொடர்பான பொறுப்புக் காலம் 2013.12.23ஆம் திகதி முடிவடைவதனால் உரிய கணக்குகளுக்கு மாற்றியமைப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ஜிப்சம் பலகை மற்றும் அது சார்ந்த பொருத்துதல்கள்- 2013 மே மாதத்தில் ஜர்னல் குறிப்பு ஈ. 75 மூலம் உரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- குப்பை கூலங்களைத் தேக்கி வைத்தல்/ மின்தூக்கி/ வாய்க்கால் தொகுதிகளின் நிர்மாணிப்பு – டப்ளியு.ஈ.பி.இஸட் - பீ.ஓ.ஐ/ ரி.எஸ்/ டப்.ஈ.பீ.இஸட்/ 2006/ 01 - இறுதிக் கொடுப்பனவு இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை.

  மேற்கூறப்பட்ட ஒப்பந்தத்திற்குரிய பணிகள் 2007. 10. 16 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டதுடன் அதற்குப் பின்னர் அச் செயற்பாட்டு முறைமை அமுல்படுத்தப்பட்டது. ஏற்கனவே இம்முறைமை தொடர்ச்சியாக அமுலில் உள்ளது.

  எதிர்வரும் செயற்பாடுகளில் ஒரு சில வினாக்கள் தொடர்பில் ஒப்பந்ததாரர் மற்றும் இலங்கை முதலீட்டுச் சபைக்கு இடையே கருத்து முரண்பாடுகள் காரணமாக ஒப்பந்ததாரருக்கு செலுத வேண்டியுள்ள இறுதிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. ஒப்பந்ததாரருக்கு மற்றும் முதலீட்டுச் சபைக்கு இடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் தொடர்பில் ஆராய்ததன் பின்னர் இறுதிக் கணக்கு வெளிப்பாடுகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதற்கமைய சொத்துக்களுக்குரிய கணக்குகளுக்கு மாற்றுவதற்காக ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 2.2.3 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு

(அ) வர்த்தகங்கள் மூலம் கிடைக்கவேண்டியவைகள்

i. 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை வருடாந்த கட்டணம் மற்றும் நிலக் கூலியை அறவிட ( 2013.07.31 ஆம் திகதியன்று) பொருட் பதிவேட்டுப் பெறுமதியில் 95% தாண்டியுள்ளதுடன், நீர்க் கட்டணம் மற்றும் கூலி அறவீடு ( 2013.07.31 திகதியன்று) 98% தாண்டியிருந்தது.

நிலக்கூலி மற்றும் வருடாந்த கட்டணம்

| | 2012<br>ரூ.மில் | 2011<br>ரூ.மில் | 2010<br>ரூ.மில் |
|---|---|---|---|
| வருமானம் | **978** | **849** | **826** |
| கடன்படுநர் | **80** | **27** | **29** |
| **2013.07.31** ஆம் திகதியன்று நிலுவை | **45** | | |
| கடனைத் தீர்க்கும் விகிதாசாரம் | **92%** | **97%** | **97%** |

**95.4% ( 2013.07.31** ஆம் திகதியன்று**)**

<u>நீர்க்கட்டணம் மற்றும் கூலி</u>

| | 2012<br>ரூ.மில் | 2011<br>ரூ.மில் | 2010<br>ரூ.மில் |
|---|---|---|---|
| வருமானம் | 947 | **883** | **850** |
| கடன்படுநர் | **138** | **15** | **9** |
| **2013.07.31** ஆம் திகதியன்று நிலுவை | **18** | | |
| கடனைத் தீர்க்கும் விகிதாசாரம் | **85%** | **98%** | **99%** |

**98% ( 2013.07.31** ஆம் திகதியன்று**)**

இலங்கை கணக்கீட்டுத் தரத்தைப் பயன்படுத்துவதன் மூலம் செயற்றிட்டத்தை இரத்துச் செய்யும் செயற்பாடுகளை துரிதப்படுத்தப்படுவதனால் கிடைக்க வேண்டியவைகள் தொடர்பில் இழப்பீடுகளுக்கான ஒதுக்கீடுகள் கடந்த 5 ஆண்டுகளுக்குள் அதாவது 2008ஆம் ஆண்டில் 37% தொடக்கம் 2012 ஆம் ஆண்டில் 70% வரை அதிகரித்த போதிலும் கடனை மீள அறவிடுவது உயரிய மட்டத்தில் காணப்பட்டது.

ii. பாதிப்புக்களுக்கான ஏற்பாடுகளை வழங்குவது தொடர்பில் இலங்கை முதலீட்டு சபை பின்பற்றும் கொள்ளவுக்கமைய இரத்து செய்யப்பட்ட / இடைநிறுத்தப்பட்ட/ கைவிட்ட செயற்றிட்டங்களின் கிடைப்பனவிற்காக 100% ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

iii. வருடாந்த கட்டணங்கள் தொடர்பில் பாதிப்புக்களுக்கான மொத்த ஏற்பாடு ரூபா 210,331,393 நிதியில் ரூபா 157,538,094/51 இரத்துச் செய்யப்பட்ட/ மூடப்பட்ட / இடைநிறுத்தப்பட்ட செயற்றிட்டங்களில் இருந்து கிடைக்க வேண்டியவைகள் தொடர்புபடுவதுடன் ரூபா 41,864,382/68 ஏற்கனவே அமுலிலுள்ள வர்த்தகங்கள் மூலம் கிடைக்க வேண்டிய இரண்டு வருடங்களைவிட மேற்பட்ட காலத்திற்கான வருடாந்த கட்டணம் தொடர்பிலாகும். மேலும் கடனை சேகரிக்கும் செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்காக இலங்கை முதலீட்டு சபையின் தனியான மேற்பார்வைப் பிரிவு தாபிக்கப்பட்டுள்ளதுடன், இதன் முன்னேற்ற மீளாய்விற்காக 6 (C) இற்கான பதிலைப் பார்க்கவும்.

(ஆ) <u>ஏனைய கடன்படுனர்</u>

i. கவனம் செலத்தப்பட்டுள்ளது.

ii. ஆரச நிறுவனங்களில் இருந்து கிடைக்க வேண்டிய நிலுவை

<u>புனர்வாழ்வு மற்றும் தமிழர் விவகார அமைச்சு ரூபா - 2, 099, 895/-</u>

புனர்வாழ்வு மற்றும் தமிழர் விவகார அமைச்சர் கௌரவ சரத் அமுனுகம அவர்களுக்கு தமது அலுகத்தை தாபிப்பதற்காக இலங்கை முதலீட்டுச் சபையினால் இலக்கம் (4), ஸ்ரீமத் பரோன் ஜயதிலக்க மாவத்தை கொழும்பு கொழும்பு 01 கொண்ட இடத்தில் அமைந்துள்ள தமது கட்டிடத்தில் அலுவலக இடவசதி 2013ஆம் ஆண்டில் வழங்கப்பட்டள்ளது. அதற்குப் பின்னர் கௌரவ டக்ளஸ் தேவானந்த இலங்கை அமைச்சுப் பொறுப்பை ஏற்றதுடன், அவரினால் இவ்அலுவலகம் பயன்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆட்சி மாற்றம் காரணமாக கௌரவ டொக்டர்ஜயலத் ஜயவர்தன அவர்கள் அமைச்சராக நியமிக்கப்பட்டதுடன் ஒரு சதுர அடி 30.00 வீதம் மாதாந்த கூலியை அறவிடுவதற்கும் மாதாந்த மின் கட்டணத்தை அமைச்சில் இருந்து

அறவிடுவதற்கும் இலங்கை முதலீட்டு சபையின் பணிப்பாளர் சபை தீர்மாணித்தது. அமைச்சின் கோரிக்கைக்கு இணங்க ரூபா 2,099,895 பெறுமதியான பயன்படுத்தப்பட்ட முதலீட்டுச் சபையின் ஒரு சில மனைப்பொருட்கள் கையளிக்கப்பட்டு இருந்தன.

பின்னர் அமைச்சின் முதலீட்டு சபை அலுவகத்தில் இருந்து விலகியது. ஏனைய இடங்களுக்கு மாற்றும் போது முதலீட்டு சபையினால் தற்காலிகமாக பொறுப்பளிக்கப்பட்டிருந்த பணப் மனைப்பொருட்களையும் அவர்கள் கொண்டு சென்றனர். பயன்படுத்தப்பட்ட மனைப் பொருட்களின் செலவீனத்தை தவிர கால எல்லைக்குரிய கூலி மற்றும் மின் கட்டணத்தை அறவிட முதலீட்டு சபைக்கு முடிந்தது.

மேற்கூறப்பட்ட கால எல்லைக்குள் பல்வேறுபட்ட நிர்வாகத்தின் கீழ் அமைச்சின் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்ற போதிலும் முதலீட்டு சபை உரிய நிதியினை அறிவிடுவதற்காக நிரல் அமைச்சோடு இணைந்து தொடர்ச்சியான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது.

<u>கைத்தொழில் அபிவிருத்தி கொள்கை மற்றும் முதலீட்டு அமைச்சு</u>
<u>இலங்கை முதலீட்டு சபையினால் அறவிட உள்ள நிலுவை ரூபா 710,550</u>

2001 ஆம் ஆண்டில் உட்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டு சபை பணிப்பாளர் நாயகத்தினால் பயன்படுத்தப்பட்ட அலுவலக இடவசதிகள் அதன் மனைப் பொருட்கள் மற்றும் உபகரணங்களுடன் துறைமுக அபிவிருத்தி மற்றும் தென் இலங்கை அபிவிருத்தி (தெ.இ.அ) அமைச்சுக்குப் பொறுப்பளிக்கப்பட்டது. பொறுப்பளிக்கப்பட்ட பொருட்களின் பெறுமதி ரூபா 710,550/- ஆகும். துறைமுக அபிவிருத்தி மற்றும் தென் இல்ஙகை அபிவிருத்தி அமைசசின் இந்நிதி முதலீட்டு சபைக்கு முதலீடு செய்ய இணங்கிய போதிலும் அது தொடர்பில் தொடர்ந்தும் கோரிக்கைகள் காணப்படாமையினால் ரூபா 710,550 /- இதுவரை தீர்க்கப்படவில்லை.

உரிய காலத்திற்குள் பல்வேறுபட்ட நிர்வாகத்தின் கீழ் அமைச்சு பொறுப்பு பல சந்தர்ப்பங்களிலும் மாற்றப்பட்டதுடன் அக்காலப் பகுதியில் உரிய கொடுக்கல் வாங்கல் தொடர்பிலான பணிகளுக்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்காக தற்போது அமைச்யொன்று இல்லை. இது எவ்வாறாக இருப்பினும் இந்நிதியை அறவிடுவதற்காக தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<u>கைத்தொழில் அபிவிருத்திக் கொள்கை மற்றும் ஊக்குவிப்பு அமைச்சு 2ஆவது மாடி ரூபா 2,411,822</u>

ஜனாதிபதி செயலாளர் 2004 நவம்பர் 19ஆம் திகதி கோரிக்கைக்கமைய உலக வர்த்தக மையத்தின் மேற்கு கோபுரத்தின் 27ஆவது மாடி உயர் தொழில்நுட்பம் மற்றும் தேசிய வர்த்தக அபிவிருத்தி வட. கிழ. தொழி. மு. அபிவிருத்தி அமைச்சிற்காக விடுவிக்கப்பட்டது. இதற்கமைய சபை அங்கீகாரத்துடன் இம்மாடி உயர்தொழில்நுட்ப தேசிய வர்த்தக அமைச்சுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் மாதாந்த கூலி முதலீட்டு சபைக்கு கொடுப்பதை உறுதிப்படுத்தும் வகையில் அமைச்சரவைக்கு உடன்படிக்கை செய்யப்பட்டது.

2006ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றங்களுடன் உயர்தொழில்நுட்ப தேசிய தொழில் முயற்சி அமைச்சின் பெயர் மற்றும் அமைச்சுப் பதவி மாற்றி அமைக்கப்பட்டதுடன் அது கைத்தொழில் அபிவிருத்தி முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சாக மாற்றப்பட்டது. வாடகையினைப் பூரணப்படுத்துமாறு கோரிக்கை விடுத்து அனுப்பப்பட்ட கடிதங்களுக்கு கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சினால் வரவேற்புக்கள் கிடைக்கப்பெறவில்லை. இவ்வாறு நீண்டகாலம் தொடக்கம் நிலுவையாகக் காணப்பட்ட முதலீட்டு சபைக்குச் செலுத்துமாறு தற்போதைய பொருளாதார அமைச்சினால் கோரிக்கைகள் அனுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

மேற்கூறப்பட்ட செலுத்த வேண்டிய நிதி இலங்கை முதலீட்டு சபைக்கு முதலீடு செய்ய எடுக்குமாறு அமைச்சினால் பொது திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டது.

<u>மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை - ஹந்தானை காணி</u>

ரூபா 52, 383, 573. 27 உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக முதலீட்டுச் சபைத் தலைவரின் இலக்கம் ஈ.பி/ 9/ எல் ஏ/ ஹந்தானை மற்றும் 2012.07.06 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் 2014. 01. 06 திகதி முடிவடைந்த 18 மாத கால எல்லைக்காக மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையினால் வழங்கப்பட்டுள்ளது.

<u>ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் - சொத்து விற்பனை என்.டப்ளியு.ஆர்.ஓ (ரூ. 629, 440)</u>

குளிரூட்டல், கண்ணாடிச்சேவை, காபட் மற்றும் அலுமியம் வகைப்படுத்தல்களுக்கு உரிய நிலுவை நிதி ரூபா. 890, 960/ 80 ஆகும். இது எவ்வாறாக இருப்பினும் கண்ணாடிச் சேவை, பாகட் ஏற்கனவே அகற்றப்பட்டுள்ளதுடன் ரூபா 261,520/80 மூலம் புத்தகங்களில் ஒப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குளிரூட்டல் மற்றும் அலுமினிய வகைகளை அகற்றும் பணிகள் தொடர்பில் கட்டடத்தின் தற்போதைய உரிமையாளர் (M/S Nation Lanka Finance PLC) உடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 2013 டிசெம்பர் 31ஆம் தீகதிக்கு முன்னர் அது தொடர்பில் இறுதித் தீர்மானம் எட்டப்படும்.

### 2.2.4 சட்டம், ஒழுங்குகள், கோவைகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு ஒவ்வாமை

(அ) <u>உழைக்கும் வரி</u>

இலங்கை முதலீட்டு சபை அதன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் அவ் ஊழியர்களுக்காக 2012 நவம்பர் மாதம் வரை உழைக்கும் போது வரி செலுத்தப்பட்டுள்ளது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் ஆலோசனைக்கமைய உழைக்கும் போது வரிக்காக ஊழியரின் சம்பளத்தில் இருந்து அறவிட வேண்டிய அளவைக் குறைக்க இலங்கை முதலீட்டு சபையினால் 2012 நவம்பர் மாதம் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் எழுந்துள்ள நிலைமைகள் தொடர்பில் கருத்திற் கொண்ட பணிப்பாளர் சபை 2012 நவம்பர் மாதம் தொடக்கம் ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்ட உழைக்கும் போது வரியினை மீழுளிப்புச் செய்வதற்கும் அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காவும் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதற்கமைய உழைக்கும் போது வரி தொடர்பில் 2013.06.04ஆம் திகதிய அமைச்சரவைப் பத்திரம் முதலீடு ஊக்குவிப்பு அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய முதலீட்டு சபையினால் எதிர்வரும் காலங்களில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) <u>பணிப்பாளர் சபை நலன்புரி நிதியம்</u>

நோக்கம் : - சலுகை வட்டி அடிப்படையில் ஐந்து மாதக் கடன் அதன் பணிப்பாளர் சபைக்கு வழங்கும் போது அமைச்சின் நிதிக் கட்டுப்பாடுகளுக்கு அழுத்தங்களை ஏற்படுத்துவதற்குரிய வட்டியின் ஒரு பகுதியை நிதியத்தில் இருந்து தழுவுவதன் மூலம் கட்டுப்படுத்துதல்.

பங்களிப்பு:- நிதிய அங்கத்தவர்களின் பங்களிப்பு நிதி மற்றும் முதலீட்டு சபையின் ஆரம்ப பங்களிப்பு நிதி அடங்கியுள்ளது.

அங்கீகாரம்:- சபையின் அங்கீகாரம் 1994.10.10 ஆம் திகதி கிடைக்கப் பெற்றவுடன் எமது 2012.08.29 திகதிய கடிதத்தின் மூலம் பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் கோரப்பட்டது. கௌரவ அமைச்சரின் அங்கீகாரம் 2013 ஒக்டோபர் மாதம் இறுதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

(இ) <u>சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வுபெறும் யோசனைத் திட்டத்தின் கீழ் நட்டஈட்டு நிதியை கணிப்பீடு செய்தல்.</u>

சுயவிருப்பின் பேரில் ஓய்வு யோசனைத் திட்டத்தின் கீழ் நட்டஈட்டுக் கொடுப்பனவு நிதி கொடுப்பனவு கணக்கீட்டுக் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஊழியர் வகைக்கு அமைய மாற்றப்படுகின்றது.

- தொண்டர் அடிப்படையில் ஓய்வு யோசனைத் திட்டத்தின் இறுதித் திகதியளவில் 55 வயதைவிட குறைந்த ஊழியர்களுக்காக கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்.

தொண்டர் அடிப்படையில் ஓய்வுபெறும் யோசனைத் திட்டத்தின் கீழ். செலுத்தப்பட்ட நட்டஈட்டு நிதியினை கணிப்பீடு செய்யும் போது இணைந்த சமர்ப்பிப்பதற்கு மேலதிகமாக முதலீட்டுச் சபையின் முகாமைத்துவத்தின் அங்கீகாரத்துடன் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு மற்றும் 5 சதவீதம் விசேட கொடுப்பனவை கருத்திற் கொள்ளப்படுவதுடன் அதன் கொடுப்பனவுகள் கூடுதலான காலம் தொடக்கம் செலுத்தப்படுவனால் தற்காலிக நடவடிக்கைகள் இன்றி கொடுப்பனவு இதற்குக் காரணமாக அமைந்துள்ளது. மேலும் முதலீட்டுச் சபையின் பல்வேறுபட்ட உள்ளக கொடுபபனவைப் போன்று ஊழியர் நலன்புரி நிதியம் மற்றும் ஊழியர் பொறுப்பு நிதியில் மற்றும் பணிக்கொடுப்பனவு போன்ற நிலையிற் சபை கொடுப்பனவு தொடர்பிலும் இக்கொடுப்பனவு ஊழியரின் சம்பளத்தில் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்றது.

- சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெறும் யோசனைத் திட்டத்தின் இறுதித் தீர்மானமானது 55 வயது மற்றும் அதனைவிட மேற்பட்ட ஊழியர்களுக்காக கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்.

எதிர்வரும் 05 வருடங்களுள் ஓய்வுபெற்றுள்ள ஊழியர்கள் கீழ் குறிப்பிட்ட கொடுப்பனவுகளில் குறைந்த கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக உரிமை கிடைப்பதாக இலக்கம் பீ.ஈ.டி 10 மற்றும் 2003.05.28 ஆம் திகதிய அரச வர்த்தமானி சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- அவர்கள் சேவையில் ஈடுபட்டிருப்பின் கிடைக்க வேண்டிய கொடுப்பனவுகளில் மொத்தம்.

- சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெறும் யோசனைத் திட்டத்திற்கு அமைய செலுத்த வேண்டிய வட்டி நிதி

தாபனத்தின் கோவையில் பிரசுரிக்கப்பட்ட பகுதியில் 1ஆவது வசனத்தில் குறிப்பிட்ட வரைவிலக்கணத்திற்கு அமைய " உத்தியோகத்தரின் சம்பளக் கொடுப்பனவு" என்ற மீளளிப்பு முறையல்ல என்பதுடன் சம்பளம், கடமைகள் கொடுப்பனவு, தனியார் கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவு எனக் கருதப்படுகின்றது. இதனால் சேவைக்கால சம்பளக் கொடுப்பனவுகளின் மொத்தக் கணிப்பீடு செய்வதற்காக கணக்காய்வில் குறிப்பிடப்பட்டதனால் பீ.ஈ.டி 10 மற்றும் 2003.05.28 ஆம் திகதிய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகள் மீறப்படுவதண்டு.

(ஈ) <u>ஊழியர்களுக்கு சாரதிக் கொடுப்பனவினைச் செலுத்துதல்.</u>

நேக்கம்:- வாகனமொன்றைப் பொறுப்பளிப்பதற்கு உரிமை கிடைக்கும் இருப்பினும் முதலீட்டுச் சபையின் சாரதி அதற்காகப் பயன்படுத்தப்படாத முதலீட்டுச் சபையின் உத்தியோகத்தர்களுக்காக மாதாந்த கொடுப்பனவைச் செலுத்துதல், சபையினால் சாரதி ஒருவரை ஈடுபடுத்துவதற்கு பதிலாக வாகனத்தை பொறுப்பளிக்க உரிமை கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவைச் செலுத்த முதலீட்டுச் சபைக்கு நிதி அடிப்படையில் மற்றும் நிருவாக ரீதியில் பயன்கிடைப்பதனால் இக்கொடுப்பனவு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. சபையினால் சாரதி ஒருவரை ஈடுபடுத்துவது தொடர்பில் செலவினப் பகுப்பாய்வு கீழ்குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைகின்றன.

<u>நிலையான செலவீனம் - மாதாந்தம்</u>

| | |
|---|---|
| அடிப்படைச் சம்பளம் | 12,670.00 |
| வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | 6,600.00 |
| வரவு செலவுக் கொடுப்பனவு (15%) | 1,900.50 |
| விசேட கொடுப்பனவு (5%) | 633.50 |
| சமூகமளிப்புக் கொடுப்பனவு<br>(குறைந்த பட்சம் ரூபா 6,500.00 இன் கீழ் 35%) | 6,500.00 |
| வாகன மானிய உதவி<br>சாதாரணம்( குறைந்தபட்சம் ரூபா480.00 –உயர்ந்த ரூபா.4500.00) | 2,490.00 |
| மேலதிக நேரம் - மாதத்திற்குச் சாதாரணமாக 50 மணத்தியாலங்கள்.<br>(1.5 விகிதாசாரத்திற்குக் கணிப்பீடு செய்வதாயின் | 3,959.37 |
| ஊ.சே. நிதியம் - ஊழியர் பங்களிப்பு | 3,270.60 |
| ஊ.பொது.நிதியம் - ஊழியர் பங்களிப்பு | 654.12 |
| | 38,678.09 |

<u>தளம்பல் செலவீனம்</u>

கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பயன்கள் கிடைக்கின்றன.

| | |
|---|---|
| சீருடை கொடுப்பனவு – வருடாந்தம்<br>(சேட்/ காற்சட்டை/தையல்செலவீனம்/பாதனி மற்றும் மேஸ்) | 11,910.35 |
| வைத்திய செலவீனம் மீளளிப்பு – வருடாந்தம் | 63,500.00 |
| கடன் வசதிகள் | |
| ஒரு மாதத்திற்கான சம்பளக் கடன் | |
| ஐந்து மாத சம்பளக் கடன் | |
| மேலதிக ஐந்து மாத சம்பளக் கடன் | |
| வாகனக் கடன் | |
| சபையினால் வீட்டுக் கடன் மீளளிப்பு | |
| விழாக் காலங்களில் முற்பணம் மற்றும் பரிசில் வவ்வுச்சர் | |
| விழா முற்பணம் | 10,000.00 |
| விசேட முற்பணம் | 10,000.00 |
| பரிசில் வவுச்சர் | 5,000.00 |
| வருடாந்த பிரதி இலாப கொடுப்பனவு | 15,000.00 |
| பயன்படுத்தப்படாத ஓய்வு வைத்திய / வைத்திய விடுமுறைக்கான நிதி<br>விடுமுறை | |
| மரண சடங்கு கொடுப்பனவு | |
| ஆயுள் காப்புறுதி - மரணம் மற்றும் ஊனமுற்றதற்காக<br>7 மைலை விட தூரத்திலுள்ள 6 மணித்தியாலங்களை விட கூடுதலாக பயணிப்பவர்களுக்கான பிரயாணச் செலவு மற்றும் ஏனைய கொடுப்பனவு | 200,000.00 |

அங்கீகாரம் : இதற்காக சபையின் அங்கீகாரம் . 2003 .01.14ஆம் திகதி கிடைக்கப்பெற்றுள்ளது. நிரலமைச்சின் பரிந்துரைகளுடன் இக்கொடுப்பனவு தொடர்பாக 2005.06.01ஆம் திகதி நிருவாகம் தொடர்பான தேசிய சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஊ) அரசினால் வாகனங்களை கொள்வனவு செய்தல் அல்லது இறக்குமதி செய்தல் தொடர்பிலான செலவீனங்கள் நீக்கப்பட்டுள்ள மற்றும் கொள்கை அடிப்படையிலான தீர்மானத்திற்கு அமைய பராமரிப்பு செலவீனத்திற்காக ஒதுக்கிய நிதி குறைக்கப்பட்டுள்ள வேளையில் அரச வாகனங்களின் தேவையை நிவர்த்தி செய்வதற்காக இந்நிறுவத்தினால் கூலி அடிப்படையில் கொள்வனவு முறை கொடுப்பனவு முறை அல்லது செயற்பாட்டு வரி முறை பின்பற்றப்பட்டது. அரசினால் விதிக்கப்பட்ட எல்லைகளுக்கு மாற்ற நடவடிக்கையாக அநேகமான அரச நிறுவனங்களினால் வாகனத்தின் உரிமை மற்றும் பராமரிப்புச் செலவீனம் வாகன விநியோகஸ்தரினால் மேற்கொள்ளப்படும் கூலி அடிப்படையிலான முறையின் கீழ் வாகனம் பெறப்பட்டுள்ளன.

முதலீட்டு சபை முகாமைத்துவத்தினால் 2003ஆம் ஆண்டில் பழைய வாகனப் பிரிவின் பராமரிப்புக்காக செலவான மீண்டெழும் செலவீனம் தொடர்பாக பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இதன் போது அவ்வாறான பொருளாதார ரீதியில் பாதிப்பு கொண்ட வாகனங்கள் காரணமாக வரவு செலவிற்கு கணிசமான சுமை ஏற்படுவதாக இனங்காணப்பட்டது. மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி முகாமையாளரினால் பழைய வாகனங்களை அகற்றுவதற்கும் தேவையான வாகன அளவினை ஐந்தாண்டு கால குத்தகை அடிப்படையின் கீழ் சென்ரல் பிளான்ஸ் கம்பனியிடம் இருந்து கூலி அடிப்படையில் கொள்வனவு செய்யும் முறைக்கு பெற்றுக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

பணிப்பளார் சபையின் 2003.06.02ஆம் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் வாகன முகாமைத்துவ யோசனைத் திட்டம் என்ற பெயரில் சமர்ப்பிக்கப்பட்ட சபையின் விஞ்ஞாபனத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. வாகனமொன்றைப் பெற்றுக் கொள்ள உரிமைபெறும் மற்றும் வரி காலஎல்லை இறுதியில் நிலுவையின் பெறுமதியைத் தீர்த்து அதன் உரிமையினைப் பொறுப்பளிப்பதற்காக உரிமை பெறும் உத்தியோகத்தர் தொடர்பாக அப்படிவத்தில் “எ” பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலீட்டு சபையினால் கூலி அடிப்படையில் கொள்வனவு செய்யும் முறைக்கு வாகனங்களைப் பெற்றுக் கொள்வதற்கு பதிலாக வாகனங்களை வாடகைக்கு/ கூலிக்குப் பெற்றுக் கொள்வதாயின் மாதாந்தக் கூலியாக அநேகமாக இதற்கு அண்மித்த நிதியை செலுத்த வேண்டியுள்ளது.

இது எவ்வாறாக இருப்பினும், கூலி அடிப்படையில் கொள்வனவு செய்யும் முறைக்குரியதாக சகல வாகனங்களினதும் கொடுக்கல் வாங்கல் 2012ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டதுடன், சகல வாகனங்களையும் பொறுப்பளிப்பதற்கான அங்கீகாரம் பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்டது.

உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வூபெறும் சந்தர்ப்பத்தில் அது வரையில் தமக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த வாகனத்தின் உரிமையை ஒப்படைத்தல் என்ற தலைப்புடன் 2001 மார்ச் மாதம் 20ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட சபையின் விஞ்ஞாபனத்தில் இலக்கம் 5/ 90 கொண்ட பொதுநிருவாக பத்திரத்தின் மற்றும் இலக்கம் 22/99 மற்றும் 2000 ஜுன் 05ஆம் திகதி சுற்றறிக்கை மூலம் அதற்கு மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. உத்தியோகத்தரினால் பயன்படுத்திய வாகனங்களின் உரிமையை ஒப்படைப்பதற்குரிய ஆலோசனைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

முதலீட்டு சபையினால் 2003ஆம் ஆண்டில் வாகன முகாமைத்துவ யோசனைத் திட்டம் அமுல்படுத்தாது இருப்பின் பாரிய நிதியினைச் செலவிட்டு பழைய பொருளாதாரப் பயனற்ற வாகனத் தொகுதியினை பராமரிக்க அல்லது மாதாந்தக் கூலியினைச் செலுத்தி வாகனங்களை கூலிக்குப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை முதலீட்டு சபைக்கு ஏற்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட நிலமைகளுக்கு அமைய முதலீட்டு சபையின் வாகன தேவைகளை நிவர்த்தி செய்யும் மாற்று

நடவடிக்கையாக வாகனங்களை கூலி அடிப்படையில் கொள்வனவு செய்யும் முறையைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாடுகள் மேற்கொள்ளதிருப்பின் குறிப்பிடத்தக்களவு நிதியினை சேமிக்க முடியாதிருந்திருக்கும்.

இது எவ்வாறாக இருப்பினும் எதிர்காலத்தில் இலங்கை முதலீட்டு சபை எந்த சந்தர்ப்பத்திலும் வாகன உரிமையினை ஓய்வூபெறும் உத்தியோகத்தர்களுக்கக்கு பெறுப்பேற்காது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 <u>நிதி வெளிப்பாடுகள்</u>

குறிப்பிடப்பட்டுள்ளது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியிலான மீளாய்வு

(அ) உரிய விடயங்கள் குறிப்பிடப்படவில்லை

(ஆ) ஏற்றுமதி செயற்பாட்டு வலையம், ஏற்றுமதி செயற்பாட்டுப் பூங்கா, தொழில் நுட்ப செயற்பாட்டுப் பூங்கா, பிரதேச அலுவலகம், மற்றும் புதிய ஏற்மதி செயற்பாட்டு வலையங்களில் நிதி மீளாய்வு.

I. <u>பிரதான அலுவலகம்</u>

சகல ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்கள் மற்றும் பிரதேச அலுவலகங்களுக்கான சேவைகளை வழங்கும் செலவீன மத்திய நிலையமாக பிரதான அலுவலகம் அமுலிலுள்ளது. இதனால் இலங்கை முதலீட்டு சபையின் மொத்த செயற்பாட்டுச் செலவீனத்தில் 42% பிரதான அலுவலகத்தில் செயற்பாட்டுச் செலவீனத்திற்காக மேற்கொள்ளப்படுகின்றது.

II. <u>மீரிகம ஏற்றுமதி செயற்பாட்டு வலயம் (MEPZ), தோட்ட ஏற்றுமதி செயற்பாட்டு வலயம் (WEPZ), மல்வத்த ஏற்றுமதி செயற்பாட்டுப் பூங்கா (MEPP)</u>

பணியாளர் சபையின் சம்பளம் மற்றும் நலன்புரி செலவீனத்திற்காக கூடுதலாக நிருவாக செலவீனம் மேற்கொள்ளப்பட்டமையினால் நட்டத்தை அடைய வேண்டி ஏற்பட்டது. ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்கள் சிறிய அளவில் காணப்பட்டமையினால் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பணியாளர் சபை பராமரிப்பு கைத்தொழில்களுக்காக உதவிகளை வழங்கும் வகையில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், வர்த்தக செயற்பாடுகளுக்கான காணியின் அளவு மற்றும் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்திற்கு இணைவாக குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. எவ்வாறாக இருப்பினும், தொழில்உருவாக்கும் ஏற்றுமதி வருமானம், அன்னிய நாட்டுச் செலாவணியைக் கருத்திற் கொள்ளும் போது இவ் ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்களில் பொருளாதாரப் பயன்கள் நிதி மீளாய்வினை உள்ளடக்கவில்லை என குறிப்பிடப்பட வேண்டும். இலாபத்தை ஈட்டும் நோக்கும் ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்கள் ஸ்தாபிக்கப்படாதிருந்த போதிலும், அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விரிவான தேசிய மற்றும் பொருளாதார நோக்கங்களை எட்டுவதற்கான எதிர்பார்ப்புடன் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இது எவ்வாறாக இருப்பினும், வத்துபிட்டிவெல, மீரிகம, மல்வத்த ஆகிய ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்களின் பொறுப்பாளர்கள் எஞ்சியுள்ள காணியில் மேலதிக வருமானத்தை உழைக்கும் நோக்குடன் தமது முதலீட்டின் மீதான தேய்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

<u>கொக்கல ஏற்றுமதி செயற்பாட்டு வலயம்</u>

புதிய முதலீடுகளுக்காக தேய்மானங்களை மேற்கொள்வதற்கு கூடுதலான காணிகள் காணப்பட்டன. ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளவாறு யோசனைகள் மற்றும் விசேட கைத்தொழில் துறையுடன்

மேற்கொள்ளும் துரித அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் வருமான அதிகரிப்பு எதிர்காலத்தில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3.3 <u>செயற்பாட்டு மூலதன முகாமைத்துவம்</u>

(அ) மற்றும் (ஆ)

குறிப்பிடப்பட்டுள்ளது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

4.1. <u>முதலீட்டு சபையின் செயற்றிட்டங்களின் முன்னேற்றங்கள்.</u>

(அ) முதலீட்டு சபை முகாமைத்துவ தகவல் முறைமைக்கு (MIS) இற்கு அமைய 2002 – 2012 கால எல்லைக்குள் 2555 உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. (தற்போது சமகாலபடுத்தப்பட்டதற்கு அமைய 2563) இதன் மூலம் 1233 செயற்றிட்டங்கள் மேற்குறிப்பிட்ட காலஎல்லைக்குள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இது எவ்வாறாக இருப்பின் 2002ஆம் ஆண்டுக்கு (அதாவது 1978ஆம் ஆண்டு தொடக்கம் ) ஒப்பந்தம் கைச்சாத்திட்டு வர்த்தக செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டங்களும் இவ் 1233 செயற்றிட்டங்களில் உள்ளடங்குகின்றன. இதனால் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட செயற்றிட்டங்களில் 48% ரத்து செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டு அல்லது இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கணக்காய்வாளரின் வெளிப்பாடு உண்மைக்குப் புறம்பானது என்பதுடன், இணக்கம் எட்டப்பட்ட செயற்றிட்டங்களுடன் ஒப்பீடு செய்யும் போது அறிக்கையில் குறிப்பிடப்பட்ட 5 சதவீத விளக்கமான செயற் சாதனைச் சுட்டியாக ஏற்றுக் கொள்ளமுடியாது.

❖ ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட 2563 செயற்றிட்டங்களில் 2002 – 2012 கால எல்லைக்குள் 373 செயற்றிட்டங்கள மாத்திரம் ரத்து செய்யப்பட்டு பூர்த்தி செய்து அல்லது இடைநிறுத்தப்பட்டுள்ளன.

❖ இதற்கமைய ரத்து செய்யப்பட்ட, பூர்த்தி செய்யட்ட அல்லது இடைநிறுத்தப்பட்ட செயற்றிட்டங்களின் விகிதாசாரம் 48% அன்று 14.6% ஆகும். (இது எவ்வாறாக இருப்பினும் 373* 100/2578 )

செயற்றிட்டங்களை இரத்து செய்தல் முடிவுறுத்தல் அல்லது இடைநிறுத்தப்பட்டதல் ஆகிய விடயங்கள் தொடர்பில் 146% என்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய பெறுமதியாகும்.

(ஆ) அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 2012ஆம் ஆண்டுக்காக உள்நாட்டு விற்பனை முதலீடு உண்மையானது என்பதுடன் 2013 ஏப்ரல் 22ஆம் திகதி கணக்காய்வாளருக்கு அனுப்பப்பட்ட எமது கடிதத்திற்கு அமைய 608 அமெரிக்க மில்லியன் டொலராக திருத்தியமைக்கப்பட வேண்டும். 2011ஆம்ஆண்டுக்கு இணைவாக (426) உள்நாட்டு விற்பனை எட்டப்பட்ட முதலீட்டில் 43% அதிகரிப்பு காண்பிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய அறிக்கை திருத்தியமைக்கப்பட வேண்டும்.

4.2. <u>முகாமைத்துவ வினைத்திறன் இன்மை</u>

(அ) ரூபா 1,303,020 வைப்பு கைத்தொழில் அபிவிருத்தி முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சினால் 2413 சதுர அடி நிலத்தின் அளவுக்குரியதாகும்.

இதற்கு மேலதிகமாக முதலீட்டு சபையின் ஆராய்ச்சிப் பிரிவும் (3,609 சதுர அடி), உட்கட்டமைப்பு வசதி முதலீட்டுப் பணியகம் உம் L – 12 இன் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், தொடராக ரூபா 649,620 மற்றும் ரூபா 684,600 வைப்பாகச் செலுத்தப்பட்டுள்ளது.

உலக வர்த்தக மத்திய நிலையத்தின் மேற்குக் கோபுரத்தின் 12ஆவது மாடியில் கௌர முதலீட்டு அபிவிருத்தி அமைச்சரின் (மறைந்த மனோ விஜயரத்ன அவர்களின்) அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சிக்காக முதலீட்டு சபை Overseas Realty Ceylon கம்பனி (உலக வர்த்தக மத்திய நிலைக் கட்டத்தொகுதியின் முகாமைத்துவ பிரதிநிதி) உடன் ஒத்தகை உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது. 2010ஆம் ஆண்டில் ஏப்ரல் மாத்தில் மேற்கொள்ளப்பட்டஅமைச்சரவை சீர்திருத்தத்திற்கு அமைய அமைச்சரின் அலுவலகம் திடீரென 12ஆம் மாடியில் இருந்து அகற்றப்பட்டது இதனால் குத்தகை உடன்படிக்கைக்கு அமைய Overseas Realty Ceylon ரூபா .1, 303,020 பிணை வைப்பினை தேக்கி வைக்கப்பட்டது. இவ்அகற்றப்பட்டமை தொடர்பில் அவர்களுக்கு முன்கூட்டியே அறிவிக்கப்படாமையினால் ஆகும்.

(ஆ) உத்தியோகத்தர்களின் சுயவிருப்பத்திற்கு அமைய ஓய்வூபெறும் காலத்தினை நீடிக்கும் போது முதலீட்டு சபையினால் பின்பற்றப்பட்ட செயற்பாடாக அமைந்தது பணிப்பாளர் சபையின் விருப்பத்திற்கு இணங்க உத்தியோகத்தரின் செயற்சாதனை மற்றும் முன்கூட்டியபெ சயற்பாடுகள் திருப்திகரமாக அமைவதாயின் 57 ஆண்டுகள் தொடக்கம் 60 ஆண்டுகள் வரையிலான சேவை நீடிப்புக்கள் வழங்கப்பட்டமையாகும். 10.12.2008 தொடக்கம் முன்னால் சிரேஷ்ட முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு) 57 வயது பூர்த்தி செய்யப்பட்டள்ளது. பணிப்பாளர் சபை அவருக்கு ஒரு வருட கால சேவை நீடிப்பினை 10.12.2008 அமுலுக்கு வரும் வகையில் வழங்கியது.

10.09.2009 திகதியிலான கடிதத்தின் மூலம் அவருக்கு இரண்டாவது தடவையாக 10.12.2009 தொடக்கம் 09.12.2010 வரை சேவை நீடிப்புக்கு கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் ஒரு சில குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அவருக்கு எதிராக முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டது. இது தொடர்பில் பரிசோதனை நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட விசாரணை உத்தியோகத்தர் தமது அறிக்கையில் குறிப்பிட்டது முன்னாள் சிரேஷ்ட முகாமையாளர் குற்றவாளி என்ற அடிப்படையிலாகும். இவ்வறிக்கை 11.12.2009 திகதி நடத்த இருந்த கூட்டத்தில் பணிப்பாளர் சபைக்கு சமர்பபிக்கப்பட இருந்ததுடன் மேலதிகமாக இச்சம்பவம் தொடர்பில் கலந்துரையாடி தீர்மானம் எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. 10.12.2009 தொடக்ககம் அமுலுக்கு வரும் வகையில் ஒரு மாத கால சேவை நீடிப்பு அவருக்கு வழங்கப்பட்டது. 08.01.2010 இடம்பெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் விசாரணை அறிக்கை மீளாய்வுக்குஉட்படுத்தி அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் முன்னால் சிரேஷ்ட முகாமையாளருக்கு (உள்ளக கணக்காய்வு) சேவை நீடிப்பு வழங்காதிருக்க தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய, முதலீட்டு சபை சேவையில் இருந்து 10.01.2010 தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் அவர் ஓய்வுறுத்தப்பட்டார்.

